# இது காதல் காலமடி!



-நிவேதா ஜெயாநந்தன்.

# அத்தியாயம் - 1

மங்கிய மாலை நேரம்! விடாது வெளுத்துக் கட்டிக் கொண்டிருக்கும் பேய் மழை! நரம்புகளை நிமிண்டிச் செல்லும் குளிர்க் காற்று! மடிக்கணிணியுடன் செருகப் பட்டிருந்த ஹெட் செட்டின் வழியே இதயத்தை ஸ்பரிசித்துக் கொண்டிருக்கும் இளையராஜாவின் இசை! மூளையும்,மனதும் இணைந்து டூயட் பாடிக் கொண்டிருந்த ஏகாந்த வேளை!

ஜன்னலோர மேசை இருக்கையொன்றில் அமர்ந்தபடி தோட்டத்துச் செடிகளின் மீது பார்வையைப் பதித்திருந்தேன் நான்! இலைகளைச் சாலையாக்கி மெல்ல அதன் மீது ஊர்ந்து சென்று படாரெனக் கீழே விழும் மழைத் துளிகளும், காற்றோடு ஆலிங்கனம் செய்து நர்த்தனமாடும் பூக்களும், கூட்டிலிருந்தபடி கீச்,கீச்செனச் சத்தமிட்டு மழையின் ஒலியோடு போட்டிப் போட்டுக் கொண்டிருந்த பறவைகளும் எனது பொன்னான ஓய்வு நேரத்தை அழகாக்கிக் கொண்டிருந்தன.

'It's a perfect time for a coffee! Isn't it?' பார்வை இன்னமும் மழையின் மீது பதிந்திருக்க.. இதழ்களில் தேங்கி விட்டப் புன்னகையுடன், காதில் ஒலித்துக் கொண்டிருந்த பாடலை முணுமுணுத்தபடி காஃபி கப்பைக் கையில் எடுத்துக் கொண்டேன். 'DRINK,REFILL,REPEAT' - என் காஃபி கப்பில் எழுதப்பட்டிருந்த வசனம்!

நாவில் தொடங்கி தொண்டையைக் கடந்து உணவுக் குழாய் வழியே இறங்கும் காஃபியின் கசப்பை நான் இமை மூடி அனுபவித்துக் கொண்டிருந்த தருணம் என் ரசனையைக் களைத்தபடி 'டௌய்ங்ங்ங்..' என்ற சத்தத்துடன் வந்து விழுந்தது ஒரு ஃபேஸ்புக் மெசேஜ்!

கோப்பையைக் கீழே வைத்து விட்டு, கணிணியின் புறம் திரும்பினேன்!

'மங்காத்தா டாஆஆஆ!!' - நான் மற்றும் என் அராத்து நண்பிகள் இருவர் அடங்கிய குரூப்பின் பெயர் இது! 'தல' ரசிகைகள் நாங்கள்! அதில் வந்த மெசேஜைத் தான் நான் இப்போது படித்துக் கொண்டிருக்கிறேன்.

"கேர்ள்ஸ், செக் திஸ் லிங்க்." - என்றபடி என் தோழி யூடியூப் வீடியோ லிங்க் ஒன்றை அனுப்பியிருந்தாள். "ஹ்ம்ம் ஓகே!, பார்க்கிறேன்" என்று பதில் அனுப்பி விட்டு லிங்க்கை க்ளிக்கினேன்!

அது ஒரு கேஃபே போலும்! பேக் க்ரவுண்ட் முழுதும் காஃபி,பீட்சா,பர்கர் என கொறிக்கும் சமாச்சாரங்கள் சம்பந்தப்பட்ட போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தது.

மேற்கூரையில் ஆங்காங்கு தொங்க விடப்பட்டிருந்த இதய வடிவ பலூன்கள், சிகப்பு ரோஜாக் கொத்துகள், கலர் பேப்பர்கள், ஜிகினாக்கள் அனைத்தும் விட்டு விட்டு எரிந்து கொண்டிருந்த மஞ்சள் நிற விளக்கு வெளிச்சத்தில் பளபளத்தது! சுவரின் நடுவே கோல்டன் நிறத்தில் 'ஹாப்பி வேலண்டைன்ஸ் டே' என்று எழுதப்பட்டிருந்தது.

திடீரென விளக்கொளி பளிச்சிட்டு கண்களைச் கூசச் செய்ய.. அருகேயிருந்த மேடை மீது லேசாகச் சாய்ந்தபடி உயரமான சுழல் நாற்காலி ஒன்றில், கையில் கிட்டாருடன் அமர்ந்திருந்த ஒருவன், பட்டென நிமிர்ந்து கேமராவை நோக்கிச் சிரித்தான்! அதுவரை நிழலாகத் தெரிந்து கொண்டிருந்த உருவமது!

ஒரு காலைக் கீழேயும், மறு காலை நாற்காலியில் வைத்தும் அமர்ந்திருந்தவனது கிட்டார் கைகளும்,அகலமான தோள்களும் வனப்புடன் காட்சியளித்தது!

கருமைக்கு ஒரு இஞ்ச் கீழிருந்த மாநிறம் அவனது! காம்ப்ளான் பாய் போலும்! அத்தனை உயர நாற்காலியில் கூடத் தன் அனகொண்டா கால்களால் தரையைத் தொட்டிருந்தான்! க்ரீம் நிற பேண்ட்டின் மேல் டக் இன் செய்யப்பட்ட கருப்பு நிற சட்டை. ஃபுல் ஃபார்மல்ஸ்! பெரியக் கருமணிகள்,ஏர் நெற்றி! முடியை வேறு மேலும் ஏற்றிச் சீவியிருந்தான்! முகத்தை மைதானமாக்கிக் கருப்புப் புற்களாய் படர்ந்து கிடந்த சீரான தாடி! அடர் மீசைக்குக் கீழே பற்கள் தெரியாத கீற்றுப் புன்னகை! அதில் அத்தனை சாந்தம்! ஆள் அப்பாவி போலும்!

திடீரெனக் கைத்தட்டல்கள் ஒலிக்க.. அவன் கிட்டாரை இயக்கினான்.

"இமை விரல்களில் காற்றாய்.. கை வீசு...

மலர்ப் படுக்கையில் மோனம் நீ பேசு... காதலே!!

தனிமையில் ஒரு காதல் தாழ் போட்டு..

இடைவெளியினில் என்னை நீ பூட்டு... காதலே..!!

தீண்டும் தினம் தென்றல் மணம்... கூந்தல் இழை.. வெந்நீர் மழை..!! - கிட்டாரை மீட்டியவனின் விரல்கள் வளைந்திருந்த விதமும், வரிகளின் அர்த்தத்தை உள்வாங்கிக் கொண்டு அதற்கேற்றபடி லேசாகச் சிரித்து விழிகளை மூடித் திறந்த அழகும், 'காதலே...'-எனும் போது அகன்று,விரிந்த தோள்களும், கொஞ்சம்,கொஞ்சமாக என்னை வீடியோவுக்குள்ளே இழுத்துச் சென்று.. அவனருகே அமர்ந்து கன்னத்தில் கை வைத்தபடி ஆ-வென நோக்கச் சொன்னது.

அத்தோடு விடியோ முடிந்து போக.. பதறிப் போனேன் நான். ஓ!காட்! யார் இந்த ஹேண்ட்சம் சூப்பர் சிங்கர்? என்ன குரல்வளம்! விஜய் டிவி உங்களை இன்னுமா மிஸ்டர் கண்டுபிடிக்கல?, என்ன பாட்டு இது??, ஓஓஓ.. ச.நா இசையில் வெளியான மோகத்திரை.. மூன்றாம் பிறை!! மை ஆல் டைம் ஃபேவரைட்! ஆனால் இந்த ஆள் யாரென்று எப்படிக் கண்டுபிடிப்பது?, பரபரவென என் விழிகள் டெஸ்க்ரிப்ஸனைத் தேட.. என்னை ஏமாற்றாமல், அங்கே அவனது பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஜீவன் ஏகலைவன், டோனட் காஃபே.

இது போதுமே! இதை வைத்து அவன் வரலாற்றையே தெரிந்து கொண்டு விடலாம்! நம்மிடம் தான் அதற்கான தொழில்நுட்பம் இருக்கிறதே! என்ன அது என்கிறீர்களா?, டண்டடைங்!

www.facebook.com

முகப்புத்தகம்! இளசுகளுக்கானத் தனிக் கோள்! பள்ளி மாணவ.மாணவிகளிலிருந்துத் தொடங்கி 60-வயது தாத்தா.பாட்டி வரை அனைவரும் ஒரு களம் காணும் சமூக வலைதளம்! காலை விழித்ததும் வரும் கொட்டாவியிலிருந்துத் தொடங்கி, உறங்கும் முன் இரவில் பருகும் ஹார்லிக்ஸ் பால் வரை அன்றாட வாழ்க்கையின் சாராம்சத்தை ஸ்டேட்டஸாக எழுதி செல்ஃபிக்களைப் போட்டு லைக்ஸ்களையும்.கமெண்ட்டுகளையும் லாரி.லாரியாக அள்ளச் சொல்லும் போதை வஸ்து!

ஆடை.அணிகலனிலிருந்துத் தொடங்கி, சோப்பு.சீப்பு வரை அத்தனை பொருட்களுக்குமான வர்த்தக உலகம்! அரசியல்வாதிகளும்.சாதி அமைப்பினரும், திரைப்பட ரசிகர் மன்றங்களும் தங்களுக்கான பக்கத்தைத் திறந்து வைத்துக் கொண்டு ஆள் சேர்க்கும் சிலந்தி வலை! மொத்தத்தில் காற்று.நீர்.உணவு போன்ற மனிதனின் அடிப்படைத் தேவைகளில் புதிதாக இணைந்து கொண்ட ஆறாவது தேவை!

உன் நண்பன் யாரென்று சொல்.நான் உன்னைப் பற்றிச் சொல்கிறேன் என்பார்கள் கற்கால மனிதர்கள்! இக்காலத்தில் ஒருவருடைய ஃபேஸ்புக் ஐடி கிடைத்தால் போதும்! ஒட்டுமொத்த விவரத்தையும் நொடியில் தோண்டி எடுத்து விடலாம்!

தோசை பிடிக்குமா.இட்லி பிடிக்குமா?, எந்த ரெஸ்ட்டாரெண்ட்டுக்கு அடிக்கடி செல்கிறான்?, எந்தத் தியேட்டரில் படம் பார்க்கிறான்?, தல ரசிகனா?, தளபதி ரசிகனா? இளையராஜா மியூசிக் இஷ்டமா?, இங்க்லீஷ் மியூசிக்கா?, அரசியல் மீம்ஸ்களுக்கு லைக் தட்டுகிறானா?, எந்தப் பக்கங்களை ஃபாலோ செய்கிறான்?, இதை வைத்தே

அவனுடைய குணாதிசயங்களைக் கண்டறிந்து விடலாம்! பெரிய ஜாதக அறிவெதுவும் தேவையில்லை! ராகுவும்,கேதுவும் எந்தத் திசையில் பார்க்கிறார்கள் என்பதை அவனது கடைசி போஸ்ட்டை வைத்தே கணித்து விடலாம்!

சியர்ச் பாக்ஸில் ஜீவன் ஏகலைவன் என்று டைப் செய்து விட்டு, பரபரவென நகம் கடித்தபடி காலில் தாளம் போடத் தொடங்கினேன் நான். 3,4 ஏகலைவன்களுக்கு மத்தியில் வீடியோவில் பார்த்த அதே கா.:பி பேக்ரவுண்டில் பேண்ட் பாக்கெட்டுக்குள் கை நுழைத்தபடி சாந்தமான புன்னகையுடன் ப்ரொ.:பைல் பிக்சரில் தெரிந்தான் அவன்.

'He must be in his early 30's' - அவன் முகத்தைக் கண்டவுடன் என் இதழ்கள் முணுமுணுத்த முதல் வாக்கியம் இது. வெறும் கருப்பு பேக்ரவுண்ட் தான் கவர் :.போட்டோ! ஆள் படு சோம்பேறி போலும். கடனே என்று கவர் :.போட்டோ வைத்திருப்பதைப் போல் தோன்றுகிறது! அடுத்ததாக பயோ-டேட்டாவை நோக்கின என் கண்கள்.

பெயர்: ஜீவன் ஏகலைவன்

தொழில்: டோனட் கா.:பே-யின் முதலாளி மற்றும் டாலண்ட் ஸ்போர்ட்ஸ் அகாடமியின் :.பிட்னெஸ் ட்ரைனர்.

வசிப்பது: சிங்காரச் சென்னை.

படித்தது: பி.இ.மெக்கானிக்கல், அரசு பொறியியல் கல்லூரி,திருநெல்வேலி.

வயது: 4..............2

??????????????வாஆஆஆஆட்ட்ட்ட்???, நாற்பத்தியிரெண்டா?? அங்கிளா இது??, அய்யோ சாரி அங்கிள்! பட்டென மடிக்கணிணியை மூடி வைத்து விட்டு நேரே வெறித்தேன்! மழை நின்று போயிருந்தது. ஆங்காங்கு இலைகளின் மீது ஒட்டிக் கொண்டிருந்த மழைத்துளிகள் மெல்ல,மெல்லக் கீழே விழுந்து உயிர் விட்டுக் கொண்டிருந்தன.

கூல்! கூல்! அடிக்கிறது சைட்டு! இதுல என்ன ஏஜ் லிமிட் வேற?, மனசாட்சி முகத்தில் அறைய மீண்டும் மடிக்கணிணியைத் திறந்தேன்.

அவனை.. இல்லை, அவரைப் பார்த்தால்.. 42 வயதென்று சத்தியமாகச் சொல்ல முடியாது! இமைக்காமல் அந்த 'பேபி' ஸ்மைலை பார்த்துக் கொண்டிருந்த எனக்கு உள்ளே 'மேடி.... மேடி.. ஓ.. ஹோ... மேடி...' என்று ஓடியது!

ஃபிட்னெஸ் ட்ரைனராக இருப்பவன் கட்டுமஸ்தான உடற்கட்டுடன் இருப்பதில் ஆச்சரியமேதுமில்லை. ஆனால்… உடற்பயிற்சி செய்யும் காஃபி ஷாப் ஓனருக்கும், மியூசிக்குக்கும்ம்ம்ம்… கொஞ்சம் முரண்பாடு தான்!

நோ அரசியல்,நோ சினிமா, நோ மீம்ஸ்… ஆள் படு சீரியஸ் பார்ட்டி போலும்! தேவையற்ற ஒரு போஸ்ட் கூட இல்லை! ஆனால்.. ஏகப்பட்ட ஃபாலோயர்ஸ்! எதற்காக?, ஓ! அந்தக் குரல் வளத்துக்காகவும், தோற்றத்துக்காகவும் போலும்!

கொஞ்சமே கொஞ்சம் புகைப்படங்களும், நிறைய வீடியோக்களும் இருந்த அவரது ப்ரொஃபைலைக் கடகடவென ஸ்க்ரால் செய்தேன்! சிற்சில வீடியோக்களின் முன்னே மட்டும், மனம் உருகும் ஸ்டேட்டஸ் மெசேஜ்கள்! என்ன அது?, ஆர்வம் உந்த முதல் வீடியோவை ஓபன் செய்தேன்.

**'தொலைத்து விடக் கூடாதென்றே நினைப்பிலேயே தொலைந்து போய் விடுகிறேன்'** - ஸ்டேட்டஸை வாசித்தபடி வீடியோவைக் க்ளிக்கினேன்.

**வா**கன நெரிசல் மிகுந்த சாலையொன்றின் காலை வேளை. பள்ளி,கல்லூரிப் பேருந்துகள் அணிவகுத்து நின்றதிலிருந்தேத் தெரிகிறது நேரம் ஒன்பதைக் கூட கடக்கவில்லையென்று! "கீன்ன்ன்ங்க். கீங்க்ங்க்ங்க்"-என்று விடாது சத்தமிட்டு காது ஜவ்வைக் கிழித்த ஹார்ன் ஒலிகளை அலட்சியம் செய்தபடித் தன் காரை விட்டிறங்கி அவசரமாக ஓடிக் கொண்டிருந்தான் ஜீவன்.

உச்சந்தலையில் ஈட்டியாய்க் குத்திய வெயில், நொடியில் வியர்வை சுரப்பிகளை முன்நெற்றியில் முளைக்கச் செய்ய.. அதையும் கண்டு கொள்ளாமல் ஓடியவனின் பார்வை, ஜீப்ரா க்ராசிங்கில் கீழே விழுந்து கிடந்த சிறுவன் மீதே பதிந்திருந்தது.

கூடியிருந்தக் கூட்டத்தை விலக்கி முன்னே வந்தவன், சிறுவனைக் கண்டதும் ஒரு நொடி வியந்துப் பின் உடனேத் தன் கைகளில் அள்ளிக் கொண்டான். ஏதேதோ விடாமல் பேசிக் கொண்டிருந்த கூட்டத்தாரைக் கொஞ்சமும் மதியாமல் தன் காரை நோக்கி நடந்தவனை "நில்லுங்க" என்று ஒரு குரல் தடுத்தது.

முகம் முழுக்க பயமும்,கலக்கமும் அப்பிக் கிடக்க.. கண்களில் தேங்கியிருந்தப் பதட்டத்தை மறைக்க முயன்றபடி, சிறுவனின் கைகளை இறுக்கமாகப் பற்றிக் கொண்டு அவனருகே நின்றிருந்த 'அவள்'.. தன் புறம் திரும்பியவனிடம் "ஆ..ஆட்டோ வந்தாச்சு. இதுலயே ஏறிப் போயிடலாம்" என்றாள்.

முறைக்கத் தோன்றினாலும் முயன்று கட்டுப்படுத்திக் கொண்டு அவள் பின்னே சென்று ஆட்டோவில் ஏறினான். அவர்களுடன் மேலும் இரண்டு சமூக அக்கறையாளர்கள் 'நடு ரோட்ல விழுந்த பையனுக்கு என்னாச்சுன்னு தெரிஞ்சுக்கனும்ல சார்?,' என்றபடித் தொற்றிக் கொள்ள.. மிகுந்த எரிச்சலுடன் அருகேயிருந்த மருத்துவமனைக்குப் பயணித்தான்.

"ஆதி.... ஆதி.. கண்ணைத் திறந்து அம்மாவைப் பாரு டா. ஆதி....." - மகனை மடியில் ஏந்திக் கொண்டு விடாமல் மந்திரம் சொல்லிக் கொண்டிருந்தவளை உணர்ச்சியற்ற பார்வையால் நோக்கினான் ஜீவன்.

சிகப்பும்,கருப்பும் கலந்த காட்டன் புடவை அணிந்திருந்தாள். கற்றையான பின்னல்,இடை வரை நீண்டிருந்தது. லேசாக மையிடப்பட்டிருந்த விழிகள், பட்டையாய் வளைந்திருந்த புருவம், கூரான மூக்கு. அழகான இதழ்கள்! 35,36 வயது இருக்கலாம்! இந்த வயதில் குடும்ப பாரத்தைத் தாங்க வேனும்,பெருத்துப் பருமனாக இருக்க வேண்டிய உடம்பு,ஒல்லியாயிருந்தது. அவளை அளவிட்டபடியே வினவினான்.

"என்னாச்சு திடீர்ன்னு?"

அவன் கேட்ட பின்பு தான், அவனொருவன் அங்கிருப்பதையே உணர்பவள் போன்று, நேராக நிமிர்ந்து அமர்ந்து கொண்டாள். கண்களிலிலிருந்த கலக்கம் மறைந்து, ஒரு வகையான தைரியம் குடி கொண்டது.

"ஒரு வாரமா வைரல் ஃபீவர். சரியாயிடுச்சுன்னு டாக்டர் சொன்னதால தான், இன்னிக்கு ஸ்கூலுக்கு கிளப்புனேன். நடந்து வர்ற வழியிலயே திடீர்ன்னு மயங்கி விழுந்துட்டான். காலையில சரியாக் கூட சாப்பிடல. அதனாலயோ என்னவோ!"

பதிலேதும் கூறாமல் குனிந்து குழந்தையை நோக்கினான். அதற்குள் மருத்துவமனை வந்து விட, அவசரமாக ஆதியைத் தூக்கிக் கொண்டு உள்ளே ஓடினான்.

ஆதி எனப்படும் ஆதித்யாவைச் சோதித்த மருத்துவர் அவன் அனீமிக்காக இருப்பதாகவும், அடுத்த ஒரு வாரத்திற்கு காய்கறிகள்,கீரை வகைகளென இரும்புச் சத்து மிகுந்த உணவை அதிகம் எடுத்துக் கொள்ளும் படியும் கூற.. ட்ரிப்ஸ் ஏற்றப்பட்டுக் கண் மூடிப் படுத்திருந்த சிறுவனை நோக்கினர் இருவரும்.

நான்கு அல்லது ஐந்து வயதிருக்கும் அச்சிறுவனுக்கு! இமை வரை மறைத்த சுருள் முடி, நிறத்தில் அவன் அன்னையை ஒத்திருப்பான் போலும்! அரிசி மாவைப் போல

பளீர் வெள்ளை! சாம்பல் நிற ட்ரௌசர்,வெள்ளை சட்டையெனப் பள்ளிச் சீருடையில் வெளுத்த இதழ்களுடன் பாவமாய்க் கிடந்தான்.

உள்ளே பொங்கிய உணர்வில் சட்டென அவனருகே அமர்ந்த ஜீவன் மெல்ல அவன் தலை முடியைக் கோத.. அவன் ஸ்பரிசத்தில் விழி திறந்த சிறுவன், அவனைக் கண்டதும் அழகாய்ச் சிரித்து "ஜீனு..." என்றழைத்தான்.

அவன் அழைத்த விதத்தில் இதழ்களில் புன்னகை அரும்ப "மயங்கி விழற அளவுக்கு நீங்க ரொம்ம்ம்ம்ம்ப வீக் பாய்-ஆ ஜூனியர்?" என்றான்.

"நோ, நோ. ஐ ஆம் அ ஸ்ட்ராங் பாய்"

"பார்த்தா அப்படித் தெரியலயே! ஸ்ட்ராங் பாய்ஸ் எல்லாரும் அம்மா கொடுக்கிற சாப்பாட்டைச் சமத்தா சாப்பிடுவாங்க. ஆனா நீங்க... சாப்பிட மாட்டேன்னு அடம் பிடிக்கிறீங்க?"

"ப்ச், ஐ ஹேட் இட்லி ஜீனு" - முணங்கலாய்ச் சிணுங்கினான்.

"ஒரு வாரமா ஃபீவர்ல இருந்திருக்கீங்க. இப்போ தான் சரியாயிருக்கு. அதுக்குள்ள தோசை கேட்டா எப்படி?, ஆவியில சமைச்ச இட்லி எவ்ளோ ஹெல்தி தெரியுமா?"

"வாட் இஸ் ஆவி ஜீனு??"

"அம்மா இட்லி அவிக்கிறதை பார்த்துருக்கீங்களா?"

"ஹ்ம்ம், பார்த்திருக்கேன். ரௌண்ட்,ரௌண்டா இருக்கிற ப்ளேட்ல, அம்மா இட்லி பாட்டரை ஊத்துவாங்க"

"யெஸ், அதை வேக வைக்கிற பாத்திரத்தில இருந்து புஸ்,புஸ்ன்னு புகை வரும் தெரியுமா?, அது தான் ஆவி"

"போன வாரம் ஆவி-ன்னா என்னன்னு கேட்டதுக்கு, கோஸ்ட்ன்னு சொன்னீங்க?"

"போச்சுடா!!!, நீங்க இப்போ ரொம்ப டயர்டா இருப்பீங்க. இப்போ எதுவும் பேசாம ரெஸ்ட் எடுங்க. நான் உங்களுக்கு அப்புறமா எல்லாஆஆ விளக்கமும் கொடுக்கிறேன். ஓகே?" - என்றதும் "ம்ம்ம்ம்" - எனத் தலையாட்டியவன் அப்போது தான் கையிலிருந்த ட்ரிப்ஸைக் கண்டான்.

கையை உயர்த்தியதும் நரம்பில் சொருகப்பட்டிருந்த ஊசி வலிக்கத் தொடங்க... "ஆஆஆஆ, வலிக்குது" என்றபடி உதறியவனைக் கண்டுப் பதறி அவன் கைகளை

அசையாமல் இறுகப் பற்றியவன் "ஆதி.ஆதி. ரிலேக்ஸ்! கையை ஆட்டாதீங்க. ட்ரிப்ஸ் முடியப் போகுது" என்றான்.

அதுவரை இவர்களிருவரையும் வேடிக்கை பார்த்தபடி நின்றிருந்தவள் அருகே வந்து அவன் கன்னத்தைப் பற்றி "ஆதி.. ஒரு 15மினிட்ஸ் நீ அமைதியா படுத்திருந்தா.. நான் உனக்கு சாக்கோ-பை கொடுப்பேன். அம்மா ஹேண்ட்-பேக்ல தான் இருக்கு. உனக்குத் தெரியும்ல?" என்றதும் முகம் மலர்ந்தவன் "ஓகே!" என்று விட்டு அமைதியாய் படுத்துக் கொண்டான்.

'எப்படி சமாளித்தேன் பார்' - என்பதைப் போல் அவன் மீது ஒரு பார்வையைச் செலுத்தியவளிடம் உதட்டை வளைத்துத் தோளைக் குலுக்கினான் ஜீவன்.

அவன் செய்கையில் கடுப்பாகி "நான் போய் பில் பே பண்ணிட்டு வரேன்." என்று வெளியேறப் பார்த்தவளிடம் "இல்ல, நீங்க ஆதியோட இருங்க. நான் 'பே' பண்றேன்" என்றான்.

அதுவரை அவன் முகத்தை நேராக நோக்காமல், எங்கெங்கோ பார்வையைப் பதித்திருந்தவள் இப்போது அவன் புறம் நன்றாகத் திரும்பி நின்று கைகளைக் கட்டிக் கொண்டு முறைத்தாள்.

"என்ன?" - ஜீவன்

"என் பையனுக்கு செலவழிக்கிற அளவுக்கு நான் நிறையவே சம்பாதிக்கிறேன். உங்களோட பணம் எங்களுக்குத் தேவையில்ல"

-கோபம் கொள்கையில் வர மிளகாயாய் மாறி விடுவாள் போலும்! அதிலும் எண்ணெயில் போட்ட வரமிளகாய்! வெள்ளை முகம் நிறம் மாறி சிகப்பைப் பூசிக் கொள்ள.. விடைத்த மூக்குடன், பல்லைக் கடித்தபடி வார்த்தைகளைக் கக்கினாள்.

அவளுக்குப் பதில் கூறாமல் திரும்பி சிறுவனை நோக்கினான் ஜீவன். கையில் செருகப்பட்டிருந்த ஊசியின் மீதே அவன் பார்வை பதிந்திருக்க, அவனது கவனத்தை ஈர்க்கா வண்ணம், அவளது கையைப் பற்றிக் கொண்டு அறை மூலைக்கு இழுத்துச் சென்றான்.

"பையன் முன்னாடி ஆர்க்யூ பண்ண வேண்டாம்ங்க ரோஹினி."

அவள் பார்வை தன் வலது கையின் மீது பதிந்திருந்த அவனது நீள விரல்களின் மீது பதிந்திருந்தது.

பட்டெனக் கையை விலக்கிக் கொண்டவன் "சாரிங்க.." என்றான்.

"உரிமையா கையைப் பிடிக்கிறதெல்லாம் இதுவே கடைசி முறையா இருக்கட்டும்"

"இனித் தொட மாட்டேன். ஆனா, என்னை 'பே' பண்ண விடுங்க."

"நான் தான் தேவையில்லன்னு சொல்றேனே"

"உங்களுக்குத் தேவையில்லன்னு சொல்லுங்க. ஆதிக்கு என் பணம் தேவையா,இல்லையான்றதுக்கு கோர்ட் ஏற்கனவே பதில் சொல்லிடுச்சு"

மறுத்துத் தலையசைத்தபடித் தொடங்கியவளின் முன்னே கை நீட்டித் தடுத்தவன் "இதுக்கு மேல எதுவும் பேசி ஆதி முன்னாடி சீன் க்ரியேட் பண்ண வேண்டாம்" என்று சட்டமாகப் பதில் சொல்லி விட்டான்.

எதுவும் கூறாமல் வேறு புறம் திரும்பிக் கொண்டவளிடம் தயக்கமாய் ஒரு பார்வையைச் செலுத்தியவன் மேலே எதுவும் கூறாமல் முன்னே நடந்தான்.

அவர்களுடனே வந்த 'சமூக அக்கறையாளர்' ஒருவர் அவனைத் தொடர்ந்து பின்னே வந்து "எங்க சார் போறிங்க?, பையன் கண் முழிச்சுட்டானா?" என்று விசாரித்தார்.

"ம்ம்"

"நீங்க எங்க போறீங்க?"

"பில் கட்டத் தான்"

"நீங்க ஏன் சார் பில் கட்டனும்?, அந்தம்மாவைக் கட்டச் சொல்ல வேண்டியது தானே?, அப்படியே, கூட வந்து ஹெல்ப் பண்ண நமக்கும் ஏதாச்சும் கிடைக்குமான்னு கேட்டுப் பாருங்க சார்"

"ஏதாச்சும்ன்னா??"

"காசு தான், வேற என்ன?"

"இதுக்கு நீங்க தேனாம்பேட்டை சிக்னல்ல பிச்சையே எடுக்கலாமே!, எதுக்கு இந்தப் பொழப்பு?"

"என்ன ஓவரா பேசுறீங்க?"

"அப்படித் தான் டா பேசுவேன். நீயா வெளிய போறியா?, இல்ல உன் மூக்கை உடைக்கவா?"

"ஏய்... என்னாய்யா?, நீ என்ன அவ்ளோ நல்லவனா?, கீழ கிடந்த யாரோ ஒரு பையனை ஹாஸ்பிடலுக்குத் தூக்கிட்டு வந்துட்டு பெருசா சீன் போடுற?"

அதற்குள் இருவரும் காஷ் கௌண்ட்டரை எட்டி விட, தன் டெபிட் கார்டையும் பில்லையும் காஷியரிடம் நீட்டியவன், உதட்டை வளைத்தபடித் தாடியைத் தடவிக் கொண்டே "அவன் யாரோ ஒரு பையன் இல்ல." என்றான்.

"பின்ன?"

கார்டைத் தேய்த்து விட்டு மறுபடி அவனிடமே நீட்டியவரிடம் நன்றி சொல்லி வாங்கியவன், அதைப் பர்ஸில் வைத்தபடியே "என் ரத்தத்தின் ரத்தம். என் சொந்த மகன்" என்றான்.

-'ஊஃப்ஃப்ஃப்ஃப்ஃப்' மூச்சை இழுத்து விட்டபடி ஏமாற்றத்தின் கடைசிப்படியைத் தொட்டிருந்தேன் நான்! ஏன் இந்த 'புஸ்ஸ்ஸ்' உணர்வு?, அவன்.. சாரி! அவர்.. வயதானவர் என்பதாலா?, அல்லது திருமணமானவர் என்பதாலா?, இல்லை, 5 வயதுச் சிறுவனுக்குத் தகப்பன் என்பதாலா?? ஆனாலும், அவரைப் பற்றித் தெரிந்து கொள்ளும் ஆர்வம் காட்டருவி போல.. மூளையிலிருந்து ஆரம்பித்து,விரல் வழியே அடித்துக் கொண்டு முன்னே வர.. என்னையறியாமல்.. அடுத்த ஸ்டேட்டஸின் மீது கண்கள் தாவின. அது கூறியது, இந்த வரிகளை..

"பெண்மையில் பேராண்மை..

ஆண்மையில் ஓர் பெண்மை,

கண்டறியும் நேரமிது..... காதலியே!"

## அத்தியாயம் - 2

டாலண்ட் ஸ்போர்ட்ஸ் அகாடமி, வில்லிவாக்கம்.

காலை, மணி 7.30.

இந்தியாவின் எதிர்கால விளையாட்டு வீரர்கள் பத்துப் பேர் பின் தொடர வியர்வை வழிய மைதானத்தில் ஓடிக் கொண்டிருந்தான் ஜீவன். அனைவருமே பதினெட்டு வயதுக்குட்பட்ட சிறார்கள். இடையிடையே அவர்களை நோக்கித் திரும்பி ஊக்குவிக்கும் வசனங்கள் சிலவற்றை உதிர்த்தபடி சீரான ஓட்டத்திலிருந்தான்.

ஓட்டம் முடிந்து மேலும் சில உடற்பயிற்சிகளையும் முடித்து மாணவர்களுடன் சில நிமிடங்கள் உரையாடி விட்டு எதிரேயிருந்த படிக்கட்டில் வந்தமர்ந்தான்.

அவனுக்கு நான்கடி தள்ளி அமர்ந்து அவனையே தயக்கத்துடன் நோக்கியபடி மடியிலிருந்த பையை இறுகப் பற்றியிருந்தாள் ஒரு சிறுமி. அவனுடைய மாணவி தான்! 8 to 9 பேட்சைச் சேர்ந்தவள்.

கையிலிருந்த பாட்டில் தண்ணீரை வாயில் ஊற்றிக் கொண்டவன் மைதானத்தை வெறித்தபடி ஏதோ யோசனையிலிருந்தான். பின் திடீரென.. வினவினான்.

"என்ன வயசு உனக்கு?" - ஜீவன்

"ப..பதினாறு."

"ஹ்ம்ம்" - உதட்டை வளைத்துப் பற்கள் தெரியாத அவனது ட்ரேட் மார்க் புன்னகையை உதிர்த்தபடி "என் வயசு என்னன்னு தெரியுமா?" என்று வினவினான்.

தெரியாது என்பது போல் தலையாட்டினாள் அவள்.

"40. கிட்டத்தட்ட உன் அப்பா வயசு."

"பொய் சொல்றீங்க. என் அப்பாவுக்கு நிறைய வெள்ளை முடி இருக்கும்"

"நான் வாரத்துக்கு ஒரு முறை 'ஹேர் டை' பண்ணிப்பேன். அதனால தான் கருப்பா இருக்கு."

முகத்தைச் சுருக்கியபடி மடியிலிருந்த பையின்-ஸ்ட்ராப்பைக் கசக்கினாள் அவள்.

"எனக்கு உன்னை மாதிரி ஒரு பொன்னு இருக்கா. உன்னை விட 5 வயசு சின்னவ. உன்னைப் பார்த்தா.. அவ நியாபகம் தான் வருது எனக்கு."

"..........."

"நான் சொல்றது உனக்குப் புரியுதாம்மா?, நான் உனக்கு அப்பா மாதிரி. அப்பாவுக்கு எந்தப் பொன்னாவது லவ் லெட்டர் கொடுப்பாளா? ம்?" - அவன் வினவியதும் அவள் முகம் அவமானத்தால் சிவந்து போனது.

சிறிது நேரம் அமைதியாக இருந்தவன்.. பின்..

"சினிமா நிறைய பார்ப்ப தான?"

"ம்ம், பார்ப்பேன்".

"ரஜினிகாந்த், அதர்வா.. ரெண்டு பேர்ல யார் ரொம்ப அட்ராக்டிவ்வா இருக்கிறதா நினைக்கிற?"

சற்று யோசித்தவள் "அதர்வா" என்றாள்.

"ஏன் ரஜினியைப் பிடிக்காதா?"

"பிடிக்கும். ஆனா அவருக்குத் தான் வயசாயிடுச்சே! அதர்வா இஸ் யங் அண்ட் ஹேண்ட்சம்"

"ஹ்ம்ம், அதே லாஜிக்கை என் விஷயத்துல அப்ளை பண்ணு. நான் என்ன தான் விடாம எக்சர்சைஸ் பண்ணினாலும், இன்னும் 7,8 வருஷத்துல என் பேக்ஸ், பை-செப்ஸ் எல்லாம் காணாம போயிடும். நானே விரும்பாட்டியும்.. என் முகத்துல சுருக்கம் விழும். ஹேர்-டை பண்ணிக்கிட்டாலும் நான் ஒரு தாத்தா-ன்றதை மறைக்க முடியாது. இன்னிக்கு என் வெளித் தோற்றத்தைப் பார்த்து அட்ராக்ட் ஆயிருக்க நீ.. அப்போ.. இவருக்கா லவ் லெட்டர் கொடுத்தோம்ன்னு வயித்தைப் பிடிச்சுக்கிட்டு விழுந்து விழுந்து சிரிப்ப."

சற்று நிமிர்ந்து அவன் முகத்தை நோக்கினாள் அச்சிறுமி. புரிந்து விட்டது போலும்!

"அன்னிக்கு உன் வயசு அதர்வாக்கள் தான் உன் கண்ணுக்கு ஹேண்ட்சம்மா தெரிவாங்க. நான்-லாம் ரஜினிகாந்த் இடத்துக்குப் போயிடுவேன்!"

"சா..சாரி சார்"

"ப்ச், டோண்ட் சே தட்! இந்த வயசுல, எனக்கு மட்டும் இல்ல. யாருக்கு லவ் லெட்டர் கொடுத்தாலும்.. தப்பு தான்! நீ போடுற ட்ரெஸ், கால்ல மாட்டியிருக்கிற ஸ்போர்ட்ஸ் ஷூ,கையில கட்டியிருக்கிற வாட்ச்ன்னு உனக்கான அத்தனையையும் நீயே சுயமா சம்பாதிச்சு வாங்கிக்கிற வயசு வர்ற வரைக்கும், இதெல்லாம் தப்பு தான்! புரியுதா?"

மெல்லத் தலையாட்டினாள் அவள்.

"ஸ்போர்ட்ஸ்மேனுக்கு கான்சென்ட்ரேஷன் ரொம்பவும் முக்கியம். எதுலேயும் கவனத்தைச் சிதற விடக்கூடாது. போ"

தலையாட்டியபடி எழுந்து கொண்டவள் நன்றி கூறி விட்டு மைதானத்தில் இறங்கி ஓடினாள்.

அடுத்த இரண்டு பேட்ச் மாணவர்களின் ட்ரைனிங்கை முடித்து விட்டு ராஜாஜி நகரிலிருந்தத் தன் வீட்டை ஜீவன் அடைந்த போது மணி 10.30. குளித்து விட்டு ப்ரேக்ஃபாஸ்ட்டுடன் டைனிங் டேபிளில் அமர்ந்தவனின் அருகே வந்தாள் அதிதி.

"குட்மார்னிங் டார்லி" - ஜீவன்

"இது தான் ப்ரேக்ஃபாஸ்ட் டைமா ஜீனு?"

"இன்னிக்கு லேட் ஆயிடுச்சு. சாரி. உங்களுக்கு ஸ்கூல் லீவா? சொல்லவேயில்லையே?"

"நான் பங்க் பண்ணிட்டேன்"

"ஏன்?"

"ப்ச், அப்செட்டா இருக்கேன் ஜீனு."

"ஹாஹாஹா, அப்செட்டா இருந்தா லீவ் போட்டுடுவீங்களா?, யார் உங்களுக்கு பர்மிஷன் கொடுத்தா?, சரி. ஏன் அப்செட்?"

கைகளைக் கட்டிக் கொண்டு புருவத்தைச் சுருக்கி, முகத்தைக் கொஞ்சம் தீவிரமாக்கிக் கொண்டாள் அதிதி. ஹாஹா! உருவத்தில் அப்படியே ஜீவனைப் போல் இவள்! ஆனால் செய்கைகள் மட்டும் அன்னையை ஒத்திருக்கும்!

"இது கொஞ்சம் சென்சிடிவ் சப்ஜக்ட் போல ஜீனு. யுவனி கிட்ட இதை நான் கேட்டப்போ, இப்படியெல்லாம் பேசக் கூடாதுன்னு பட்டுன்னு சொல்லிட்டா"

"ம்ஹ்ம்???"

"ம்ம்ம்" என்றவள் தொடர்ந்து "என் கூட படிக்கிற நிதிஷ் இருக்கான்ல?, அவன் என் கிட்ட ஐ லவ் யூன்னு சொன்னான் ஜீனு" என்றாள்.

சாண்ட்விச்சை மென்றபடி மகள் கூறியதைக் கேட்டவனுக்கு சிரிப்பு வந்தது.

"நீங்க பதிலுக்கு என்ன சொன்னீங்க?"

"நான் பதில் சொல்றதுக்கு முன்னாடி, அந்த விவேக் இல்ல, அவன்.. வயசுக்கு வராத இவ கிட்ட ஐ லவ் யூ சொல்லி என்னடா யூஸ்ன்னு கேட்டான். வ..வயசுக்கு வர்றதுன்னா என்ன ஜீனு??" - மிகுந்தத் தயக்கத்துடன் பதில் தெரிந்தே ஆக வேண்டுமென்கிற ஆர்வத்துடன் அவள் கேட்ட கேள்விக்கு.. என்ன சொல்வதென்று ஒரு நிமிடம் யோசித்தான்.

'இப்போ தான் ஒன்னை சமாளிச்சேன், இன்னொன்னா??, இந்த ஜெனரேஷன் பிள்ளைங்களுக்குப் பதில் சொல்லியே நாக்குத் தள்ளிடும் போலயே!' - என்று உள்ளே தோன்றினாலும்.. தகப்பன் என்றதும் நான்கடித் தள்ளி நிற்கும் அந்த காலப் பெண் குழந்தைகளைப் போலல்லாது, இந்த வளர்ச்சி அவனுக்குப் பிடித்திருந்தது!

சாண்ட்விச்சைக் கீழே வைத்து விட்டு மகளை அள்ளி மடியில் அமர்த்திக் கொண்டவன் எதிரேயிருந்த அதிதியின் குழந்தைப் பருவ புகைப்படத்தைக் காட்டினான்.

"நீங்க குட்டிப் பாப்பாவா இருந்தப்போ, கை,கால் எல்லாம் குட்டியாயிருந்தது. இப்போ நீங்க 6-த் ஸ்டாண்டர்ட் படிக்கிற பெரிய பாப்பா ஆயிட்டதும், பாருங்க.. கை,கால் எல்லாம் நீளமாகி வளர்ந்துடுச்சு. இதுவே.. என் வயசு வரும் போது.. இன்னும் நீளமா வளர்ந்துடும். கை,கால் மாதிரி நம்ம உடம்புக்குள்ள இருக்கிற இன்னர் ஆர்கன்ஸூம் வளரும் இல்லையா?, அதைத் தான் வயசுக்கு வர்றதுன்னு சொல்றாங்க. கைண்ட் ஆ.ப் .:பிஸிகல் க்ரோத், உடல் வளர்ச்சி"

"அது.. பொன்னுங்களுக்கு மட்டும் தான் நடக்குமா?"

"ஹ்ம்ம்,ஆமா"

"ஏன் அப்படி?"

"ஏன்னா... அந்த ஆர்கனை ஆண்டவன் பொன்னுங்களுக்கு மட்டும் தான் கொடுத்திருக்கான், சின்ஸ் யூ ஆர் சோ ப்ளெஸ்ட்"

"அப்போ, ஐ லவ் யூக்கும், இந்த ஃபிஸிகல் க்ரோத்துக்கும் என்ன சம்பந்தம் ஜீனு?? விவேக் ஏன் அப்படிச் சொன்னான்?"

டேய்.. எவன் டா நீ! பிஞ்சுலயே பழுத்த ஞானப்பழம்! பெத்து விட்ருக்கானுங்க பாரு! - மனதுக்குள் அந்த விவேக்கை சபித்தவன்..

"இந்த க்வஸ்டினுக்கெல்லாம் ஆன்சர் தெரியனும்னா.. ஃபிஸிகல் க்ரோத்தோட சேர்த்து.. மெண்டல் க்ரோத்தும் ஆகனும் டார்லி. இப்போ நீங்க.. 3 இட்லி சாப்பிடுற அளவுக்குத் தான் வளர்ந்திருக்கீங்க. 5,6 இட்லி சாப்பிட ஆரம்பிக்கும் போது, இதுக்கெல்லாம் பதில் தெரிஞ்சுடும் ஓகே??" - என்று அவன் புன்னகையுடன் பதில் கூறுகையில் அலைபேசி ஒலித்தது.

"ஹலோ.." - ஜீவன்

"நான் ரோஹினி பேசுறேன்"

"சொல்லுங்க"

"இந்த வாரம் சனிக்கிழமை ஆதிக்கு பேரண்ட்ஸ் மீட்டிங் இருக்கு. நீங்க போறீங்களா?, இல்ல, நான் போகட்டுமா?"

"ஏன்?, இரண்டு பேரும் சேர்ந்தே போகலாமே?"

"........." - கோபமாய் மூச்சு விடுகிறாள் போலும்! அவன் காது லேசாய் சூடாகியது.

"இல்ல, இரண்டு பேரையும் சேர்ந்து பார்த்தா.. ஆதி சந்தோசப்படுவான். அதான் சொன்னேன்"

"எனக்கு லீவ் இல்ல"

"ஓகே!, அப்போ நான் மட்டும் போறேன்"

"ஹ்ம்ம், அதிதி ஏன் இன்னிக்கு ஸ்கூலுக்குப் போகல?"

"அப்செட்டா இருக்கிறதா சொன்னா"

"இந்த வயசுல என்ன அப்செட் வேண்டிக் கிடக்கு?, அதுமட்டுமில்லாம, எனக்கு ஃபோன் பண்ணி வயசுக்கு வர்றதுன்னா என்னம்மான்னு கேள்வி கேட்டுட்டு இருக்கா?"

"உங்கக்கிட்டேயுமா?"

"ஏன்?, உங்கக் கிட்டேயும் கேட்டாளா?"

"ஆமாங்க. என்ன பதில் சொல்லட்டும்?"

"ஒன்னுமே சொல்ல வேண்டாம். எதையும் சொல்லி அவளைக் குழப்பிட்டு இருக்காதீங்க"

"சரிங்க"

"மணி 11 தான் ஆகுது. அவளை ஸ்கூலுக்கு அழைச்சிட்டுப் போங்க. ஏன் லேட்டுன்னு மிஸ் கேட்டா.... ட்ரா:பிக்ன்னு பொய் சொல்லுங்க"

"ஜீனு... ஜீனு.. வேண்டாம் ஜீனு.. ப்ளீஸ்.. நான் போகல." - :போனில் நடந்த உரையாடலை ஒட்டுக் கேட்ட அதிதி சைகையிலேயே கெஞ்ச.. 'நான் பார்த்துக் கொள்கிறேன்' என்பது போலத் தலையாட்டியவன்.. "சரிங்க. கூட்டிட்டுப் போறேன்" என்றான்.

"ம்ம்" என்றபடி அவள் :போனைக் கட் செய்து விட.. அலைபேசியை பாக்கெட்டில் போட்டபடி "டார்லி, ஸ்கூலுக்குப் போகாம என்ன பண்றதா ஐடியா?, நாள் பூரா கார்ட்டூனா?" என்று வினவினான்.

"நான் உங்களோட கா:பே வர்றேன் ஜீனு.. ப்ளீஸ்ஸ்ஸ்ஸ்" - கண்களைச் சுருக்கி இரு கைகளையும் குவித்து அழகாய் அவள் கெஞ்சிய விதம், அவள் அன்னையை நினைவூட்ட.. சிரிப்புடன் குனிந்து அவள் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டான் "நீங்க அப்படியே உங்க அம்மா மாதிரி கண்ணம்மா" என்றபடி.

ஆனால் அவள் ஸ்கூலுக்கு பங்க் அடித்து விட்டாள் என்பதை எப்படியோ மோப்பம் பிடித்த ரோஹினி நேராக கா:பே வந்தடைந்தாள்.

காஷ் கௌண்டரில் தந்தையுடன் அமர்ந்து செல்:போனில் கேம் ஆடிக் கொண்டிருந்த அதிதி அன்னையைக் கண்டதும் விதிர்த்துப் போய் "ம்மா.." என்று எழுந்து நிற்க.. "வாங்க.." என்று வரவேற்றான் ஜீவன்.

வழக்கம் போல் வரமிளகாய் முகத்துடன் கைகளைக் கட்டிக் கொண்டு வெறித்தவளைக் கண்டு, பெட்டியில் அகப்பட்டுக் கொண்ட எலிக்குஞ்சுகளாய் இருவரும் செய்வதறியாது விழித்துக் கொண்டு நின்றனர்.

"அதிதி.. ஆதியைக் கூப்பிட்டு உள்ளே போ.." - ஆர்டர் போட்டவளிடம் மெல்லத் தலையசைத்தவள் தம்பியின் கையைப் பற்றியபடியே "ஜீனுவை ரொம்பத் திட்டாத

ரோனி, நான் தான் ஸ்கூல் போ மாட்டேன்னு சொன்னேன்" என்று கூற.. அவள் முகத்திலிருந்த கலக்கத்தைக் கண்டு அருகே சென்ற ஜீவன்..

"முகத்தை ஏன் அப்படி வைச்சிருக்கீங்க?" என்று மூக்கைப் பிடித்து ஆட்டி "அம்மா என்னைத் திட்டுவாங்கன்னு உனக்கு யார் சொன்னா?" என்று வினவினான்.

"என்னையும்,ஆதியையும் திட்டும் போது ரோனி ∴பேஸ் இப்படித் தான் இருக்கும். அதான், உங்களையும் திட்டப் போறாளோன்னு....."

"நினைச்சியா??, அவங்க திட்டுறதுக்கெல்லாம் நான் பயப்பட மாட்டேன் கண்ணம்மா"

"நிஜமாவா??"

"ஆமாம், சொல்லிக் கொடுங்க. அவங்களுக்கு என் மேல இருக்கிற கொஞ்ச,நஞ்ச பயமும் போகட்டும்" - ரோஹினி

"குழந்தைங்க ஏன்-ங்க நம்மளப் பார்த்து பயப்படனும்?"

"செல்லம் கொடுக்கத் தான் நீங்க இருக்கீங்களே!, நானும் கொஞ்சுனா.. தறுதலையாத் தான் வளருவாங்க"

"ஷ்ஷ், பார்த்துப் பேசுங்க ப்ளீஸ், நீங்க உள்ளே போங்க கண்ணே" - என்று அனுப்பி வைத்தவன் ரோஹினியின் புறம் திரும்பினான்.

"என்னங்க பிரச்சனை உங்களுக்கு?, ஒரு நாள் ஸ்கூல் போகாததால என்ன பெருசா ஆயிடப் போகுது?"

"ஒரு நாளா?, வாரத்துல ஒரு நாள் அவ லீவ் போடுறதா மிஸ் கம்ப்ளைண்ட் பண்றாங்க"

"இல்லியேங்க, இந்த மாசம் எல்லா நாளும் ஸ்கூல் போய்ட்டா. அ..அது.. அப்பப்போ காலைல நல்லா தூங்கிட்றா. எழுப்புறதுக் கொஞ்சம் கஷ்டமா இருக்கு. அதான்ன்ன்ன்ன்..."

"இதெல்லாம் ஒரு ரீசனா?"

"பின்ன இல்லையா?"

"உங்களோட பேசுனா.. எனக்குத் தலைவலி தான் மிஞ்சும்" - ஒரு கையால் நெற்றியை அழுத்தியபடிக் குனிந்தவளைக் கண்டுச் சிரித்து "மகேஷ்.. சூடா ஒரு கா..ஃபி.. சர்க்கரை தூக்கலா..."என்று குரல் கொடுத்தான்.

அவன் சிரிப்பும்,செய்கையும் அவளை வெறுப்பேற்ற.. "உங்களால அதிதியை ஒழுங்கா வளர்க்க முடியலன்னா.. தயவு செஞ்சு என் கிட்டக் கொடுத்துடுங்க ஜீவன்." என்றாள்.

அதுவரை இருந்த சிரிப்பு மறைந்து.. தாடை இறுகி.. கைகள் விறைப்புற்று.. அவன் கண்கள் எங்கோ நோக்கிய விதம்.. இந்தப் பேச்சு அவனுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை என்பதை பறைசாற்ற ஒரு நொடி அமைதியாய் நின்றவன்.. நிமிர்ந்து அவளை நோக்கினான்.

"இந்த மாதிரி என்னைக் காயப்படுத்தும் போது உங்க கோபம் கொஞ்சமாச்சும் குறையுதாங்க??"

உள்ளே கனன்று கொண்டிருக்கும் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு நிதானமாய் அவன் கேள்வி கேட்ட விதத்தில் தடுமாறி.. எப்போதும் போல.. அவன் பொறுமையை எண்ணி வியப்புற்று.. தலை குனிந்தபடி.. கூறினாள்.

"சாரி.."

"இதுக்கு நான் என்னங்க பதில் சொல்லட்டும்?"

"ஆதி இன்னிக்கு நைட் உங்களோட இருக்கட்டும். நான் ஒரு காம்படிஷனுக்காக வெளியூர் போறேன்"

"சரிங்க"

"அப்போ நான், குழந்தைங்கக் கிட்ட சொல்லிட்டுக் கிளம்புறேன்" - நகரப் பார்த்தவளிடம்..

"ஒரு நிமிஷம்.. எ..எந்த ஊருக்குப் போறீங்கன்னு நான் கேட்கலாமா?"

"எங்க போறோம்,வர்றோம்ன்றதை ஷேர் பண்ணிக்கிற அளவுக்கு நமக்குள்ள எதுவுமில்லன்னு கோர்ட் சொன்னதை மறந்துட்டீங்களா?"

"கோர்ட்டைக் கேட்டுக்கிட்டாக் குழந்தை பெத்துக்கிட்டோம்?"

"அநாவசியமா பேசாதீங்க"

"அம்மா எங்கன்னு குழந்தைங்க கேட்டா, பதில் சொல்றதுக்குத் தான் கேட்குறேன். ப்ளீஸ்.. சொல்லுங்க"

"பொள்ளாச்சி"

"எத்தனை நாள் கழிச்சு வருவீங்க?"

"நாளைக்கு நைட் ரிடர்ன். ஆதியோட அயர்ன் டானிக் பேக்ல வைச்சிருக்கேன். மார்னிங் ப்ரேக் ஃபாஸ்ட்டுக்கு அப்புறம் கொடுங்க, நைட் பாலோட சேர்த்து டேட்ஸ் கொடுக்க மறந்துடாதீங்க."

அவள் கூறிய அனைத்திற்கும் "சரிங்க.சரிங்க" என்று தலையாட்டியவனைக் கண்டு எரிச்சல் வர.. "என்ன நக்கல் பண்றீங்களா?" என்று கடுகடுத்தாள்.

"இல்லங்க, நீங்க சொல்றதைத் தவறாம செய்றேன்னு சொல்றேன்."

"அதான் பார்த்தேனே! அதிதியை இன்னிக்கு ஸ்கூலுக்கு அனுப்பாம பங்க் பண்ண வைச்சதுலேயே"

"அதைத் தவிர நீங்க சொல்ற எல்லாத்துக்குமே சரின்னு தான தலையாட்டிட்டு இருக்கேன்?" - அவன் பார்வை தீவிரமாவதை உணர்ந்து பதில் கூறாமல் நகர்ந்தவளை மீண்டும் தடுத்தவன்..

"இந்த 5 வருஷத்துல எதுவுமே மாறலையாங்க?" - என்று வினவினான்.

அவன் மீதிருந்தப் பார்வையைத் திருப்பி தூரத்தில் விளையாடிக் கொண்டிருந்தக் குழந்தைகள் மீது பதித்தவள் "என்ன மாறனும்?" என்றாள்.

"என் மேல இருந்த கோபம், என்னைப் பற்றின அபிப்ராயம்"

"........."

"ஆனா, எனக்கு ஒரு விஷயம் அப்பவும்.இப்பவும் மாறவே இல்லங்க."

"????"

"உங்க மேல எனக்கு இருக்கிற காதல்,அக்கறை,பாசம்"

மீண்டும் முன் நெற்றியை அழுந்தப் பற்றியவள் "நான் கிளம்புறேன்" என்றபடிக் குழந்தைகளை நோக்கிச் சென்றாள்.

**ரோ**ஹினி கூறியிருந்தபடி அந்த வாரக் கடைசியில் ஆதியின் பேரண்ட்ஸ் மீட்டிங்கிற்குச் செல்ல.. கே.கே.நகரிலிருந்த ரோஹினியின் வீட்டை வந்தடைந்தான் ஜீவன்.

இருபுறம் சிறிய லானைக் கொண்டத் தனி வீடு அது. வாசலில் பைக்கை நிறுத்தி விட்டு அணிந்திருந்தக் கண்ணாடியைக் கழட்டியபடி அவன் இறங்க முற்படுகையில், வீட்டுக் கதவைப் பூட்டி விட்டு ஆதியுடன் வெளியே வந்தாள் ரோஹினி.

கருப்பு நிறத்தில் பெரிய பெரிய பொம்மை டிசைனுடன் கூடிய முழுநீள காட்டன் கவுன் அணிந்திருந்தாள். நீளக் கூந்தல், பூரான் ஜடையாக (Fish Tail :P) மாறி இடது தோளில் தொங்கிக் கொண்டிருந்தது. கண்களில் பட்டையாய் மை தீட்டியிருந்தாள். சின்னக் கருப்புப் பொட்டு. காதுகளில் சில்வர் நிறத்தில் நீள ஜிமிக்கி! காட் டாமிட்! 40 வயது ஆணால், ஒரு பெண்ணை இந்த அளவிற்கு சைட் அடிக்க முடியுமா?, தெரியவில்லை!

தீவிரமாய்த் தன் முகத்தையே நோக்குபவனின் பார்வையை, 'பழகி விட்டது' என்பது போல் அலட்சியம் செய்தபடிக் கைப் பையைத் திறந்து சாவியை உள்ளே வைத்துக் கொண்டிருந்தாள் அவள்.

ஜீவனைக் கண்டதும் "ஜீனு.." என்றபடி ஓடி வந்த மகனை வாரி இரண்டு முறை மேலே தூக்கிப் போட்டுப் பிடித்துச் சிரிப்புக் காட்டி.. தோளில் நிறுத்தினான் அவன்.

வழக்கம் போல் அவனது செய்கையில் முகம் மலர்ந்து.. "பார்த்து.. மெல்ல.. மெல்ல" என்றவள் "ஏன் பைக்ல வந்திருக்கீங்க?" என்று வினவினாள்.

"போன வாரமே ஆதி பைக்ல போகனும்னு சொல்லிட்டிருந்தான். அதான்"

"சரி. அப்போ நான் கிளம்புறேன். குட்டிக் கண்ணா.. நீ அப்பாவோட பைக்ல டுர்ர்ர் போ, அம்மா ஈவ்னிங் உன்னை பிக்-அப் பண்ணிக்கிறேன்" என்றதும் "ரோனி, என்னோட ஸ்கூலுக்கு வரலையா?" என்றான் அவன்.

"இல்ல ஜூனியர், அம்மாவுக்கு இன்னிக்கு லீவ் இல்லையாம்" -ஜீவன்

"நீயும் வருவேன்னு தான சொன்ன?, நீ வராட்டி, நான் போ மாட்டேன்" - உதடு அழுகையில் பிதுங்க கண்களில் ஊற ஆரம்பித்தக் கண்ணீருடன் ஜீவனின் தோளிலிருந்துக் காலை உதைத்துக் கீழிறங்கினான் ஆதித்யன்.

"கண்ணா, இங்க பாரு, அழக்கூடாது. அம்மா இன்னிக்கு லீவ் போட்டா, என்னோட மிஸ் அம்மாவை அடிப்பாங்க. ப்ளீஸ் டா, ப்ளீஸ்.. இங்க பாரு.. உனக்கு சாக்கோ-பை வேணுமா, பாப்சிகில் வேணுமா?, சொல்லு," - ஏதேதோ சமாதானம் கூறியபடி அவனைத் தேற்ற நினைத்தவளின் முயற்சிகளை ஓரம் கட்டியவன் வாசலில் குப்புறப் படுத்துத் தரையில் தலையை முட்டியபடி பெரிதாய் அழத் தொடங்கினான்.

இவனைச் சமாதானப்படுத்துவதும் இமயமலைப் பனியில் வெறும் காலால் நடப்பதும் ஒன்று தான்! அவன் நினைத்ததைச் சாதிக்கும் வரை அழுகையை நிறுத்த மாட்டான். அதிதிக்கு அப்படியே நேர் எதிர்! சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், அவனது அன்னையைப் போல்! ஒன்றும் பேசாமல் 'நீயே சமாளி' என்று விட்டு ஜீவன் ஒதுங்கி நின்று கொண்டான்.

"சட்டை, சட்டை அழுக்காகப் போகுது ஆதி, எந்திரிக்கிறியா, அம்மா அடிக்கவா?" - கோபத்துடன் ஆதியைத் தூக்கி நிறுத்தியவள் "இப்படித் தான் வேடிக்கை பார்த்துட்டு நிற்பீங்களா?" என்று அவனையும் சாடினாள்.

இப்போது அவன் பெருங்குரலெடுத்து உச்சஸ்தாதியில் கத்த.. "இப்போ அழுகையை நிறுத்தப் போறியா இல்லையாடா?" என்று அதட்டியவள் வாயிலேயே ஒரு போடு போட.. "வேணாம்,வேணாம், அடிக்காதீங்க" என அவள் கையைப் பற்றியவன் மகனைத் தன்புறம் இழுத்துக் கொண்டான்.

"ஜூனியர்க்காகத் தான் இன்னிக்கு நான் பைக்ல வந்தேன், ஃபாஸ்ட்டா,ஜாலியா ஒரு ரைட் போகலாமா??, ம்?, அப்படியே ஐஸ்க்ரீம்? மேங்கோவா சாக்லேட்டா?, என்ன ஃப்ளேவர் வேணும் உங்களுக்கு?" - ஜீவன் கூறியதையும் அசட்டை செய்தவன் அவன் தோளிலிருந்துத் தொங்கி "ரோனினினினினி.." என்றபடி அவளின் கைப்பையைப் பற்றி இழுத்துக் கொண்டிருந்தான்.

"அவன் கேட்க மாட்டாங்க. கிளம்புற நேரத்துல ஏன் பிரச்சனை?, பேசாம, எங்களோட வாங்களேன்."-ஜீவன்

"ப்ச் இருங்க, நான் ஃபோன் பண்ணி பர்மிஷன் சொல்லிட்டு வர்றேன்" என்றவள் கைப்பேசியுடன் நகர்ந்து உரையாடி விட்டு வந்தாள்.

"நானும் வர்றேன் டா. போதுமா?, அழுகையை நிறுத்து"-ரோஹினி

ஆள்காட்டி விரலை வாயில் வைத்தபடி ஜீவனை நோக்கியவன் 'ஈஈஈஈஈ'-யெனச் சிரித்து அவன் சட்டையிலேயே முகத்தைத் துடைத்துக் கொள்ள.. மகனின் செய்கையில் வாய் விட்டுச் சிரித்தபடி முன்னே நடந்தான் ஜீவன்.

"நீங்க 2 பேரும் பைக்ல போங்க. நான் ஆட்டோல வர்றேன்" - ரோஹினி

"என்ன?. இப்போ நீங்க ஆரம்பிக்கிறீங்களா?. ஏற்கனவே லேட்.. பேசாம பைக்ல ஏறுங்க ப்ளீஸ்"

மேலே எதுவும் கூறாமல் பைக்கில் ஏறி அமர்ந்து கொண்டாள். ஆதியை முன்னே அமர்த்திக் கொண்டு பைக்கை ஸ்டார்ட் செய்தவனிடம் "இவனோட ஸ்கூலுக்கு வர்றதா இருந்தா, வேற டிரெஸ் போட்டிருப்பேன் , ப்ச்" என்று புலம்பினாள்.

"இதுவே நல்லா தாங்க இருக்கு.. என்ன.கையைத் தான் கொஞ்சம் எலி தின்னுடுச்சு போல! இ..இல்லங்க.. இது தான் ஃபேஷன்னு புரியுது எனக்கு.. இருந்தாலும்ம்ம்ம்" - தோள்பட்டையை ஒட்டி வட்டமாகத் திறந்து விடப்பட்டு முட்டி வரை நீண்டிருந்த கை டிசைனைக் கேலி செய்தான் அவன்.

அமைதியாய் சாலையை வெறித்துக் கொண்டிருந்தவளை ரியர்வ்யூ மிர்ரரில் நோக்கியவன் "ஏன்?. சனிக்கிழமை கூட வேலைக்குப் போறீங்க" என்று வினவினான்.

ப்ரைவேட் இன்ஸ்டிடியூஷன் ஒன்றில் டிராயிங் டீச்சராகப் பணியாற்றும் ரோஹினி "அடுத்த வாரம் ஸ்டேட் லெவல் டிராயிங் காம்படிஷன் இருக்கு.. அதான் வீக்-எண்ட் கூட பசங்க ப்ராக்டிஸ் பண்ணிட்டிருக்காங்க" என்றாள். அதன் பின்பு சாலையில் கவனம் செலுத்தியவன், ஆதியின் பள்ளியைச் சென்றடைந்தான்.

**ஆ**தித்யனின் வகுப்பு ஆசிரியை முன்பு கலவர முகத்துடன் அமர்ந்திருந்தனர் இருவரும்.

"ரொம்ப சேட்டை சார் உங்க பையன்.. எப்பப் பாரு யாரையாவது அடிக்கிறதையே வேலையா வைச்சிருக்கான்.. க்ளாஸ்ல உட்கார்றதே கிடையாது.. பக்கத்துல இருக்கிறவனையும் பேசியே கெடுக்கிறான்" - செய்தித்தாள் இல்லாமலேயே வாசித்துக் கொண்டு சென்ற ஆசிரியையைக் கண்டு ரோஹினி பல்லைக் கடித்தாள் என்றால், ஜீவன் அசடு வழியச் சிரித்து வைத்தான்.

"சின்னப் பையன் கொஞ்சம் துறுதுறுன்னு இருக்கிறது சகஜம் தான மேடம்?" - ஜீவன்

"இது கொஞ்சமா சார்?"

"அவன் சேட்டை மட்டும் தான் பண்ற மாதிரி, வெறும் கம்ப்ளைண்ட்டா சொல்றீங்க?, ரைம்ஸ்ல இருந்து ஏபிசிடி,1,2,3ன்னு எல்லாம் எவ்ளோ அழகா சொல்றான், எழுதுறான்?, அதையெல்லாம் விட்டுட்டீங்க?" - கோபமாய் ரோஹினி

"நல்லா படிச்சா மட்டும் போதுமாங்க?"

"பின்ன? வேறென்ன வேணும் உங்களுக்கு?"

"ரோஹினி...."-முணுமுணுத்தபடி அவள் கோபத்தைக் கட்டுப்படுத்த முயன்றான் ஜீவன்.

"நீங்க சும்மா இருங்க, எப்போ பாரு இவங்களுக்கு இதே வேலையாப் போச்சு, குவார்ட்டர்லி ஒன்ஸ் பேரண்ட்ஸ் மீட்டிங் வைக்கிறாங்க, வரும் போதெல்லாம் இதை மட்டும் தான் சொல்றாங்க."

"அப்படி இல்ல மேடம்"-பரிதாப முகத்துடன் மிஸ்.

"இருக்கட்டும், அடுத்த வருஷம் என் பையனை வேற ஸ்கூல்ல சேர்த்துக்கிறேன். இந்த உலகத்துல நீங்க மட்டும் தான் ஸ்கூல் நடத்துறீங்களா என்ன?"

"என்ன சார்?,இப்படிப் பேசுறாங்க?"- ஜீவனைத் துணைக்கு அழைத்தாள் அந்த டீச்சர்.

"சாரி மேம், பையனைப் பத்தி சொன்னதும் கொஞ்சம் டென்ஷன் ஆயிட்டாங்க. தப்பா நினைக்காதீங்க. வேற எதுவும் சஜஷன் இருக்கா?"

"இல்ல சார்,இல்லவே இல்ல. இருந்தாலும்,சத்தியமா சொல்ல மாட்டேன்"- ஈஈஈ-யெனப் பல்லைக் காட்டிச் சிரித்து அடுத்த பெற்றோர் புறம் திரும்பி விட்டாள் அந்த டீச்சர்.

முறைத்தபடியே அருகே நடந்து வந்தவளைக் கண்டு சிரிப்பு தாங்கவில்லை ஜீவனுக்கு.

"என்ன சிரிப்பு?"-ரோஹினி.

"அந்த மிஸ் என்ன ஜீவன் ஏகலைவனா??,நீங்க என்னத் திட்டுனாலும் அமைதியா இருக்குறதுக்கு?, ஏன் அந்தக் கிழி கிழிக்கிறீங்க?"

பதில் பேசாமல் முறைத்தாள் அவள்.

"இல்லங்க, கொஞ்சம் பொறுமையா பேசலாம் இல்லையா?"

"ரொம்ப அநாகரீகமா நடந்துக்கிட்டேனோ??" - வலது காதின் கீழ் லேசாய்ச் சொறிந்தபடி மூக்கைச் சுருக்கி அவள் வினவிய விதம், ரசிக்கத் தூண்ட...

"சமயத்துல உங்களுக்கும் ஆதிக்கும் எனக்குப் பெருசா வித்தியாசம் தெரியறதே இல்லங்க" - என்றான்.

"ப்ச்,"-என்று நொடித்தபடிச் சிரிப்புடன் தலை குனிந்தவள், பின் அப்படிச் சிரித்ததற்காகத் தன்னையே நொந்துகொண்டு... முகத்தை உம்மென்றாக்கி விறைப்பாக நிமிர்ந்து "நான் கிளம்பனும்" என்றாள்.

பதில் சொல்லாமல் சரியெனத் தலையாட்டியவன் அவள் மீதானத் தன் ரசனை மிகுந்தப் பார்வையை மாற்றிக் கொள்ளவேயில்லை.

அவனருகே நெருங்கி, அவன் தோளில் தலை சாய்த்து உறங்கி விட்டக் குழந்தையின் தலையைக் கோதியவள் "இவனை எப்படி அழைச்சிட்டுப் போவீங்க?,இப்படித் தூங்குறான்?"என்று வினவினாள்.

இப்போதும் அவன் தன் பார்வையை மாற்றிக் கொள்ளவில்லை. பதில் வரவில்லையென்றதும் அவனை நோக்கியவளையும், அந்தப் பார்வை பாதித்திருக்க வேண்டும்.

அத்தனை அருகில் நிற்பதைக் கூட மறந்து, அந்தப் பார்வையில் கட்டுண்டிருந்தாள். ஒரு நொடிக் கருமணிகளை இடதுபுறம் அசைத்து விட்டு மீண்டும் அவள் மீது நிறுத்தியவன் "ம்க்கும்" என்றான்.

அதில் தன்னை சுதாரித்துக் கொண்டவள், குனிந்து கைப்பையை நோக்கினாள், கைகள் லேசாக நடுங்கிக் கொண்டிருந்ததோ என்னவோ! திடீரென அவன்...

"இந்த வயசுல கூட நான் ரொம்ப ஹேண்ட்சம்மா இருக்கிறதா, என் ஃப்ரண்ட்ஸ் சொல்றாங்க!, பாருங்க,தொந்தி,தொப்பை,ஏன் அநாவசியமா ஒரு சதை கூட கிடையாது எனக்கு!"

"ப்ச்,ஒரு ஃபிட்னெஸ் ட்ரைனர் தொப்பை இல்லாம இருக்கிறதுல என்ன பெருமை?, எதுக்கு இப்போ இந்த பீத்தல்?"

"இல்லங்க, என்னைப் பார்க்கும் போது உங்க பார்வையில ஒரு சின்ன ஆர்வம் கூட இல்லயே! அதான் கேட்டேன்."

"........."

"உங்களுக்கு என் மேல எந்தவிதமான செக்ஸூவல் அட்ராக்ஷனும் வரலீங்களா?"

இதை அவள் நிச்சயம் எதிர்பார்க்கவில்லை போலும்!, கடுப்புடன் நெற்றியைச் சொறிந்தாள். அவன் தொடர்ந்து பேசினான்.

"ஆனா.. எனக்கு உங்களைப் பார்க்கும் போது, நிறைய தோணுதுங்க. எஸ்பெஷலி, இந்த மாதிரி அழகா டிரெஸ் பண்றப்போ!."

"லூசு மாதிரி உளர்றான் பாரு."-பல்லைக் கடித்தபடி முணுமுணுத்தவள் கையை வீசி முன்னே நடக்கத் தொடங்கியிருந்தாள்.

ஓடாத குறையாக அவள் பின்னே சென்றவன் "லேடீஸ்க்குத் தான்ங்க மெனோபாஸோட இந்த மாதிரி பீலிங்க்ஸ் எல்லாம் மறைஞ்சு போயிடும். ஆனா எங்களுக்கு அப்படியில்ல. 40-வயசுல செக்ஸூவல் ஃபீலிங்கை கண்ட்ரோல் பண்ணிக்கிறது பெரிய விஷயமில்ல தான், ஆனா.. நான் ஏன்-ங்க கண்ட்ரோல் பண்ணிக்கனும்?" என்றான். இவன் விட மாட்டான் போலயே!

"சரி. பண்ணிக்காதீங்க. இதுக்கு நான் என்னசெய்யனும்?"

"என் குழந்தைகளோட அம்மா நீங்க. என்ன செய்றதுன்னு என் கிட்ட கேட்குறீங்க?"

"உங்க குழந்தைகளோட அம்மா மட்டும் தான் நான்-ன்னு நீங்களே சொல்லிட்டீங்க!, அப்புறம் என்ன?"

"சரி, என் பொண்டாட்டி நீங்க. ஈகோவை விட்டு நான் ஒத்துக்கிட்டேன்"

"நீ எனக்குத் தேவையில்லன்னு டிவர்ஸ் கொடுத்துட்டு, இப்போ வந்து பொண்டாட்டின்றீங்க?"

"டிவர்ஸ் கேட்டது நீங்க தான். நான் இல்ல"

"நீங்களும் கையெழுத்துப் போட்டீங்க தான?"

"நீங்கக் கேட்டு எந்த விசயத்தையாவது நான் மறுத்திருக்கேனா?"

"ஓ!,அப்படியா?, அப்போ இதையும் கேட்டுக்கோங்க. இனிமே இந்த மாதிரி பேசி என்னை முகம் சுளிக்க வைக்காதீங்க. உங்களுக்கு எப்படியோ தெரியல. எனக்கு ரொம்ப அருவருப்பா இருக்கு" - என்றவள் முகம் கன்ற,வேதனையைத் தேக்கிய விழிகளுடன் தன்னையே நோக்குபவனை முறைத்து விட்டு விடுவிடுவென நடந்து விட்டாள்.

**-ஹ்ம்ம்ம்ம்ம்ம்!, ச்ச, முப்பதோ,நாற்பதோ! யங்க்ஸ்டரோ,அங்கிளோ! இந்தப் ஆம்பளைங்களுக்குப் பிரச்சனையே பொம்பளைங்க தான்! இந்த ரோஹினி சண்டிராணியா இருப்பா போலவே!, இந்த மனுஷன் ஏன் அநியாயத்துக்கு பொறுமைசாலியா இருக்கார்??, வாய் விட்டுப் புலம்பிய எனக்கு, லேசாகப் பசிப்பது போல் தோன்ற.. ஃப்ரிட்ஜிலிருந்த பீட்சாவை அவனில் வைத்து சூடு படுத்திக் கொண்டு வந்து மீண்டும் ஃபேஸ்புக்கைத் திறந்தேன்!**

## அத்தியாயம் - 3

"இப்போ எதுக்குடி கேஃபே-க்கு போகனும்னு அடம் பிடிக்கிற?"-ரோஹினி

"இன்னிக்கு மகேஷ் அங்கிள் பர்த்டே பார்ட்டி ரோனி. நான் கிஃப்ட் எல்லாம் ப்ரிபேர் பண்ணி வைச்சிருக்கேன். கொடுக்க வேண்டாமா?"-அதிதி

"அப்ப உங்கப்பாவோடேயே போயிருக்க வேண்டியது தான?, என்னை ஏன்டி அலைய வைக்கிற?"

"ஜீனு இன்னிக்குக் கொஞ்சம் பிஸிம்மா"

"ஆ,ஊன்னா அவருக்கு சப்போர்ட் பண்ணிட்டு வந்துடுவியே?"

"யுவனி மம்மி-டாடி மாதிரி நீங்க 2 பேரும் ஒரே வீட்ல இருந்தா.. எனக்கு இவ்ளோ கஷ்டம் இருந்திருக்காது. ப்ச், ஏன் நானும்,ஜீனுவும் ஒரு வீட்லயும், நீயும், ஆதியும் ஒரு வீட்லயும் இருக்கோம் ரோனி?"

- தன் ஸ்கூட்டியில் முன்புறம் ஆதியை நிற்க வைத்து,பின்னால் அதிதியுடன் ஜீவனின் காஃபேயை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்த ரோஹினி மகளின் கேள்வியில் ஒரு நிமிடம் விழித்து, என்ன சொல்லி சமாளிக்கவென்று யோசித்தாள்.

எதிர்பார்த்த கேள்வி தான்! ஆதி, சிறுவன். இதையெல்லாம் கூர்ந்து நோக்கும் வயது கிடையாது. அவ்வப்போது இரவுகளில் 'ஜீனுட்ட போகனும்' என்று அழுவதோடு சரி!, ஒரு சாக்லெட்டைக் கையில் கொடுத்தால், தின்று விட்டுச் சமாதானமாகி விடுவான்.

ஆனால் அதிதி அப்படியல்ல. 11 வயது சிறுமி. வயதுக்கு வருவதென்றால் என்னவென்று கேள்வி கேட்டவள்! இவர்களிருவரிடையே நிலவும் வேறுபாட்டை உணராமலா இருந்திருப்பாள்?, ஏன் வேறு,வேறு வீட்டில் வசிக்கிறோம் என்பதை

யோசிக்கக் கூடத் தொடங்கியிருப்பாள். குழந்தைகள் முன்னே இருவரும் பெரிதாக சண்டையிட்டுக் கொண்டதுமில்லை,கொஞ்சிக் கொண்டதுமில்லை. அதனால் இதுவரை வித்தியாசமாய் எதுவும் தோன்றவில்லை போலும்!

"ம்க்கும்." எனத் தொண்டையைச் செறுமியவள்.. "ஆதி,நின்னுட்டே தூங்காத" என்று மகனை அதட்டி விட்டு "அம்மாவோட இண்ஸ்டிடியூட்,ஆதியோட ஸ்கூல் ரெண்டுமே கே.கே.நகர்ல இருக்குல்ல அதி?, அதனால தான் நாங்க 2 பேரும் வேற வீட்ல இருக்கோம்" என்றாள்.

என்ன புரிந்ததோ "ஹ்ம்ம்ம்ம்" என்றாள் அதிதி.

பேச்சை மாற்ற எண்ணி "என்ன கி.:ப்ட் வாங்கியிருக்க மகேஷூக்கு?" என்று வினவினாள். "சர்ப்ரைஸ்ஸ்ஸ்ஸ்.." என்று அவள் கையை விரிக்கையில் கே.:பே வந்து விட்டது.

கே.:பேயில் வேலை செய்யும் மகேஷின் பிறந்த நாளை பணியாளர்களுடன் சேர்ந்து விமர்சையாகக் கொண்டாடியது ஜீவனின் குடும்பம். சாரி!, கொண்டாடினர்.ஜீவன்-அதிதி மற்றும் ரோஹினி-ஆதி.

"அங்கிள், நான் உங்களுக்கு ஒரு கி.:ப்ட் கொண்டு வந்திருக்கேன்"-என்ற அதிதி ஓடிச் சென்று எடுத்து வந்தாள்.

"ஓப்பன் பண்ணுங்க அங்கிள்"-என்று குதித்தவளைக் கண்டு சிரித்தபடியே பிரித்தான் மகேஷ்.

அது ஒரு பெயிண்ட்டிங். வெண்ணைத் தாழி கிருஷ்ணனை அழகாக வரைந்திருந்தாள். 'சூப்பர்,சூப்பர்' என்று அனைவரும் பாராட்ட.. ஜீவன் மற்றும் ரோஹினியின் பார்வை மட்டும் பெயிண்டிங்கின் மீதே பதிந்திருந்தது. ஏனெனில் அதைச் சற்று உற்று நோக்கும் போது.. ஜீவனின் முகச் சாயல் தெரிந்தது. அன்னையைப் போலவே அவளுக்கும் பெயிண்ட்டிங்,டிராயிங்கில் ஆர்வம் அதிகம்.

சொல்லப் போனால், மகளின் இந்தத் திறமையைக் கண்டு இருவரும் பூரிக்க வேண்டிய தருணம் இது. ஆனால் ஒருவரையொருவர் நோக்கியபடி வாய் விட்டுச் சொல்ல முடியாத எதையோ, மென்று விழுங்கிக் கொண்டிருந்தனர்.

அடுத்த ஒரு மணி நேரமும் அனைவரின் பேச்சும் பெயிண்ட்டிங்கைப் பற்றியே இருக்க.. ஆதிக்கு சாண்ட்விச்சை ஊட்டி, அவனைத் தூங்க வைக்கத் தொடங்கியிருந்தான் ஜீவன்.

கா∴பேயின் முதல் தளத்தில் கூடியிருந்தனர் அனைவரும். அந்தத் தளத்தையொட்டிய பால்கனியில்.. முன்னுச்சி முடியுடன் விளையாடிய கடற்காற்றை அனுபவித்தபடிக் கண் மூடி நின்றிருந்தாள் ரோஹினி.

திடீரெனக் கன்னத்தில் சில்லென ஏதோ பதிய.. திடுக்கிட்டுக் கண் திறந்தவளிடம் "100% ∴ப்ரூட் ஜூஸ். குடிங்க" என்று நீட்டினான் ஜீவன்.

"அதைக் கையிலயே கொடுக்க வேண்டியது தான?, ஏன் கன்னத்துல வைக்கிறீங்க?"

அவன் எதுவும் பேசாமல் அவளருகே நின்று கடலை நோக்கியபடி ஜூஸை உறிஞ்சினான். பின்..

"இந்த 5 வருஷத்துல நல்லா பொய் சொல்லக் கத்துக்கிட்டீங்க"-என்றான்.

"ஏன்?"

"எல்லாத்தையும் மறந்துட்டேன்,அப்படி.இப்படின்னு டயலாக் அடிச்சீங்க. இப்போ ஒரு பெயிண்டிங்கை பார்த்ததுக்கு இவ்ளோ ∴பீல் பண்றீங்க?"

"நான் ∴பீல் பண்றேன்னு உங்கக்கிட்ட சொன்னேனா?"

"என் மேல இருக்கிற செக்ஸூவல் அட்ராக்ஷனைக் கூடத் தான் நீங்க ஓப்பனா ஒத்துக்கல. நீங்க சொல்லாட்டி அதெல்லாம் உங்களுக்கு இல்லன்னு ஆயிடுமா?"

"இப்போ எதுக்கு இந்தப் பேச்சு?"

"சரி. அந்தப் பேச்சு வேண்டாம். இதைக் கேளுங்க. 12 வருஷத்துக்கு முன்னாடி நீங்க கொடுத்த பெயிண்டிங்கை நான் இன்னும் பத்திரமா வைச்சிருக்கேன். தெரியுமா?"

"..............................."

"வயசானா மறதி வந்துடும்ன்னு சொல்றாங்க. ஆனா.. அந்த பெயிண்டிங்கைக் கொடுத்தப்போ 'என்னைப் பிடிச்சிருக்கு'-ன்னு நீங்க சொன்னது இன்னும் என் கண் முன்னாடி நிக்குது. மஸ்டர்ட் கலர் சுடிதார் போட்டிருந்தீங்க. தலையில மல்லிகைப் பூவெல்லாம் வைச்சுக்கிட்டு! அப்போவெல்லாம்.. கண்ணுக்கு இவ்ளோ பட்டையா மை தீட்ட மாட்டீங்க"

உதட்டைக் கடித்தபடி மௌனமானாள் அவள்.

மேலே ஏதோ கூற வந்தவனை "அண்ணா..., எல்லாரும் பாட்டு பாட ஆரம்பிச்சுட்டாங்க. காதுல ரத்தம் வராத குறை, நீங்க வாங்க ப்ளீஸ்.. நீங்க வந்து கிட்டாரைக் கையில் எடுத்தாத் தான் இந்தப் பசங்க அடங்குவானுங்க" என்றபடி வந்து நின்றான் மகேஷ். ஜூஸூடன் வேறு பக்கம் திரும்பியவளை நோக்கி விட்டு அவனோடு சென்றான் ஜீவன்.

அடுத்த பத்தாவது நிமிடம் கிட்டார் ஒலி அவளது செவியை மெல்லத் தீண்ட.. ஜீவனது குரலோ அவள் உயிரைத் தொட்டது.

"ஆசை ஓர் புல்வெளி.... அதில் ஆண்.பெண் இரு பனித்துளி..

பூ மீது தூங்கிடும்.. ஒரு பூங்காற்று போலவே!

ஓர் ரீங்காரமே... இரு நெஞ்சில் மௌனமாகக் கேட்குமே...

ஆகாயம் மழையில் நீராடும்.. கூந்தலும்,மீசையும்.....

-"இவருக்கு எல்லாஆஆஆம் ஞாபகம் இருக்காம்! புழுகுமூட்டை! அது மஸ்டர்ட் கலர் சுடிதார் இல்ல இடியட், ஆரஞ்ச் கலர்!" என்று முணுமுணுத்த ரோஹினியின் இதழ்கள், இதுவரை நாம் காணாத உல்லாசப் புன்னகையில் வளைய.. அவளது எண்ணங்களும் பன்னிரெண்டு வருடம் பின்னோக்கி வளைந்தது.

**தி**ருநெல்வேலியிலிருந்து சேரன்மகாதேவி செல்லும் அந்தப் பேருந்தின் ஜன்னலோர இருக்கையொன்றில் லேசாய்த் தலை சாய்த்தபடிக் கண் மூடி உறங்க முயன்று கொண்டிருந்தான் ஜீவன். அவனருகே வாய் ஓயாமல் பேசியபடி அவனது முயற்சியைத் தடுத்துக் கொண்டிருந்தார் செல்வம், அவனது சொந்தத் தாய் மாமா. அவனை விட ஆறே வயது மூத்தவர்!

"மாப்ள, என்ன டா நான் பேசிட்டே இருக்கேன்?, நீ பாட்டுக்க உறங்குற?"

"கேட்டுட்டு தான் இருக்கேன். சொல்லுங்க"

"அந்தப் பொன்னு ஃபோட்டோவை நீ பார்த்தியா இல்லையாடா?, என்ன சொல்றான் என் மவன்னு கேட்டு உங்கப்பன் என் உயிரை வாங்குறாரு!, என்ன மாப்ள, உனக்குப் பிடிச்சிருக்கா, இல்லையா?"

"நான் இன்னும் ஃபோட்டோவே பார்க்கல மாமா. உங்க எல்லாருக்கும் ஓகேன்னா, முக்கியமா உங்கக்காவுக்கு ஓகேன்னா, எனக்கும் ஓகே!"

"எங்கக்கா கூடவா அந்தப் பொன்னு குடும்பம் நடத்தப் போகுது?, பொன்னு நல்லா வெள்ளையா,லட்சணமா இருக்கு. மாப்ள, நம்ம குடும்பத்துக்கு அவ்ளோ கலரா பொன்னு கிடைக்குறது பெரிய விசயம்ல்ல??" - பெரிய ஜோக்கை சொல்லி விட்டவர் போல இடிஇடியெனச் சிரித்தார் செல்வம்.

"சத்தமா சிரிக்காதீங்க மாமா, பஸ்ல எல்லாரும் பயப்படறாங்க பாருங்க"

"பொன்னு நல்லா தான் இருக்கு! ஆனா அவங்கப்பன் கெடாமீசை சரியான கோட்டிப்பய மாப்ள! மாப்பிள்ளை பேர்ல வீடு இருக்கா,நிலம் இருக்கான்னு கேள்வி கேட்குறான்! விட்டாளா எங்கக்கா... 'நீங்க பொன்னுக்கு என்ன சேர்த்து வைச்சிருக்கீங்கன்னு' கேட்டா பாரு ஒரு கேள்வி..." என மீண்டும் அவர் வெடிச் சிரிப்பை உதிர்க்கத் தொடங்கிய தருணம் பின்னாலிருந்து யாரோ ஊசி போல எதையோ வைத்து சுரீரென அவர் இடுப்பிலேயே குத்த "ஆஆஆஆஆ" என்றுத் திரும்பிப் பார்த்தார்.

அவர்களது பின்னிருக்கையில் சுடிதார் அணிந்த பெண்களிருவர் அமர்ந்திருந்தனர். அதில் ஒருத்தி, இவர் திரும்பியதும் தலையைக் குனிந்து கொண்டுக் கையிலிருந்த பர்ஸால் முகத்தை லேசாக மறைத்துக் கொண்டாள். உடன் அமர்ந்திருந்தவளோ ஒன்றுமே நடவாதது போல் எங்கோ பார்க்க.. ஒரு நிமிடம் குழம்பியவர், மீண்டும் திரும்பி இருவரையும் நோக்கினார். மறுபடி அந்த பர்ஸ் பெண், அவரைக் கண்டு முகத்தை மறைத்துக் கொள்ள, சட்டென மூளையில் மின்னல் வெட்டியது அவருக்கு.

பளீர் சிரிப்புடன்.. "டேய்ய்ய்ய்ய் மாப்ள..." என்றழைத்தவர் "உனக்குப் பொன்னைப் பிடிச்சிருக்கோ இல்லையோ, அதுக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருச்சு போல டா" என்றார்.

கண்களைத் திறந்து அவரை நோக்கியவன் "என்ன உளர்றீங்க?" என்றான்.

"டக்குன்னு பார்க்காத, பின் சீட்ல உட்கார்ந்திருக்கிற ரெண்டு பொன்னுங்கள்ல ஒருத்தி தான், அந்த ரோஹினி"

"என்ன மாமா சொல்றீங்கஅஅஅ?"

"நீ ஏம்லே பதறுற?"

"பதறாம?, அந்தப் புள்ள ஏன் மாமா இந்த பஸ்ல உட்கார்ந்துருக்கு?"

"ஏன், நீ மட்டும் தான் இந்த பஸ்ல வரனும்னு எழுதி வைச்சிருக்கா?, மாப்ள, நல்ல சான்ஸ் டா இது. நீ அந்தப் புள்ளய அமுக்கிப் போட்டு, 2 வார்த்தை பேசிரு"

"உளறாதீங்க மாமா, எனக்குப் பயமாயிருக்கு"

"பயமா இருக்கா?, அட வெண்ணை"

"எனக்கு முன்ன,பின்னப் பொன்னுங்களோட பேசிப் பழக்கமே இல்ல மாமா"

"பழக்கமில்லையா?, பெருசா காலேஜெல்லாம் போனயே மாப்ள?, உன்னை காதல் மன்னன்னு-லாம் நினைச்சு வைச்சிருந்தேனேடா?"

"உளறாம, அமைதியா உக்காருங்க. அடுத்த ஸ்டாப்ல இறங்கி,வேற பஸ்ல ஊருக்குப் போகலாம்"

"மாப்ள, நீயெல்லாம் எப்படிடா கல்யாணம் பண்ணிக் குடும்பம் நடத்தப் போற?"

"எல்லாம் நடக்கும் போது பார்க்கலாம், நான் இறங்குறேன்" - என்றவன் சட்டென சீட்டை விட்டு எழுந்து முன்னே நடந்தான்.

"டேய்..... டேய்..." என்றவரும் அவனோடு எழுந்து பஸ் நின்றதும் இறங்கிக் கொண்டார். "போ,மாப்ள கிடைச்ச சான்ஸை மிஸ் பண்ணிட்ட" என்றபடியேத் திரும்பியவர் அந்தப் பெண்களிருவரும் கூட அவர்களுடனே இறங்கி விட்டதைக் கண்டு பக்கெனச் சிரித்தார்.

"முன்னாடியெல்லாம் பசங்க தான் புள்ளைகளை வெரட்டுவாங்க, இப்போ புள்ளைக அந்த வேலையைப் பார்க்குதுக போல?"

"என்ன மாமா சொல்றீங்க?"

"அங்க பாரு மாப்ள" - அவர் காட்டிய திசையில் நோக்கியவன், தங்களுக்குள் குசு,குசுவென ஏதோ பேசியபடி இவர்களையே குறு,குறுவென பார்த்துக் கொண்டிருந்தப் பெண்களைக் கண்டு பதறிப் போனான்.

"நடங்க மாமா, போவோம்"

"அட இரு மாப்ள, என்ன தான் பண்றாளுகன்னு பார்ப்போம். நம்மை ஏன் ஃபாலோ பண்றாளுக?, உன் கிட்ட அந்தப் பொன்னு பேச விரும்புதோ என்னவோ டா"

"பேசுறதா?? அய்யய்யோ!, என்னால முடியாது மாமா"

"இரண்டு பொன்னுங்கள்ல பச்சை சுடிதார் போட்டிருக்கிற பொன்னு தான் ரோஹினி. படத்தைப் பார்க்கலன்னியே!, இப்ப நேர்லயே பாரு மாப்ள"

"சும்மா இருங்க மாமா" - என்றவனுக்கு லேசாக வியர்க்கத் தொடங்க.. ஒற்றை விரலால் அதைச் சுண்டி எறிந்தவன் பஸ்ஸூக்காகக் காத்திருந்தான். அடுத்த சில நிமிடங்களிலேயே ரோஹினியோடு வந்த பெண் இவர்களின் அருகே வந்தாள்.

"மாப்ள, அந்தக் கோணவாய் நம்மக்கிட்ட தான் டா வருது"

"நீங்களே பேசி அனுப்பிடுங்க மாமா" - இருவரும் முணுமுணுக்கையில் அருகே வந்து விட்டாள் அவள்.

"நீங்க தான ஜீவனாந்தம்?" - அந்தப் பெண் ஜீவனைப் பார்த்து நேராகக் கேட்க.. ஒரு நிமிடம் விழித்துப் பின் தன் மாமனை நோக்கினான் அவன்.

"இவன் தான். அதுக்கென்ன இப்போ?"

"அங்க நிற்கிறாளே!, அவ ரோஹினி. அவளை உங்களுக்குப் பொன்னு பார்த்திருக்கிற விசயம் உங்களுக்குத் தெரியுமா?"

"அந்தப் பொன்னா இது?" - மாமாவின் அண்டப்புழுகு.

"ஆமாம். அவ இவரோட கொஞ்சம் தனியா பேசனுமாம்"

"ஓஹோ!, இதுக்குத் தான் எங்களையே ஃபாலோ பண்ணிட்டிருக்கீங்களா?, உங்களுக்கு எப்படியோ தெரியலம்மா, ஆனா நாங்க எங்க பையனை அப்படி வளர்க்கல. எதுவாயிருந்தாலும், பெரியவங்க பேசி முடிவு பண்ணட்டும். அதுவரைக்கும் பொறுத்திருங்க"

சற்றுத் தள்ளி நின்றபடி, இவர்கள் பேசுவதைக் கேட்ட ரோஹினிக்குக் கெட்ட கோவம் வந்து விட்டது போலும்! தங்.தங்கென நடந்து அருகே வந்தவள்.. கைகளைக் கட்டிக் கொண்டு ரௌத்திரத்துடன் செல்வத்தை நோக்கினாள்.

அவளது செய்கையில் ஆடிப் போன இருவரும், செய்வதறியாமல் விழித்துக் கொண்டு நிற்க, புஸ்.புஸ்-என கோப மூச்சை வெளியிட்டவள்..

"நீங்க எங்கப்பாவைக் கோட்டிப்பயன்னு சொன்னதுக்கே நான் பயங்கர கோவத்துல இருக்கேன்! இப்போ என் வளர்ப்பைப் பத்தி வேற தப்பா பேசுறீங்களா?" என்று வினவினாள்.

தன் பெரிய கண்களை அநியாயத்திற்கு உருட்டி, இதழ்களை அஷ்டகோணலாக வைத்துக் கொண்டு அவள் கேட்டக் கேள்விக்கு, செல்வம் பயந்தாரோ இல்லையோ, ஜீவன் மொத்தமாய் அரண்டு போனான்.

"மாமா.. மாமா.. போயிடலாம் மாமா, யாராவது பார்த்தா பிரச்சனையாய்டப் போகுது" - ஜீவன்.

"என்ன பிரச்சனையாகும்?, ஹ்ம்?, நான் இங்கப் பேசிட்டிருக்கேன். நீங்க என்ன அவரைப் பார்க்குறீங்க?" - இப்போது ஜீவன் புறம் திரும்பி விட்டாள் அவள்.

பேருந்து நிறுத்தத்தில் அருகில் நிற்பவர்கள் தங்களை விநோதமாக நோக்குவதைக் கண்ட ஜீவன் அவளைச் சற்றும் சட்டை செய்யாமல் "மாமா..." என்று அடிக்குரலில் செல்வத்தை அழைத்தான்.

"என்னம்மா ரொம்பத் தான் மிரட்டுற?, இன்னும் கல்யாணமே முடிவு பண்ணல, அதுக்குள்ள அவனை அதட்டுற?, உன்னை நம்பி எப்படிம்மா பையனைக் கொடுக்கிறது?"

"மாமா, கொஞ்ச நேரம் அமைதியா இருங்களேன்"

"உங்கப் பையன் தான் வேணும்னு இங்க யாரும் அழுதுட்டு கிடக்கல, சார், உங்களோட நான் ஒரு 10 நிமிஷம் பேசனும், கொஞ்சம் இப்டி வர்றீங்களா?" - ஜீவனை நேராக நோக்கி சட்டமாக அவள் கேட்ட விதம், அவனது அடி வயிற்றைப் பிசைய.. பேருந்தின் ஹார்ன் ஒலியில் 'அப்பாடா தப்பித்தோம்' என்றெண்ணிக் கொண்டு "பஸ் வந்துடுச்சு" என்று விட்டு விறுவிறுவெனச் சென்று விட்டான்.

ஆனால் அவள் அத்தோடு அவனை விடவில்லை.

மறுநாள் திருநெல்வேலி டௌனில் நண்பனைச் சந்தித்து விட்டு பெட்டிக் கடையொன்றில் அவன் 'ஸ்லைஸ்' குடித்துக் கொண்டிருந்த போது அவனருகே வந்து நின்றாள், அதே கோப முகத்துடன்!.

குடித்துக் கொண்டிருந்த பானம் புரையேற.. லொக்.லொக்கென இருமியவனுக்குக் கண்களில் நீர் சேர்ந்து விட்டது. பாக்கெட்டிலிருந்த கர்சீப்பை எடுத்து வாயை மூடிக் கொண்டு இருமியவனை, அவள் விடாது நோக்கிக் கொண்டிருந்தாள்.

ஒருவாறு சமாளித்துக் கொண்டு நிமிர்ந்தவனிடம் "எனக்கும் ஒரு ஸ்லைஸ் சொல்லுங்க" என்றாள்.

அவள் தைரியத்தை எண்ணி வியந்தபடி "அண்ணாச்சி, இன்னொன்னு கொடுங்க"- என்று கடைக்காரரிடம் கூறியவன், அவர் கொடுத்ததை வாங்கி அவளிடம் நீட்டினான்.

கடகடவென ஒரே மூச்சில் வாயில் ஊற்றியவள்.. "என்னைப் பார்த்தா.. உங்களுக்கு பேய்,பூதம் மாதிரி இருக்கா?, அப்படி ஓடுறீங்க?" என்று சிலிர்த்துக் கொண்டாள்.

தயங்கியவாறே "வ..வந்து.. நான் கொஞ்சம் 'ஷை' டைப்! அதுமட்டுமில்லாம, எனக்கு அவ்வளவா பொன்னுங்க கூடப் பேசிப் பழக்கமில்லங்க. தனியா பேசக் கொஞ்சம் தயக்கம்! அதான்.. சாரி." என்றான்.

"இஞ்சினியரிங்கெல்லாம் படிச்சிருக்கிறதா சொன்னாங்க. காலேஜ்ல ஒரு பொன்னு கிட்டக் கூட பேசுனதில்லையா?"

"இல்லங்க, நான் மெக்கானிக்கல் டிபார்ட்மெண்ட்"

"ஹைட்,வெயிட்டா, போலீஸ் க்ராப்போட இருக்கிற நீங்க 'ஷை' டைப்ன்னு சொன்னா.. இந்தப் பொடுசு கூட நம்பாது. என்ன அள்ளி விட்றீங்களா?"

"அய்யோ!, சத்தியமா இல்லங்க. பாருங்க,இந்த க்ளைமேட்க்குக் கூட எனக்கு எவ்ளோ வேர்த்திருக்குன்னு! நிஜமாவே.. எனக்குக் கொஞ்சம் பயம் தான்-ங்க!"

"ஹ்ம்ம்ம்ம்"

"ஏதோ பேசனும்ன்னு சொன்னீங்களே?"

"ஆமா, இந்தக் கல்யாண விவகாரத்தைப் பத்தி உங்களுக்குத் தெரியும் தான?, உங்கப்பா தான் பரிசம் போடுறதுல குறியா இருக்குறாரே! உங்கக்கிட்ட சொல்லாமலா இருந்திருப்பார்?"

"ஆமாங்க, உங்க ஃபோட்டோவைக் கொடுத்துப் பிடிச்சிருக்கான்னு கேட்டாங்க"

"நீங்க என்ன சொன்னீங்க?"

"நான் இன்னும் எதுவும் சொல்லலங்க"

"என்ன சொல்றதா இருக்கீங்க?"

"எ..எ..என்ன சொல்லனும்??"

"குட் க்வஸ்டின்! பிடிக்கலன்னு சொல்லனும்"

"ஏன்-ங்க?"

"என்ன ஏன்?, பிடிச்சிருக்குன்னு சொல்லலாம்ன்னு நினைச்சிருந்தீங்களோ?"

"அ..அப்படி சொல்லிட முடியாது. எங்கம்மாவுக்குப் பிடிச்சிருந்தா.. எனக்கும் ஓகேன்னு சொல்லலாம்ன்னு இருந்தேன்"

"ஹ!, உங்களை எனக்குப் பிடிக்காம போறதுக்கு ரெண்டாவது ரீசன் கிடைச்சாச்சு"

"முதல் ரீசன் என்னன்னு தெரிஞ்சுக்கலாமா?"

"ம்ம்ம். வேற என்ன?, நீங்க ஒரு போலீஸ் ஆ...பிசர்ன்றது தான்!"

"ஏன்-ங்க?, போலீஸ்ன்னா பிடிக்காதா?"

"ம்ஹ்ம்ம். போலீஸ்,ஆர்மி,ஏர்-...போர்ஸ்,நேவி-ன்னு யூனி...பார்ம் போட்ட வேலைக்காரங்க யாரையுமே பிடிக்காது"

"ஆனா உங்கப்பா எக்ஸ்-சர்வீஸ் மேன்னு என் வீட்ல சொன்னாங்களே?"

"ஆமாம். அதனால தான் இந்த வேலையை இவ்ளோ வெறுக்கிறேன் நான்"

"இதென்னங்க அபத்தமா இருக்கு?"

"அபத்தம் தான். ஷ்ஷ்ஷ்ஷ்..., 'ஷை' டைப்ன்னு பீத்திக்கிட்டு இவ்ளோ பேசுறீங்க?, நான் இந்த விளக்கம் கொடுத்ததே பெரிய விஷயம். இதுக்கு மேல எதுவும் கேட்க உங்களுக்கு ரைட்ஸ் இல்ல. என்னைப் பிடிக்கலன்னு சொல்லிடுங்க. அவ்ளோ தான்"

"சரிங்க. அப்படியே சொல்லிட்றேன்" - அவன் கூறியதும் உதட்டை ஒருபுறமாக வளைத்தவள்.. "பொதுவா போலீஸ் ஆ...பிசர்ன்னா தோற்றத்திலயும், செயல்லயும் ர...ப் அண்ட் ட...ப்-ஆ இருப்பாங்க?, நீங்க எப்படி இவ்ளோ அடக்கமான ஆளா இருக்கீங்க?, அதுவும் பொண்ணுங்கக்கிட்ட பேச கூச்சப்பட்டுக்கிட்டு??, பப்பி ஷேம்!" என்றாள்.

"நான் அப்படித் தான்-ங்க"

"அப்போ அக்யூஸ்ட்களை எல்லாம் எப்படி ஹாண்டில் பண்ணுவீங்க?"

"அதையெல்லாம் தெரிஞ்சுக்கனும்ன்னா, நீங்க என்னைக் கல்யாணம் பண்ணி என் கூட குடும்பம் நடத்தனுங்க"

"இதோடா.. நீங்க எப்படியிருந்தா எனக்கென்ன வந்தது?" - என்றவள் முறைத்து விட்டுச் சென்று விட்டாள்.

அன்று இரவு உணவின் போது 'பொன்னைப் பிடிச்சிருக்கா?' எனக் கேட்ட அன்னையிடம் "முதல்ல, அந்தப் பொன்னுக்கு என்னைப் பிடிச்சிருக்கான்னு கேளுங்கம்மா, அப்புறம் என்னைக் கேக்கலாம்" என்று விட்டான் ஜீவன்.

"ஏன் டா மாப்ள சலிச்சுக்கிற?" எனக் கேட்ட செல்வத்திடம் "அவங்களுக்கு என்னைப் பிடிக்கலையாம் மாமா" என்றவன் அவள் சொன்னக் காரணத்தைக் கூறினான்.

வெகுநேரம் அன்று உறங்காமல் ரோஹினியின் புகைப்படத்தையே நோக்கிக் கொண்டிருந்தவன், மறுநாள் காலையே, மாமனை அழைத்துக் கொண்டு அம்பாசமுத்திரத்திற்குக் கிளம்பி விட்டான். அது ரோஹினி வசிக்கும் ஊர்!

"எதுக்கு மாப்ள காலங்கார்த்தால அம்பைக்குக் கூட்டி வந்திருக்க?"-செல்வம்

"மாமா, ரோஹினி வீடு எங்க இருக்குன்னு உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும், ஏன் கேட்குற? அடேய்.. அந்தப் பொன்னைப் பிடிக்கலன்னு தான டா சொன்ன?"

"பிடிக்கலன்னு நான் எப்போ சொன்னேன்?, கட்டுனா.. அவங்களைத் தான் கட்டுவேன்!"

"அடப்பாவி!"

"அவங்க வீடு எங்கன்னு சொல்லுங்க மாமா. நான் அவங்களோட பேசனும்"

"வீட்டுக்குப் போய் பேசுனா.. சங்கு தான் மாப்ள"

"பின்ன?, ஏதாவது ஐடியா கொடுங்க மாமா"

"எப்படியும் அந்தப் பொன்னு வெளியே வரும், அப்போ நிறுத்தி பேசிடுவோம்"

இருவரும் ரோஹினியின் வீட்டருகேயிருந்த பெட்டிக் கடை ஒன்றில் அவள் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

முழுதாக இரண்டு மணி நேரம் கழித்து தரிசனம் தந்தவள், ஒரே பார்வையில் இருவரையும் கண்டு கொண்டாள். ஆனாலும் 'யாரும் பார்த்து விடக் கூடாதே' என்கிற பதைபதைப்பில் நேராக நடந்து கொண்டிருந்தாள்.

மான.ரோஷத்தையெல்லாம் கிடப்பில் போட்டு விட்டு அவளைப் பின் தொடர்ந்து கொண்டிருந்தனர் செல்வமும்.ஜீவனும்.

"மாப்ள, இது வர்க்-அவுட் ஆகும்னு நினைக்கிறியா?"

"ஏன் மாமா?"

"அந்தப் பொன்னுக்கு உன்னைப் பிடிக்கல போலயே டா"

"நான் பார்க்குற வேலை தான் பிடிக்கலன்னு சொன்னாங்க, என்னைப் பிடிக்கலன்னு சொல்லல. சொல்லவும் மாட்டாங்க"

"இதெல்லாம் குருட்டு நம்பிக்கை டா தம்பி. அய்யய்யோ, அவங்கப்பன் கெடா மீசை வர்றான் டா"

"யாரு,யாரு மாமா?, அந்த டி.வி.எஸ் ஃபி ஃப்டியா?"

"ஆமா, அப்படியே ஒதுங்கு மாப்ள, உச்சா போற மாதிரி மறைஞ்சுக்குவோம்"

"அட ச்சி!, ரோஹினி நம்மைப் பத்தி என்ன நினைப்பாங்க?, போங்க மாமா"

"ஏன்?, அவளுக்கெல்லாம் வராதா?, மாப்ள, கெடாமீசை பார்த்தான்னா, இந்த ஜென்மத்துல உனக்கு இவளோட கல்யாணம் நடக்காது. வாடா" - என்றவர் அவனை இழுத்துக் கொண்டு ஒதுக்குப்புறமாய் மறைந்தார்.

மிஸ்டர்.மீசை சென்றதும் மீண்டும் அவளைப் பின் தொடர்ந்தனர். வீட்டுக்கு ஐந்து தெரு தள்ளியிருந்த கோவிலுக்கு வருகை தந்திருந்தாள் அவள்.

விநாயகரிலிருந்துத் தொடங்கி மூலவரை தரிசித்து நவகிரகங்களைச் சுற்றும் வரை அமைதியாய் வேடிக்கை பார்த்தவன், அவள் அமர்ந்ததும் அருகே சென்றான்.

"உங்கக்கிட்ட கொஞ்சம் பேசனும்" - ஜீவன்

நிதானமாய் நிமிர்ந்து அவனை நோக்கியவள் "யார் நீங்க?" என்றாள்.

அடிப்பாவி! என்றெண்ணிய ஜீவனுக்கு, முதல் சந்திப்பில் அவன் அவளைத் தவிர்த்ததற்காகப் பழி வாங்குகிறாள் என்பது புரிந்து விட.. கைகளைக் கட்டிக் கொண்டு முறைத்தான்.

"மாப்ள, வாடா போவோம்"

"ஓ!!, சாரும் வந்திருக்கிறாரா?, என்னங்க சார், அன்னிக்கு உங்க பையனை இப்படியெல்லாம் வளர்க்கலன்னு பெருசா பேசுனீங்க?, இப்போ ஏன் இங்க வந்து நிற்கிறாரு?" - இந்தக் கேள்வி செல்வத்திற்கென்று சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

"நான் இவனோட தாய்மாமன்ம்மா, கொஞ்சமாவது மரியாதை தரலாமே!" - கிட்டத்தட்டக் கெஞ்சியவரைக் கண்டு சிரிப்பு வர அதை மறைத்து "எதுக்கு இங்க வந்துருக்கீங்க?" என்றாள்.

"நேத்து நீங்க குடிச்ச ஸ்லைஸ்-க்குப் பணம் கொடுக்காம போயிட்டீங்க. அதை வாங்கிட்டுப் போலாம்ன்னு வந்தேன்" - ஜீவன்

"மாப்ள, நீ பேசிட்டு வா டா" - நைசாய் நழுவி விட்டார் செல்வம், எப்படியும் பெரிய பன்னாய்த் திருப்பிக் கொடுப்பாள் அவள்! எதற்கு வம்பு!

"பத்து ரூபாய்க்காக பஸ் ஏறி வந்தீங்களாக்கும்?"

"என்னைப் பிடிக்கலன்னு சொல்லிட்டு, நான் வாங்கித் தந்த ஸ்லைஸை மட்டும் ஏன் குடிச்சீங்க?, அதைக் கேட்டுத் தெரிஞ்சுக்கலாம்ன்னு வந்தேன்"

"பொன்னுங்கக்கிட்ட பேசவே தெரியாதுன்னு நேத்து எவ்ளோ சீன் போட்டீங்க?, இன்னிக்கு வார்த்தைக்கு வார்த்தை ஃப்ளர்ட் பண்றீங்க?"

"இதுக்குப் பேரு தான் ஃப்ளர்ட்டிங்கா?"

"அடேங்கப்பா!"

"சரி, நான் நேராவே விசயத்துக்கு வர்றேங்க. எனக்கு உங்களை ரொம்பப் பிடிச்சிருக்கு, உங்களைக் கல்யாணம் பண்ணிக்கனும்ன்னு ஆசைப்படுறேன்"

"ஆஆஆஆஆங்ங்ங்ங்ங்....."

"வீட்ல ஃபோட்டோ கொடுத்தப்போ, பார்க்கனும்ன்னு கூடத் தோணல. ஆனா உங்களை நேர்ல பார்த்த நாளிலிருந்து, நீங்க தான் எனக்கு பொண்டாட்டியா வரனும்ன்னு உள் மனசு சொன்னதையே சொல்லிட்டிருக்கு! நீங்க என்ன சொல்றீங்க?"

"எ..என்ன திடீர்ன்னு?, 'பிடிக்கலன்னு சொல்லிடுங்கன்னு' நேத்து நான் சொன்னப்போ சரின்னு தான தலையாட்டுனீங்க?"

"அது பொய்-ங்க. நேத்து நீங்க ரொம்பக் கோபமா இருந்தீங்க. அதான் நான் உங்களை மறுத்துப் பேசல"

"............"

"எனக்குப் பொன்னுங்க கூடப் பேசி பழக்கமில்ல ஓகே!, உங்களுக்கும் பசங்க கூடப் பேசி பழக்கம் இல்ல போலயேங்க??"

"அப்படியெல்லாம் இல்லையே! நான் என்ன உங்களை மாதிரி ஓடவா செஞ்சேன்?"

"இல்ல, நான் பிடிச்சிருக்குன்னு சொன்னதும், உங்க காது,மூக்கெல்லாம் சிவந்து போச்சே! அதைச் சொன்னேன்! வெட்கப்படுறீங்களோ??"

"ஹலோ!, என்ன கொழுப்பா?, போலீஸ் ஆ:பிசரா இருந்துக்கிட்டு பப்ளிக் ப்ளேஸ்ல ஒரு பொன்னுக்கிட்ட இப்படி பிஹேவ் பண்ணிட்டு இருக்கீங்க?"

"உங்களை விட்டுப் பத்தடி தள்ளி நின்னு, டீசண்ட்டா பேசிட்டிருக்கேன். என்னைப் போய் இப்படி சொல்றீங்க?"

"............"

"எப்போ எனக்கு பதில் சொல்லப் போறீங்க?"

"நான் தான் நேத்தே க்ளியரா சொல்லிட்டேனே! எனக்கு யூனி:பார்ம் ஆட்களையே பிடிக்காதுன்னு?"

"ஏன்-ங்க?, நாட்டைக் காக்குற புனிதமான வேலைல இருக்கோம். எங்க மேல ஏன் உங்களுக்கு இவ்ளோ வெறுப்பு?"

"வெறுப்பு இல்ல. பயம்"

"பயமா?, ஏன்?"

"எங்கண்ணன், ஆர்மில இருந்தது உங்களுக்குத் தெரியுமா?"

"ஹ்ம்ம் ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி இறந்துட்டார்ன்னு கேள்விப் பட்டேன்"

"ம், கல்யாணமாகி ரெண்டே வருசத்துல போய்ச் சேர்ந்துட்டான். என் அண்ணியையும், குழந்தையையும் அநாதையா விட்டுட்டு."

"நாட்டுக்காகத் தன் உயிரையே தியாகம் பண்ணின தியாகிங்க அவர். அவரைப் பார்த்தும் கூடவா உங்களுக்கு எங்க வேலை மேல வெறுப்பு?"

"அவன் நாட்டுக்காக போய்ச் சேர்ந்துட்டான். அவனை நம்பி இருக்கிற அண்ணிக்கும்,பாப்பாவுக்கும் யார் பொறுப்பு?. என்னால.. என் வாழ்க்கைல அப்படி ஒரு சூழ்நிலையை நினைச்சுக்கூடப் பார்க்க முடியல. எனக்கு ரிஸ்க்கியான வேலைல இருக்கிற எந்த மாப்பிள்ளையும் வேண்டாம்"

"இது முட்டாள்த்தனம் ரோஹினி"

முதல்முறையாகப் பெயர் சொல்லி அழைக்கிறான்!. மனது அதைக் குறித்துக் கொண்டாலும் விறைப்பாய் நின்றாள்.

"அதே ஆர்மில வேலை பார்த்தவர் தான் உங்கப்பா. நல்ல படியா ரிடயர்ட் ஆகி வந்து, இன்னிக்கு டி.வி.எஸ் ஃபி.ஃப்டி ல ஜம்முன்னு போயிட்டிருக்கார்!. அவரை ஏன் பார்க்க மாட்டேங்குறீங்க?. ஒவ்வொருத்தருடைய தலையெழுத்தும் ஒவ்வொரு மாதிரிங்க. சாகனும்னு விதியிருந்தா.. எந்த வேலை பார்த்தாலும்,செத்துத் தான் போகனும்! எந்த ஜாப்ல தான் ரிஸ்க் இல்ல?. உங்க லாஜிக் படி பார்த்தா.. பேங்க் உத்தியோகத்துல இருக்கிறவனும்,டீச்சர் வேலை பார்க்கிறவனும் நீண்ட ஆயுளோட இருக்கனும். அப்படி யாரையாவது காட்டுங்க பார்ப்போம்"

"..............................."

"தயவுசெஞ்சு இந்த எண்ணத்தை மாத்திக்கோங்க ப்ளீஸ்!, எல்லாப் பொன்னுங்களும் இப்படி நினைச்சா.. எங்களை மாதிரி ஆளுங்க பிள்ளை,குட்டியோட வாழ வேண்டாமா?"

"ஹ்ம்ம்.உங்க கவலை உங்களுக்கு"

"கொஞ்சம் தெளிவா யோசிங்க ப்ளீஸ்!, எனக்காக..."

"உங்களுக்காக நான் ஏன் யோசிக்கனும்?, அப்படி என்ன என் கிட்டப் பிடிச்சிருக்கு?

"கொஞ்சம் அடாவடியா இருக்கீங்க!,அதான்ன்ன்ன்ன்"

"ஓஹோ! என்னை மாதிரி பொன்னுங்களைச் சமாளிக்கிறதுக் கொஞ்சம் கஷ்டம். தெரியுமா?"

"ஹாஹாஹா... தெரியும்ங்க"

"பரவாயில்லையே!, பல் தெரியற மாதிரி சிரிக்கத் தெரியுது உங்களுக்கு?"

"ஆமாங்க, உங்களைப் பார்க்கும் போது மட்டும் தான் இந்த மாதிரி சிரிக்க வருது"

"அதென்ன, வார்த்தைக்கு வார்த்தை ங்க,ங்க-ன்னு?, கல்யாணத்துக்கு அப்புறம் வாடி,போடின்னு தான கூப்பிடப் போறீங்க?, எதுக்கு இவ்ளோ சீன்?"

"ச்ச,ச்ச எனக்கு அதெல்லாம் வராதுங்க. எங்கம்மாக்கு அப்புறம், நான் இவ்ளோ பேசுற முதல் பொன்னே நீங்க தான்! நமக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தா.. அது மூணாவது ஆளா இருக்கும்"

"ச்ச,ச்ச இன்னும் நான் கல்யாணத்துக்கே ஓகே சொல்லல, அதுக்குள்ள குழந்தைக்குப் போயிட்டீங்க" - சிடுசிடுத்தாள் அவள்.

"எனக்கு இன்னும் 3 நாள் தான்-ங்க லீவ் இருக்கு. இதுக்கப்புறம் நான் ஊர்ப்பக்கம் வர ஆறு மாசமாகும். அதுக்குள்ள நீங்க ஓகே சொல்லிட்டா.. நான் சந்தோசமா கிளம்புவேன்"

"பார்ப்போம்!"

"பார்க்கலாம்!, அப்போ நான் வர்றேங்க" - என்றவன் செல்வத்துடன் புறப்பட்டான்.

அடுத்த மூன்று நாட்களும் அவனை முழுதாய்த் தவிக்க விட்டு மூன்றாம் நாள் மாலை நெல்லையப்பர் கோவிலில் சந்தித்தாள் ரோஹினி.

ஆரஞ்சு வண்ண சுடிதாரில்,மையிட்ட விழிகளுடனும்,ஒப்பனையற்ற முகத்துடனும் அவனை வெகுவாய் ஈர்த்துக் கொண்டிருந்தாள் அவள். ப்ளூ ஜீன்சும்,சிகப்பும்,கருப்புமாய் சட்டையணிந்திருந்தவன் அவள் பார்க்காத போது அவளையே பார்த்தபடிக் கண்ணாமூச்சி ஆடிக் கொண்டிருந்தான்.

அமைதியாய் அமர்ந்திருந்தவன் இப்போதைக்கு வாயைத் திறக்க மாட்டான் என்றறிந்து கொண்ட ரோஹினி தானே தொடங்கினாள்.

"எங்க உங்க மாமாவைக் காணோம்?"

"எதுக்கு டிஸ்டர்பென்ஸ்ன்னு அவரைக் கழட்டி விட்டுட்டேங்க"

"அதுசரி"

"கை-ல என்ன அது? கி:ப்ட்டா?"

"ஹ்ம்ம்"

"எனக்கா??"

"ம்.ஆமாம்"

"அப்போ கொடுங்க. என்னன்னு பிரிச்சுப் பார்க்குறேன்"

"ம்ம்ம்ம்"-என்றபடி உதட்டைக் கடித்துக் கொண்டுத் தயக்கத்துடன் அவனிடம் கையிலிருந்ததை நீட்டினாள்.

நிதானமாக அதைப் பிரித்தவன், உள்ளே இருந்ததைக் கண்டு விழி விரித்தான்.

ஆழி இலைக் கிருஷ்ணனை அவன் ஜாடையில் வரைந்திருந்தாள். கீழே "To: Mine, - Yours, Rohini" என்றெழுதப்பட்டிருந்தது. கண்கள் பளபளக்க அதை வாசித்தவனுக்கு.. சப்த நாளங்களிலும் சூடாக ஏதோ ஒன்று ஆறாய் ஓடி.. இதுவரை தோன்றியிராத புது உணர்வொன்றை கற்பித்துக் கொடுத்தது.

"நீங்க வரைஞ்சதா?" - ஜீவன்

"ஹ்ம்ம்"

"எனக்காகவா??????"

"ப்ச்..." - வழக்கம் போலத் தன் பெரிய கண்களை விரித்து முறைத்தாள் அவள்.

"ஹாஹாஹா... அப்போ எனக்கு தான் போல!, என் முக ஜாடையில் வரைஞ்சிருக்கீங்களோ?" - புன்னகையில் கொள்ளை போன முகத்துடனும், அவன் அனுமதியின்றியே மையல் குடி கொண்டு விட்ட விழிகளுடனும் அவளிடம் வினவினான் அவன்.

"ம்ம், எப்படியிருக்கு?" - ஆர்வமாய் அவள் முகம் நோக்கினாள் அவள்.

புருவத்தைச் சுருக்கிக் கொண்டு "ம்ம்ம்ம்ம்ம்" என யோசித்தவன் "புருவம் கொஞ்சம் திக்னெஸ் கம்மியா இருக்கு. மூக்குக் கூட சரியில்லயேங்க.." எனக் கூற.. எரிச்சலாகிப் போனவள், வேகமாய் எழுந்து வந்து "யோவ். குடு-ய்யா பெயிண்டிங்கை!, ரசனை கெட்ட மனுஷன் நீ-ன்னு தெரியாம, உன்னைப் போய்ப் பிடிச்சிருக்குன்னு சொல்ல வந்தேன் பாரு. குடு-ய்யா.குடு.." என்றபடி அவனிடமிருந்துப் பெயிண்டிங்கைப் பிடுங்கப் போராடிக் கொண்டிருந்தாள்.

"ஹாஹாஹா.."-வெனப் பெரிதாகச் சிரித்தவன் அவள் இரு கைகளையும், தன் ஒரு கரத்தால் பற்றி.... "என்ன?, என்ன சொன்னீங்க இப்போ?" என்று வினவினான்.

"ரசனை கெட்ட ஆ..பிசர்ன்னு சொன்னேன்"

"அதுக்கப்புறம் வந்த ஸ்டேட்மெண்ட்??"

"சொல்ல முடியாது"

"ப்ளீஸ்.. இன்னொரு தடவை சொல்லுங்க"

"உ..உங்களைப் பி...பிடிச்சிருக்குன்னு சொன்னேன்" - தலையைக் குனிந்தபடித் தயக்கமாய்க் கூறினாள்.

குனிந்து அவள் முகத்தை நோக்கியவன் "நிஜமாவா?" என்று வினவினான்.

அவனிடமிருந்துத் தன் கையை உறுவிக் கொண்டவள் மீண்டும் பழைய இடத்திலேயே வந்தமர்ந்தாள்.

"ஒரு போலீஸ் ஆ..பிசரைக் கொஞ்சம் கூடப் பயமே இல்லாம, நீ,உன்னைன்னு மரியாதை இல்லாம பேசுறீங்க!"

நாக்கைத் துருத்திப் பழிப்புக் காட்டினாள் அவள்.

எழுந்து அவளருகே வந்து இரண்டடி இடைவெளியில் அமர்ந்தவன் "இனி அப்படியே கூப்பிடுங்க, எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு" என்றான்.

அத்தனையருகே அவன் அமர்ந்ததும்.. அருகேயிருந்த ஆலமரத்திலிருந்து வீசிய காற்று, மைனஸ் டிகிரியில் அடிக்கும் பனிப்புயலாய் உடலைத் தாக்க.. லேசாய் நடுங்கியது அவளுக்கு. தலை குனிந்தபடி அமைதியாய் அமர்ந்திருந்தவளிடம்..

"எங்கேயிருந்தீங்க இவ்ளோ நாளா?"-என்று வினவினான்

என்ன கேள்வி இது என்பது போல் நோக்கினாள் அவள்.

"இல்ல, முன்னமே அறிமுகமாயிருந்தா.. நிறைய லவ் பண்ணியிருக்கலாம்"

"இப்போ என்ன?, மிச்சமிருக்கிற வாழ்க்கை முழுசும் லவ் பண்ணிக்க வேண்டியது தான்"

"குறைஞ்சபட்சம் இரண்டு நாள் முன்னாடியாவது சொல்லியிருக்கலாம்ல?"

"சொல்லியிருந்தா என்ன பண்ணியிருப்பீங்க?"

"நம்ம கல்யாணத்தை நிச்சயம் பண்ணியிருப்பேன்"

"ஹாஆஆஆஆஆஆங்??"

"நிஜமா தான்-ங்க!, இனி ஆறு மாசம் வெயிட் பண்ணனும்"

"வெய்ட் பண்ணலாம். தப்பில்ல. உங்களைப் பத்தி நானும், என்னைப் பத்தி நீங்களும் தெரிஞ்சுக்க டைம் வேணும்ல?"

"அதுசரி"

"அப்போ நான் கிளம்பட்டுமா?, டைம் ஆச்சு"

"பத்து நிமிஷம் இருங்க ப்ளீஸ், இப்போ தான் லவ் பண்றதா சொன்னீங்க, அதுக்குள்ள கிளம்புறேன்றீங்க?"

"லவ்வாஆஆஆ?, பிடிச்சிருக்குன்னு மட்டும் தான் சொன்னேன்"

"ரெண்டுத்துக்கும் வித்தியாசம் இருக்கா என்ன?"

"நீங்க ரொம்ப மக்கு போலீஸ் ஆ:பிசர் போல மச்சான்..."

"மச்சானா??"

"ஏன்?, நல்லாயில்லையா?, இனி நான் உங்களை மச்சான்னு தான் கூப்பிடுவேன்"

"நீங்க எப்படிக் கூப்பிட்டாலும் எனக்குப் பிடிக்கும்-ங்க"

"சரியான வழிஞ்சான் கேஸ்!, இவரு 'ஷை' டைப்பாம்!, வெவ்வவவவ"- வாயிலேயே அடித்துக் கொண்டாள் அவள்.

அவள் செய்கைகளனைத்தும் அவனுக்கு வித்தியாசமாய்த் தெரிந்தது போலும்! பே-வெனப் பார்த்தபடிக் கண் சிமிட்டக் கூட மறந்து போனான்.

"ரோஹினி......."

"ம்ம்??"

"இப்போ நான் உங்கக் கையைப் பிடிச்சா என்னங்க பண்ணுவீங்க?

"செருப்பால அடிப்பேன்"

"நல்ல வேளை, கோயிலுக்கு வந்தோம்"

"என்ன நக்கலா?, நீங்க இப்படியே பேசிட்டிருங்க, நான் கிளம்புறேன்" - அமர்ந்திருந்த இடத்திலிருந்துக் குதித்து இறங்கினாள் அவள்.

இரண்டடி நடந்தவளை "ரோஹினி..." என்றழைத்து நிறுத்தியவன்.. தானும் இறங்கி வந்து, அவள் முன்னே நின்றுத் தன் வலது கையை நீட்டினான்.

கண்ணைச் சுருக்கி முறைத்தவளிடம் அவன் "ப்ளீஸ்" என்றதும், அவன் கை மீதுத் தன் கரத்தை வைத்தாள்.

"நானும் உங்களோட பஸ் ஸ்டாண்ட் வரைக்கும் வர்றேன்" என்றவன் கையைப் பற்றியபடியே உடன் நடந்தான்.

"இ...இப்படியேவா??" - கோர்த்திருந்த கைகளைத் தயக்கமாய் நோக்கினாள் அவள்.

"இப்படியே தான்"

ஒரு நொடி அமைதியாய் நடந்தவள், பின் தன் கையை உறுவி, அவன் வலது கை முட்டியைச் சுற்றிப் பற்றிக் கொண்டு தன் புறம் குனிந்திருந்தவனை நிமிர்ந்து பார்த்து அழகாகச் சிரித்தாள்.

# அத்தியாயம் - 4

**ரகசியமாய்... ரகசியமாய்..**

**புன்னகைத்தால்.. பொருள் என்னவோ???**

-நள்ளிரவு 12 மணி. மனிதனாய்ப் பிறந்த அனைவரும் நித்திரை கொள்ள வேண்டிய நேரம்! ஆனால் நான் மட்டும் மடிக்கணிணியைப் பார்த்தபடி இந்தப் பாட்டை முணுமுணுத்துக் கொண்டிருக்கிறேன்! பேய்,பிசாசு ஏதேனும் அருகே வந்தால், என் குரலைக் கேட்டு அப்படியே ஓடட்டும்! ம்க்கும்! (இருமல்) ஆனால்.. என் ஹம்மிங்கின் காரணம் அதுவல்ல.. இருபதுகளின் இறுதியில் இருந்த ஜீவனின் முன்னுச்சிக் கற்றை முடியும், அவரது பெரிய கண்களின் வசீகரமும் தான்! ஆனா.. மனுஷன் போலீஸ் ஆ:பிசரா?? ச்ச! அந்த 'க்ராப்பை' வைத்து நான் முன்னமே கணித்திருக்க வேண்டும்! ஆனால்.. இப்போது சர்வீஸில் இருக்கும் ஆளைப் போலத் தெரியவில்லையே! தான் ஒரு போலீஸ் என்பதை ப்ரொ:பைலில் அவர் குறிப்பிடவே இல்லை! ஏன்?? சரி, அடுத்து என்ன நடந்ததென்று பார்ப்போம்!

**'என் செல்ல மிளகாயே! அன்றுப் பச்சையாய் இருந்து என் மூளையை இம்சித்தது போதாதென்று, இன்று சிகப்பாய் மாறி என் இதயத்தை வதைக்கிறாயே!'**

-ஹாஹாஹா! ஸ்டேட்டஸை வாசித்த எனக்கு சிரிப்புப் பீறிட்டது. யோவ் அங்கிள்! கவிதையா-ய்யா இது??, தலையில் அடித்துக் கொண்டு விடியோவைக் க்ளிக்கினேன்!

**அ**ன்று அந்த மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக் கிழமை. ஊராருக்கெல்லாம் அது வெறும் ஞாயிறு! ஆனால் டோனட் கா:பேயின் ஆண்களுக்கு மட்டும் அது 'தீர்த்தம்' பருகும் நாள்! வடிவேல் பாஷையில் பச்சையாகச் சொல்ல வேண்டுமானால்.. அனைவரும் 'அரை போதை நாயாக' மறு உருவமெடுக்கும் நாள்!

இரவு ஒன்பது மணிக்கே கடையை இழுத்து மூடி விட்டு, குடி,குடியெனக் குடித்துத் தீர்த்த அனைவரும் ஆளுக்கொரு மூலையில் 'ஆஆஆ'-வெனக் கிடக்க... நாம் தேடிக் கொண்டிருக்கும் முக்கியமான ஆளை மட்டும் காணவில்லை! அந்த 'அவன்' ஆட்டோ ஒன்றில் சீரான வேகத்தில் கே.கே.நகரை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தான்.

அதிதி மற்றும் ஆதித்யனை உறங்க வைத்த ரோஹினி தன் மடிக்கணிணியில் எதையோ தீவிரமாகப் பார்த்துக் கொண்டிருக்கையில் வாசல் கதவை யாரோ தட்டும் ஒலி கேட்டது.

யாராக இருக்கும் எனப் புருவத்தைச் சுருக்கியவள், திரும்பிக் காலண்டரை நோக்கினாள். ஓ! செகண்ட் சண்டே ஆ:ப் திஸ் மந்த்! அப்படியானால், நிச்சயம் இது திருவாளர்.போலீஸ்கார் தான் என்றெண்ணிக் கொண்டு எழுந்து சென்று கதவைத் திறந்தாள்.

வாசலில் சாந்தமான முகத்துடன் நின்றிருந்த ஜீவனைக் கண்டால்.. அவனது சிறுகுடலிலிருந்து மலக்குடல் வரை அத்தனையையும் ஸ்காட்ச் அடைத்திருப்பதைக் கண்டறியவே முடியாது. ஸ்டெடியாக நின்று நேர்ப்பார்வையுடன் அவளை நோக்கினான்.

"குழந்தைங்க தூங்கிட்டாங்களா??" - லைட்டா வாய் குழறுதே போலீஸ்கார்!!!!

"எப்பவோ தூங்கிட்டாங்க" - ரோஹினி

"சரி. நான் இப்போ உள்ள வரப் போறேன்" - இப்போது மொத்தமாய்க் குழறிப் போன வார்த்தைகளுடன் தட்டுத் தடுமாறிப் படியேறினான் அவன். கையைக் கட்டிக் கொண்டு அவனுக்கு வழி விட்டு நின்ற ரோஹினி, கதவை அடைத்து விட்டு உள்ளே வந்தாள்.

இப்போது அந்தச் சிறிய வராண்டாவின் ஒரு மூலையில் 'இது எனக்கான இடம்' என்பது போல் சம்மணமிட்டு அமர்ந்திருந்தவன், கண்களை மூடியபடிச் சாமியாடிக் கொண்டிருந்தான்.

அவனது வினோத செய்கைகள் அத்தனைக்கும் ரோஹினியிடமிருந்து எந்தவித பதிலுமில்லை! இது வழக்கம் தான் என்பது போல், ஷோ:பாவில் அமர்ந்து மடிக்கணிணியின் மீதுப் பார்வையைப் பதித்திருந்தாள்.

பின் திடீரென... "ரோஹினினினினி" - எனச் சீறலாய் அவன் தொண்டையிலிருந்து சத்தம் வந்தது! இதுவரை நாம் கண்டிருந்த ஜீவனின் குரலே அல்ல அது!

நிமிர்ந்து அவனை நோக்கினாள் அவள். யோகா செய்பவன் போன்று சம்மணமிட்டு அமர்ந்து கைகளிரெண்டையும் முட்டியின் அருகே நீட்டியிருந்தவனின் கண்கள் இப்போதும் திறந்த பாடில்லை! ஆனால்.. தலை மட்டும் சாமியாடிக் கொண்டிருந்தது.

"ஏய்..... நிமிர்ந்து என்னைப் பாரு **டீ**. இங்க ஒருத்தன் கத்துறது கேட்கல??"

"சத்தத்தைக் குறைங்க. குழந்தைங்க தூங்குறாங்க"

"நிமிர்...ந்து என்...னைப் பா...ரு....டி" - 'வெறும் காத்து தான்-ங்க வருது' குரலுடன் மறுபடி சொன்னதையே சொன்னான் அவன்.

உதட்டை மடக்கி சத்தமில்லாமல் வயிறு குலுங்கச் சிரித்த ரோஹினி மடிக்கணிணியிலிருந்துப் பார்வையைத் திருப்பவேயில்லை.

'குழந்தைங்க'-என்கிற வார்த்தை அவனை அத்தனை பாதித்திருக்கிறது போலும்!, ரோஹினியின் வாயிலிருந்து வரும் மற்றவற்றை உதாசீனம் செய்து விட்டு 'குழந்தைங்க' என்கிற வார்த்தைக்கு மட்டும் அலெர்ட்டாக இருக்கும் படி மூளைக்குக் கட்டளையிட்டு வைத்திருக்கிறான்! ப்ளடி ஆ..பிசர்!

"நான் இன்னும் என்ன செஞ்சா உன் கோபம் போகும்டி?? முதல்ல, என்ன பெரிய கோபம் உனக்கு! பொல்லாத கோபம்!! கட்டின புருஷன் கடவுள் மாதிரி! காலைத் தொட்டு கும்பிடாட்டியும் பரவாயில்ல! எட்டி உதைக்காதடி... எவ்ளோ... வலிக்கும் தெரியுமாஆஆஆஆ?????"

-நாற்பதுகளில் இருக்கும் ஆணா இவன்???, 4 க்ளாஸ் உள்ளே போனால் போதுமே! வயது,படிப்பு,வேலை என சகலத்தையும் மறந்து விடுவான்! கொஞ்சம் கூட முதிர்ச்சியில்லாத.. டீனேஜர் போல நடந்து கொண்டு! குடிகாரப் பயபுள்ள!

"ஷ்ஷ், மெதுவா பேசுங்கன்னு சொன்னேன்" - ரோஹினி

"மெதுவா பேசுறேன், மெதுவா பேசுறேன்!, நீ சொல்றதெல்லாம் கேட்குறேன்! என்னோட வந்துடி... ம், சொல்லு, வருவியா.. வர மாட்டியாஆஆஆஆ??"

-அவள் இதற்கும் செவி சாய்க்காமல், இப்போது செல்..போனை நோக்கிக் கொண்டிருந்தாள்.

"5 வருஷம், முழுசா 5 வருஷம் முடிஞ்சு போச்சு!, இன்னிக்கு வருவ, நாளைக்கு வருவன்னு லூசு மாதிரி நான் காத்திட்டிருந்த நாளெல்லாஆஆஆம் ஓடிப் போச்சு.. ஆமா, ஓடியே போச்சு....." - இப்போது ஒரு கையை மட்டும் முட்டியிலிருந்து எடுத்து ஆட்டிக் கொண்டிருந்தான்.

"ஆனா உன் கிட்ட இத்தனை வருசத்துல ஒரு... ஒரு சின்ன மாற்றம் கூட இல்ல... ஏன் டி ஏன்??, எனக்கு இப்போஓஓஓ பதில் வேணும்.. சொல்லுடி...."

"............"

"பதில் சொல்லுடி, திமிர்ப்பிடிச்சவளே!!!"

"தெளிவா இருக்கும் போது ங்க.ங்க-ன்னு வார்த்தைக்கு வார்த்தை மரியாதை தர வேண்டியது, போதையானதும் சகட்டு மேனிக்கு 'டி' போட வேண்டியது! மாசத்துக்கொரு தடவை இந்தாளோட அக்கப்போரா இருக்கு" - தன் போக்கில் புலம்பிய ரோஹினி உள்ளே எழுந்து சென்றாள்.

இப்போது கண்ணைத் திறந்தவன் "ஏய்... போகாதடி... போகாத..." என்று எழுந்து நின்று... ஒரு அடி எடுத்து வைத்து... மீண்டும் பழைய பொஸிஸனிலேயே நின்று "நோ, இந்தக் கோட்டைத் தாண்டி நான் வர மாட்டேன்! இது என் எல்லை" எனக் கூறிப் பெருமூச்சு விட்டான்!

மறுபடி வெளியே வந்தவளின் கையில் ஒரு தம்ளர் எலுமிச்சைச் சாறு இருந்தது. அவன் முன்னே டொக்கென வைத்தவள் "இதைக் குடிங்க" என்றாள்.

"மாட்டேன்... குடிக்க மாட்டேன்!, இதைக் குடிச்சுத் தெளிவாய்ட்டா... என் மனக்குமுறலையெல்லாம் எப்படிடி வெளியே சொல்றது???"

"அதுசரி....." - ரோஹினி

"உனக்கு என் கஷ்டம் என்னன்னே புரிய மாட்டேங்குதுடி! 40-வயசுல என் துணியை நானே துவைச்சிக்கிறது எவ்ளோஓஓஓ பெரிய விசயம் தெரியுமா??, பொண்டாட்டி கையால சாப்பாடுன்றதெல்லாம் மறந்தே போயாச்சு!! 20ஸ்-ல இருக்கிற பேச்சுலர் மாதிரி என் வேலையெல்லாத்தையும் நானே பார்த்துட்டு, ஒண்டியா வாழ்ந்துட்டு இருக்கேன்!"

"........."

"இதையெல்லாம் விடுடி! பசி,தூக்கம் மாதிரி செக்ஸ்-ன்றது ஒரு ஆணோட,இல்ல,இல்ல ஒரு மனுஷனோட அடிப்படைத் தேவை!! ஆனா... நான்... 37 வயசுல இருந்து பிரம்மச்சாரியா வாழ்ந்துட்டிருக்கேன்!! உன்னைக் கடைசியா எப்போ கிஸ் பண்ணேன்றது கூட ஞாபகமில்ல எனக்கு! அன்னிக்கு... அன்னிக்கு அந்த கருப்பு சாரி-ல எவ்ளோ... அழகா இருந்த தெரியுமா???, இந்த வயசுல, சொந்தப் பொண்டாட்டியவே சைட் அடிக்கிறது எவ்ளோ கொடுமை! ச்சை!"

"........."

"நீ டிவர்ஸ் பண்ணப்புறம் நான் எவ பின்னாடியாவது போயிட்டேனா... இல்ல, உனக்குத் தான் வேற யார் மேலயும் விருப்பம் வந்துச்சா??, இந்த 5 வருசத்துல இது

ரெண்டுமே நடக்காதப்போ.. உன்னோட வெறும் வரட்டு பிடிவாதத்துக்காக நாம ஏன் டி பிரிஞ்சு இருக்கனும்???.. "

"..................."

"பதில் சொல்லுடி... எனக்கு இப்போ பதில் தெரிஞ்சாகனும்....." என்றவன் லொக்,லொக்கென இருமி "ஆஆஆஆ.. தொண்டை எரியுது" என்றான்.

எரிச்சலுடன் எழுந்து வந்து கீழேயிருந்தத் தம்ளரை எடுத்து அவன் வாயில் வைத்தாள். கடகடவென அவள் ஊற்றியதும், மூச்சு விடாமல் குடித்தவன் தடுமாறிக் கீழே அமர்ந்தான்.

தொங்கிய தலையுடன் அடுத்த அரை மணி நேரம் அமைதியாக அமர்ந்திருந்தவன் பின் தலையை உலுக்கிக் கொண்டு மெல்ல எழுந்தான்.

லேசாக உணர்வு திரும்புகிறது போலும்! தன்னையே கையைக் கட்டிக் கொண்டு பார்த்துக் கொண்டிருக்கும் ரோஹினியை நிமிர்ந்தும் பாராமல் "நான் கிளம்புறேங்க" என்றான்.

அவள் பதிலை எதிர்பாராமல் நடந்தவன், வாசலருகே வந்ததும் "க..கதவைச் சாத்திக்கோங்க" என்றபடி மெல்ல அவளைத் திரும்பிப் பார்த்தான்.

பேபி பிங்க் நிறத்தில் முழு நீள இரவு கவுன் அணிந்திருந்தாள், தூக்கிக் கொண்டையிட்டிருந்த முடி, ஆங்காங்கு முன்னுச்சியில் பறந்து கொண்டிருந்தது. முகத்தில் கோபம்,எரிச்சல்,தூக்கம் போன்ற கலவையான உணர்வுகளோடு வேறொன்றும் சேர்ந்திருந்தது. அது என்னவென்று அவனால் பகுத்தறிய முடியவில்லை!

பின் வேண்டுமென்றே தடுமாறி அவள் மீது மொத்தமாய்ச் சாய்ந்தான்.

அவள் அணியும் 'சாக்லேட்' பர்..ப்யூமை நுரையீரலில் நிரப்பி, அவள் தோள் வளைவின் மென்மையைத் தன் கன்னத்தில் தேக்கி.. அவள் இடையின் சுற்றளவைக் கையால் கணக்கிட்டு, காமமற்றத் தன் அணைப்பின் தீவிரத்தைத் தெளிவாய் உணர்த்தி.. மெல்ல விலகினான் அவன்.

செக்கச் சிவந்த செவ்வானத்துடன் போட்டி போடும் அபிப்ராயம் ரோஹினிக்குக் கொஞ்சமும் கிடையாது தான்! ஆனாலும், சிவப்பேறத் தொடங்கிய உடலின் அத்தனை பாகங்களையும், இறுக மூடிய உள்ளங்கையினால் அடக்கினாள்.

"சா...சாரிங்க. கா...கால் தடுக்கிடுச்சு" - வழக்கமாக அவன் கூறும் ஒரே பொய் தான்! ஆனாலும் சரியெனத் தலையாட்டினாள் அவள்.

அதன் பின்பு அவளைத் திரும்பியும் பார்க்காமல் விடுவிடுவென வெளியேறி விட்டிருந்தான் அவன்.

**ம**றுநாள் காலை அதிதியை அழைத்துச் செல்ல வந்தவனுக்கு நேற்றைய சம்பவத்தின் தாக்கம் துளி கூட இல்லை. ஏன், அப்படியொரு நிகழ்வு நடந்ததென்பதையே அவன் மூளை சென்சார் செய்து விட்டிருந்தது.

"ரோனி, என்னோட பிங்க் கலர் லெஹங்கா எங்க?. ஃப்ரை டே எங்களுக்கு 'டெஸி டே'. ஃப்ரெண்ட்ஸ் எல்லாரும் லெஹங்கா போடப் போறோம்" - அதிதி

"கப்போர்ட்ல லாஸ்ட் செல்ஃப்ல இருக்கும் பாரு"

"என்னோட லாங் ஸ்டட்?,பேங்கிள்ஸ் எல்லாம்??"

"நான் எடுத்து வைக்கிறேன்டி. நீ வந்து இந்தப் பூரியைக் காலி பண்ணு முதல்ல" - என்றவள் ஹால் சோஃபாவில் அமர்ந்திருந்த ஜீவனை ஒரு மரியாதைக்குக் கூடச் சாப்பிடச் சொல்லவில்லை.

தொண்டைக்கும்,உணவுக் குழாய்க்கும் இடையே 'சொய்ங்ங்ங்' என 'ரைட்' போய்க் கொண்டிருந்த சாண்ட்விச்சை "ப்ப்ப்ப்" என ஏப்பம் விட்டுக் கீழே இறக்கியவன் ஆதியிடம் குனிந்தான்.

"போகலாம் ஜீனு.." - அதிதி

"எல்லாம் எடுத்துக்கிட்டீங்களா?. வீட்டுக்குப் போனதும் அது இல்ல,இது இல்லன்னு என்னை அலைய வைக்காதீங்க. எனக்குக் கொஞ்சம் வயிறு வேற சரியில்ல" - ஜீவன்.

"அவ கேட்டதும் உடனே நீங்க இங்க ஓடி வராம, அவ கிட்ட மறுத்துப் பேசிப் பழகுங்க. நீங்கன்னாலே ரெண்டு பேருக்கும் இளக்காரமா இருக்கு போல" - ரோஹினி

"அவங்களுக்கு மட்டும் தானா?"

"என்ன நக்கலா?"

"இல்லங்க. உண்மையைச் சொன்னேன்" என்றவன் ஆதியிடம் டாட்டா சொல்லி விட்டு அதிதியை அழைத்துக் கொண்டு கிளம்பினான்.

வாசலில் நின்றபடி இருவரையும் நோக்கிக் கொண்டிருந்தவளிடம் திரும்பி ஒரு பார்வையை செலுத்தினான். ஹெல்மெட்டுக்குள் மறைந்து போயிருந்த முகத்துடன், அவன் கண்கள் மட்டும் கூறிய செய்தி அவளுக்குப் புரியமாலில்லை. கோபம்,ஆதங்கம்,யாசிப்பு அத்தனையும் கலந்த 'இன்னும் எத்தனை நாளுக்கடி இந்தப் பிழைப்பு??' என்பது போன்ற ஒரு பார்வை அது! - ஒரு நொடி தான்! அதன் பின்பு மகளுடன் பைக்கில் பறந்திருந்தான்.

இதே போன்ற ஒரு பார்வை பானத்தை இதற்கு முன்பு அவளை நோக்கிச் செலுத்தியிருக்கிறான். ஆனால் அதில் காதல்,காதல்!!! காதல் மட்டுமே நிறைந்திருந்தது.

**தி**ருமண மேடையில் தன்னருகே புன்னகையுடன் நின்றிருந்த ஜீவானந்தத்தைத் திரும்பி நோக்கிய ரோஹினிக்குச் சத்தியமாக நடப்பதை நம்பவே முடியவில்லை! குனிந்து, காலையில் அவன் தன் கழுத்தில் கட்டியத் திருமாங்கல்யத்தைப் பார்த்துக் கொண்டாள்! ஆறுமாதத்திற்குப் பிறகு தான் வரமுடியும்,அது,இதுவென வசனம் பேசியவன், அடுத்த இரண்டே மாதத்தில் திருமணத்தை முடித்திருந்தான். எமகாதகன்!

இந்த இரண்டு மாதத்தில் பெரிதாக இருவரும் பேசிக் கொள்ளக் கூட இல்லை. ஏனெனில் அவனுக்கு டியூட்டி போடப்பட்டிருக்கும் இடம் அப்படி! சத்திஸ்கர் மாநிலத்தின் எங்கோ ஓர் மூலையில் இருக்கும் கிராமத்தில் பணி புரிகிறானாம்!

போலீஸ், போலீஸ் என்று இத்தனை நாட்களாக அவனைக் காக்கிச் சட்டையில் கற்பனை செய்து வைத்திருந்தாள் அவள். உண்மையில் அவன் மிலிட்டரி யூனி:.பார்ம் அணிபவன்.

He is an Assistant Commandant in CRPF (Central Reserve Police Force). அப்படியென்றால் என்னவென்று கூட ரோஹினிக்குத் தெரியாது. உள்நாட்டுப் பாதுகாப்பிற்கென இந்திய அரசால் ஒதுக்கப்பட்டிருக்கும் காவல்படையாம்!.

அதுமட்டுமல்ல! அசிஸ்டெண்ட் கமாண்டண்டிற்கான யு.பி.எஸ்.சி தேர்வில் இந்தியாவிலேயே நான்காம் இடத்தைப் பிடித்து நேரடியாகப் பணியில் அமர்த்தப்பட்டவனாம் இவன்!

பன்னிரெண்டாம் வகுப்பில் எழுநூற்றி சொச்ச மார்க்குகளை எடுத்துப் பார்டரில் பாஸாகி, கடனே என பி.எ.இங்க்லிஷ் லிட்ரேச்சர் படித்த அவள் எங்கே! இந்த அறிவாளி எங்கே!

"என்னங்க உம்முன்னு இருக்கீங்க?, ஆறு மாசம் மெதுவா லவ் பண்ணிக்கலாம்ன்னு சொல்லிட்டு ரெண்டே மாசத்துல கல்யாணம் பண்ணிக்கிட்டேன்னு கோபமா?" -ஜீவன்

"பின்ன இருக்காதா?"

"ஒருத்தரையொருத்தர் தெரிஞ்சுக்க வாழ்க்கை முழுசும் இருக்குங்க. ஆறே மாசத்துலலாம் மொத்தமா புரிஞ்சுக்க முடியாது"

"அதுசரி"

"இது மட்டும் தான் உங்க கவலையா??"

"இ..இல்ல....."

"ம்ம்,சொல்லுங்க"

"நான் உங்களை எங்கப்பா மாதிரி ஒரு மக்குன்னு நினைச்சு வைச்சிருந்தேன்"

"வாட்??"

"இல்ல,20 வயசுல வேலை,வெட்டியில்லாம தெண்டமா சுத்திட்டிருந்த எங்கப்பா, என் தாத்தா வாய்க்கு பயந்து தான் மிலிட்ரில சேர்ந்தாராம். நீங்க கூட.... அ..அப்படித் தான்னு நினைச்சு வைச்சிருந்தேன்! ஆனா.. நீங்க என்னங்க இவ்ளோ பெரிய அறிவாளியா இருக்கீங்க??, எனக்குல்லாம் உங்க அளவு மூளை வேலை செய்யாது."

"இது ஒரு பிரச்சனையாங்க?"

"பின்ன இல்லையா?, வைஃப் கொஞ்சம் மக்குன்னு நினைச்சு நீங்க மட்டம் தட்ட நினைச்சா???"

"என்னைப் பார்த்தா அப்படியா தெரியுது உங்களுக்கு?, எனக்கு வர்ற ஒரே விசயம் படிப்பு தான்-ங்க! ஆனா.. உங்களுக்கு அப்படியில்ல. எவ்ளோ அழகா படம் வரையறீங்க?, உங்க கலெக்ஷனெல்லாம் பார்த்தேன்! சான்ஸே இல்ல! ஒரு ஆர்ட் கேலரியே வைக்கலாம்!"

"நிஜமாவா சொல்றீங்க??"

"ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு திறமை இருக்குங்க. சும்மா என்னோட உங்களைக் கம்பேர் பண்ணிக்காதீங்க! என்னைப் பத்தி எங்கம்மாக்கிட்ட கேளுங்க! என் பையன் ஒரு சோம்பேறி,தெண்டத் தீவட்டின்னு பச்சை,பச்சையா திட்டுவாங்க"

"ஹாஹாஹாஹா"

"ஹப்பாடா! சிரிச்சுட்டீங்களா?, உங்களை ரொம்ப,ரொம்பப் பிடிச்சுப் போனதால தான்-ங்க இவ்ளோ அவசரமா கல்யாணம் பண்ணிக்கிறேன். என் வேலைல கான்சென்ட்ரேஷன் ரொம்பவும் முக்கியம்ங்க. ரெண்டு மாசமா உங்க நினைப்பு என்னை டிஸ்ட்ராக்ட் பண்ணிட்டே இருந்தது! உங்களோட பேசவும், அந்தக் காட்டுக்குள்ள வசதியில்ல. அதான்.. டைரக்ட்டா கல்யாணம்! புரிஞ்சதா உங்களுக்கு??"

உள்ளே குளிர்ந்தாலும் காட்டிக் கொள்ளாமல் தலை குனிந்தபடி "ம்ம்ம்ம்" என்றாள்.

"இந்த வெட்க ஃபேஸைத் தான்-ங்க ரொம்ப மிஸ் பண்ணேன்!."

"......"-அதிகமாய் வெட்கப்படத் தோன்றியது அவளுக்கு.

"இப்போ கைப் பிடிச்சா செருப்பைக் கழட்டிட மாட்டீங்களே!"

"மாட்டேன்" - அவள் தலையாட்டியதும், மாலை மறைவில் கையைப் பற்றியவன் அதன் பின்பு விடவேயில்லை!

அடுத்தடுத்த சம்பிரதாயங்களை முடித்து ஜீவன் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தத் தனிமையைக் கொடுத்து இரவில் அவன் அறைக்கு அவளை அனுப்பி வைத்தனர் ஜீவனின் வீட்டார்.

"என்ன பூ டெக்கரேஷன் எதுவுமேயில்ல??, குறைஞ்சபட்சம் ஊதுபத்தி வாசனை கூட இல்லை??" - அறையைச் சுற்றிச் சுற்றிப் பார்த்த ரோஹினி, இதைக் கூறினாள்.

"ஹாஹாஹா. உங்களுக்கு அதெல்லாம் பிடிக்குமா என்ன?"

"ச்ச,ச்ச, மணி வேஸ்ட்! பூ வேஸ்ட்! எனக்கு அதிலெல்லாம் இஷ்டமில்ல. உங்களுக்கு?"

"எனக்கும் இஷ்டமில்ல! அதெல்லாம், 'மூட்' மெயிண்டைன் பண்றதுக்காக வைக்கப்படுற சமாச்சாரங்கள்! எனக்குத் தான் உங்களைப் பார்த்தாலேஏஏஏ......"

"ஏய்ய்ய்ய்ய்"

"சரி, கோபப்படாதீங்க" என்றவன் திடீரென "மச்சுக்குப் (மொட்டை மாடி) போகலாமா?" என்று வினவினான்.

"இப்போஒஒவா??"

"ஆமாம்..."

"யாராவது பார்த்துட்டா??"

"யாரும் பார்க்க மாட்டாங்க, வாங்க" - என்றவன் அவளை அழைத்துக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தான்.

கல்யாணக் களைப்பில் ஹாலில் படுத்திருந்த அனைவரும் ஆழ்ந்த உறக்கத்திற்குச் சென்றிருக்க.. அடி மேல் அடி வைத்து மெல்ல அவர்களைக் கடந்தனர்.

"என் கொள்ளுப் பாட்டி 'சௌண்ட் சரஸ்' காலை மட்டும் மிதிச்சுடாதீங்க, விடியுற வரைக்கும் வாயை மூடாது" - ஜீவன்

"யாரு, இந்த ப்ரௌன் கலர் சாரியா?"

"ஆமாமா, எதுக்கும் நீங்க இந்தப் பக்கம் வாங்க" - குசுகுசுவெனத் தங்களுக்குள் பேசியபடி மொட்டைமாடியை அடைந்தனர் இருவரும்.

கார்காலத்திற்கும், பனிக்காலத்திற்கும் இடைப்பட்ட காதல் காலம் அது! வான் கடலில் நிலவும்,நட்சத்திரங்களும் மெல்ல நீந்தி, விடியலை நோக்கிப் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் நள்ளிரவு வேளை!

உடலைத் தொட்டுச் செல்லும் காற்றின் ஈரப்பதத்தை உணர்ந்தபடி, சுவற்றில் சாய்ந்து கொண்டு நான்கடி இடைவெளியில் நின்று எதிரில் தெரிந்த வயல்வெளியை வெறித்துக் கொண்டிருந்தனர் ஜீவனும்,ரோஹினியும்.

குளிரின் தாக்கத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், "ஷ்ஷ்" என்றபடிச் சேலை தலைப்பால் அவள் தன்னைப் போர்த்திய நொடி "இருங்க,இருங்க" என்று அவளைத் தடுத்தான் ஜீவன்.

"நான் ஒருத்தன் இங்கிருக்கும் போது, சேலைக்கு ஏன் வேலை வைக்கிறீங்க?" என்று விட்டுப் புரியாமல் விழித்தவளின் அருகே வந்துப் பின்னிருந்து அவளைக் கட்டிக் கொண்டான்.

முதல் முறையாக அணைக்கிறான். சருமம் கூசிச் சிலிர்த்து, பின் கழுத்தில் பரவியிருந்த முடிகளனைத்தும் "டைங்ங்ங்" என நின்று கொள்ள.. படபடவென அடித்த இமைகளைக் கட்டுக்குள் கொண்டு வர எண்ணித் தலை குனிந்தாள் அவள்.

"நிமிர்ந்து என்னைப் பாருங்க" - காதோரத்தில் அவன் குரல் இசையாய் ஒலித்தது.

தூக்கமும்,தயக்கமும் நிரம்பிப் போயிருந்த விழிகளை மெல்ல உயர்த்தி தன் பின்னாலிருந்தவனை நிமிர்ந்து நோக்கினாள் அவள்.

"அன்னிக்குக் கோவில்ல கூட இதே மாதிரி தான் பார்த்தீங்க, அப்பவே தோணுச்சு"

"என்னன்னு?"

"உங்களைக் கிஸ் பண்ணனும்ன்னு" - பெரிய விழிகளை அவள் முழுதாய் விரிக்கையில் குனிந்து அவள் நெற்றியில் அழுந்த இதழ் பதித்திருந்தான் அவன்.

இறுகக் கண் மூடியவள் தன் விழிகளைத் திறந்து அவனை நோக்கும் போது.. அதில் கரை புரண்டோடியக் காதலைக் கண்டு வியந்து.. அவள் மேலும் தன் கண்களை விரித்த சமயம்.. அவளைத் தூக்கி அருகேயிருந்த மேடையில் அமரச் செய்திருந்தான் அவன்.

"பொன்னுங்க கூடப் பேசத் தெரியாது, ஃப்ளர்ட் பண்ணத் தெரியாது, காதலிக்கத் தெரியாதுன்னு என்னென்னவோ சொன்ன மனுஷன், இன்னிக்கு என் பர்மிஷன் கூடக் கேக்காம, இப்படியெல்லாம் பண்றீங்க??" - ஒற்றைப் புருவத்தைத் தூக்கி நக்கலுடன் வினவியவளிடம் சிரித்து மீண்டும் அவள் புருவத்தின் மீது இதழ் ஒற்றினான்.

"ஃபர்ஸ்ட் 2 செண்டென்ஸ் ஓகே!, காதலிக்கத் தெரியாதுன்னு நான் எப்போ சொன்ன்னேன்?, சத்தியமா உங்கக்கிட்ட மட்டும் தான்-ங்க இதெல்லாம் தோணுது!"

"நம்பிட்டேன், நம்பிட்டேன்"

"நீங்க வேணா, செல்வம் மாமா கிட்டக் கேட்டுப் பாருங்களேன்"

"ஆமாமாம், அவர் அப்படியே உண்மையைக் கொட்டிடுவார்"

"ஹாஹாஹா, உங்கப்பாவை அவர் கோட்டிப்பயன்னு சொன்ன கோபம் இன்னும் தீரலையா உங்களுக்கு?, ஆனா மனுஷங்களைக் கணிக்கிறதுல மாமா எக்ஸ்பர்ட்ங்க! உங்கப்பா.. நிஜமாவே லூசு தான்!"

"ஹலோ!, என்ன திமிரா?"

"ச்ச,ச்ச இல்லங்க. சாரி! இனிமே உங்கப்பாவை அப்படிச் சொல்ல மாட்டேன்!"

"ஹ்ம்ம்,அந்த பயம் இருக்கட்டும்"

உதட்டை மடக்கிச் சிரித்தவனின் தோளில் அவள் அடிக்கவும், அவள் கையைப் பற்றிக் கொண்டவன்.. "உங்க பெயிண்டிங்கெல்லாம் நிஜமாவே சூப்பரா இருந்ததுங்க" என்றான்.

"நிஜமாவா??" - இதழ் விரிய குதூகலமாய் ஒலித்தது அவள் குரல்.

"நிஜமா!, இதைக் கொஞ்சம் சீரியசா எடுத்துப் பண்ணா.. உங்களுக்கு இதுல ப்ரைட் :.ப்யூச்சர் இருக்கு"

"தேங்க்ஸ், தேங்க்ஸ்!, உங்களுக்கு இந்த மாதிரி விசயங்களும் பிடிச்சிருக்கிறது ரொம்ப ஆச்சரியமா இருக்கு!, பெரிய படிப்ஸ்ங்கல்லாம், பொதுவா கோ-கர்ரிகுலர் ஆக்டிவிடிஸ்ல இண்ட்ரெஸ்ட் காட்ட மாட்டாங்க"

"யார் சொன்னா?, என்னை எக்ஸெப்ஷன் லிஸ்ட்ல வைங்க"

"ஏன்?"

"ஏன்னா.. எனக்கு கிட்டார் வாசிக்கத் தெரியும். அப்புறம், நல்லா பாட்டு பாடுவேன்! ஏழு வருஷம் முறையா கத்துக்கிட்டேன்"

"ரியலி??"

"என் கொள்ளுப்பாட்டி சரஸ் மேல சத்தியம்ங்க"

"எங்க, ஒரு பாட்டு பாடுங்க பார்ப்போம்" - இடது கையை மேடை மீது வைத்துத் தலையைப் பின்னுக்குச் சாய்த்து அவளிடம் உரையாடிக் கொண்டிருந்தவனின் புறம் நன்றாகத் திரும்பி அமர்ந்தவள் உற்சாகமாய் வினவினாள்.

"என்ன பாட்டு பாட??"

"ஏதாவது.. இப்போ இருக்கிற சூழ்நிலைக்கு ஏத்த மாதிரி??" - வழக்கம் போல் அவள் இதழ்களோடு போட்டிப் போட்டுக் கொண்டு பேசிய கண்களுடன், ஆர்வமாய்க் கூறினாள்.

"ஹ்ம்ம்ம்ம்ம்" என்று யோசித்தவன், பாடினான்.

'நேற்றைய பொழுது கண்ணோடு..

இன்றைய பொழுது கையோடு....

நாளைய பொழுதும் உன்னோடே....

நிழலாய் நடப்பேன் பின்னோடே.....'

-லேசாயத் தலையாட்டியபடி அவள் மீதிருந்துப் பார்வையைத் திருப்பாமல் கம்பீரக் குரலுடன் பாடியவன் மீது ஆயிரத்திப் பத்தாவது முறையாகக் காதல் கொண்டாள் ரோஹினி.

திறந்த வாயுடன் ஆ-வென நோக்கியவள், பின் தலை குனிந்து விரல்களைப் பார்த்தபடி "இது ஃபீமேல் லைன்ஸ் ஆச்சே" என்றாள்.

"அதனால என்ன?, நான் உங்க பின்னாடி நிழலா நடந்துட்டுப் போறேன்!, ஃபர்ஸ்ட் டைம் பார்த்தப்பவே டிசைட் பண்ணிட்டேன், நீங்க தான் என்னை டாமினேட் பண்ணப் போறிங்கன்னு!"

"என்ன?, விட்டா.. 'ஆலம்பனா.. நான் உங்கள் அடிமைன்னு' ஒப்புதல் வாக்குமூலம் கொடுப்பீங்க போல?"

"பார்த்தீங்களா?, ச்ச,ச்ச அப்படியெல்லாம் இல்ல,நான் உங்களை டாமினேட் பண்ண மாட்டேன்னு சொல்ல மாட்டேன்றீங்க??"

"ம்ஹ்ம், நெல்லை-ல வாழ்ந்தாலும் நான் மதுரை மீனாட்சி மாதிரி" என்றவள் அமர்ந்திருந்த மேடையிலிருந்துக் குதித்திறங்கினாள்.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை பச்சைப் பசேலெனத் தெரிந்த வயல்வெளியைக் கண்டபடி "இந்த வயல் வரப்பெல்லாஆஆஆம் உங்களோடது தான்னு உங்கம்மா பெருசா பீத்திக்கிட்டாங்க??, எல்லாம் பொய் தான?" என்றாள்.

"என்னங்க, வந்த நாளே என் அம்மாவை வம்புக்கு இழுக்கிறீங்க?"

"பின்ன?, மாமியார்-மருமகள்ன்னா சும்மாவா?" என்றவள் கொட்டாவியை வெளியிட்டபடி "தூக்கம் வருது, கீழ போகலாமா??" என்று கண்ணைக் கசக்கினாள்.

அருகே வந்து அவள் கண்களிலிருந்தக் கைகளைத் தன் இரு கையால் பற்றிக் கொண்டவன் "மிஸஸ்.ரோஹினி ஜீவானந்தம், இவ்ளோ நேரம் நாம விடாம பேசிக்கிட்டது வெறும் வார்ம்-அப் தான்!, மிச்ச சொச்ச சம்பவத்தையெல்லாம் முடிக்காம இப்படிக் கண்ணைக் கசக்கக் கூடாது" என்றான்.

உள்ளுக்குள் சிரிப்பு வந்தாலும் மறைத்து "என்ன மிச்ச சொச்ச சம்பவம்??" என்றாள்.

ஒருபுறமாக உதடு வளைய.. அவளைக் காணும் போதெல்லாம் கண்களில் அவ்வப்போது எட்டிப் பார்க்கும் போதை, இன்று மொத்தமாய் விழியை நிரப்ப.. அவள் இடையைப் பற்றி அருகில் இழுத்து, அவளை இறுக அணைத்துக் கொண்டவன்.. குனிந்து அவள் காதில்..

"மாமன்காரன் தானே, மாலை போட்டதாலே..

மோகம் தீரவே.. மெதுவாய்.. மெதுவாய்த்.. தொடலாம்....." எனப் பாடினான்.

எதற்கென்றே தெரியாமல் இறுக்கமாய் மூடிக் கொண்ட இமைகளிரெண்டும், அவளது கருமணிகளுக்குக் காவல் இருக்க, முகத்தை அவன் மார்பில் அழுத்தி மொத்தமாய்ப் புதைந்திருந்தாள் அவள்.

அவள் முகத்தை நிமிர்த்தி நோக்கியவனின் கண்கள் மோகத்தில் மிளிர.. குனிந்து அவளைத் தூக்கிக் கொண்டு அறையை நோக்கி நடந்தான் ஜீவன்.

## அத்தியாயம் - 5

**ஹா**ஆஆஆவ்வ்வ்வ்வ் - கொட்டாவியை வெளியிட்டபடிக் கண்ணாடியைக் கழட்டிக் கண்களைத் துடைத்தேன் நான். மணி அதிகாலை இரண்டைத் தொட்டிருந்தது. ஜீவன்-ரோஹினியின் காதல் போராட்டத்தைக் காண ஆரம்பித்ததில் நேரம் போனதேத் தெரியவில்லை. தூக்கம் கண்களை மூடச் செய்தாலும், உறங்கும் எண்ணம் கொஞ்சம் கூட இல்லை எனக்கு! இவ்ளோ அந்நியோன்யமா இருந்தவங்க, ஏன் பிரிஞ்சாங்க??, அங்கிளுக்கு ஈக்வலா ஆண்ட்டியும் தான் அவரை லவ்வுது!! பின்ன என்னப் பிரச்சனை??, மடிக்கணிணியைத் தூக்கிப் படுக்கையில் வைத்து, நன்றாகக் காலை நீட்டிப் படுத்துக் கொண்டு அடுத்த ஸ்டேட்டஸைப் படித்தேன்.

**"மழையில் கழுவிய மணலிலே.. தொலைந்த காலடி நானடி!!"**

"**ரோஹினி** மேடம்.. உங்களைப் பார்க்க ஒருத்தர் வந்திருக்கார்." - ப்யூன் வந்து அழைத்ததும் 'இண்ஸ்ட்டிடியூட் வரைக்கும் தேடி வர்ற ஆள் யார்' என்ற யோசனையுடன் ஸ்டாஃப் ரூமை விட்டு வெளியே வந்த ரோஹினி வராண்டாவில் அமர்ந்திருந்த ஜீவனைக் கண்டுப் புருவத்தைச் சுருக்கினாள்.

அவளைக் கண்டதும் எழுந்து நின்றவன் "மார்னிங்-ல இருந்து கால் பண்றேன், பதிலே இல்லை. அதான் என்னாச்சோன்னு தேடி வந்தேன்-ங்க" என்றான்.

"...போன் கொஞ்சம் ப்ராப்ளம், சார்ஜ் இல்லாம ஆ..ப் ஆயிடுச்சு. ஆதியை நீங்க பிக்-அப் பண்ணிக்கிறதா நேத்து சொன்னீங்களே?, எங்க அவன்??"

"வெளியே இருக்கான். நான் வந்தது அதுக்கில்லங்க. வேற ஒரு விஷயமா."

"என்ன?"

"ஊர்ல இருந்து அம்மா,அப்பா வந்திருக்காங்க. குழந்தைகளை அழைச்சிட்டுப் போக! ஹாலிடேஸ் ஸ்டார்ட் ஆகுதில்லையா?, அதான்... நீ..நீங்க என்ன சொல்றீங்க?, அனுப்பி வைக்கட்டுமா?"

"அதிதி ஓகே! சமாளிச்சுப்பா! ஆதி அப்படியில்லையே!, நீங்களோ,நானோ இல்லாட்டி சமாளிக்கிறதுக் கஷ்டம்"

"அதெல்லாம் அம்மா பார்த்துப்பாங்க"

"யாரு?, உங்கம்மா??, அப்படியே பார்த்துக் கிழிச்சிடும்!" - டிவர்ஸ் ஆனாலும் மாமியார் மீதிருக்கும் கடுப்பு மாத்திரம் மாறாது போலும்!

"எங்கம்மா இல்லங்க. உங்கம்மா"

"என் அம்மாவா??" - புருவத்தைச் சுருக்கி அதிர்ச்சியுடன் வினவினாள் அவள்.

"ஆமாங்க. அத்தையும்,மாமாவும் வந்திருக்காங்க. பசங்களை அழைச்சிட்டுப் போக!"

"பொன்னே வேண்டாம்ன்னு என்னை ஒதுக்கி வைச்சிருக்காங்க, நான் பெத்த பிள்ளைங்க மேல மட்டும் என்ன பாசம் வேண்டிக்கிடக்கு?"

"ஒதுக்கி வைச்சது அவங்க இல்ல. நீங்க தான்."

"ப்ச், எது எப்படியோ!, என்னால அவங்களோடெல்லாம் அனுப்ப முடியாது."

"இது தப்புங்க ரோஹினி. குழந்தைகளுக்கு அவங்களோட தாத்தா,பாட்டிக் கிட்டயிருந்துக் கிடைக்கிற நியாயமான பாசத்தைத் தடுக்கிறது பாவம்-ங்க!, ப்ளீஸ், சரின்னு சொல்லுங்க"

"இப்போ எங்க இருக்காங்க அவங்க?"

"இங்க தான்-ங்க, இண்ஸ்டிடியூட் வாசல்ல, கார்ல இருக்காங்க" - அவனுக்குப் பதில் சொல்லாமல் விடுவிடுவென வாசலை நோக்கி நடந்தவளின் பின்னே ஓடாத

குறையாகச் சென்றான் ஜீவன். என்ன பேசி அவர்களைப் புண்படுத்தப் போகிறாளோ! என்ற பதைபதைப்புடன்!.

"எதுவும் கோபமாப் பேசிடாதீங்க. அத்தை இத்தனை வருஷத்துக்கப்புறம் இப்போ தான் சென்னை வந்திருக்காங்க" - எப்படியேனும் சமாதானப்படுத்தி விடும் நோக்கத்துடன் ஜீவன்.

அவள் அதற்கும் பதில் கூறவில்லை.

அங்கிருந்த மரத்தடியில் நின்றிருந்த 'டஸ்டர்' அருகே சென்றவள், காரை விட்டு வெளியே நின்றத் தந்தையிடம் தொடங்கினாள்.

"நேத்து ஃபோன்-ல பேசும் போது கூட நீங்க வர்றதா சொல்லலப்பா?.என்ன திடீர்ன்னு?" - என்றவளின் பார்வை காரினுள்ளே அமர்ந்திருந்த அன்னையிடம் சென்றது.

அவரும் அவளுக்குச் சளைக்காதப் பார்வையுடன் தான் அமர்ந்திருந்தார். வெர்ரி குட் மம்மி! வெர்ரி குட் டாட்டர் அண்ட் வெர்ரி நைஸ் ஃபேமிலி!

லேசாகத் தலையைச் சொறிந்தான் ஜீவன்.

"அவங்க சொகுசா காருக்குள்ள ஏசி-ல உட்கார்ந்துருக்காங்கள்ல, நீங்க மட்டும் ஏன் வெயில்ல நிற்கிறீங்க?" - அணிந்திருந்தச் சட்டையின் மீதிருந்தத் துண்டினால் நெற்றியைத் துடைத்தவரைத் திட்டினாள் ரோஹினி.

கெடாமீசை டாடி உண்மையில் ஒரு அப்பாவி! அப்படியே தன்னைப் போல்!- ஜீவன் மனதுக்குள் எண்ணிக் கொண்டான்!

"வயசான காலத்துல அம்மா-ன்னு ஒருத்தி எப்படியிருக்கிறான்ற நினைப்புக் கூட இல்லாம. இவளால எப்படி மாப்ள மனசாட்சி இல்லாம இருக்க முடியுது??.ஆமா, இவக் கிட்ட அதையெல்லாம் எதிர்பார்க்க முடியுமா?, மனசாட்சி இருந்திருந்தா, உங்களைப் போய் வேண்டாம்ன்னு ஒதுக்கி வைப்பாளா??" - குமுறலுடன் சத்தமாய் வந்தது மரகதம்மாளின் குரல்.

"இவங்களோட நான், என் குழந்தைகளை அனுப்பனுமா?, நிச்சயமா முடியாது" - ஜீவனைப் பார்த்துக் கூறி விட்டுக் கையைக் கட்டிக் கொண்டுத் திரும்பி விட்டாள் அவள்.

"என்னடி உன் குழந்தைங்க??, நீ மட்டும் தனியாவா பெத்துக்கிட்ட?, இதுங்க, என் மாப்ளையோடக் குழந்தைங்கடி!, நீ என்ன அனுமதி கொடுக்கிறது?"

"மாப்ளயாம், மாப்ள! எனக்கு அவர் புருஷனே இல்லன்னு கோர்ட் சொல்லிடுச்சு! இவங்க பெருசா உரிமை கொண்டாடுறாங்க!"

"புருஷனே இல்லாமத் தான் அவர் கட்டுனத் தாலியைக் கழுத்துல போட்டிருக்கியாடி?"

உஷ்ண மூச்சுடன் அவர் புறம் திரும்பியவள் "நீ பார்த்தியா?, நான் போட்டிருக்கேன்னு நீ பார்த்தியா??," என்றவள் கழுத்திலிருந்த ஒற்றைச் செயினைக் காட்டி "இதைத் தவிர வேற எதையும் நான் கழுத்துல மாட்டிக்கல, தெரிஞ்சுக்க" என்றாள்.

"அய்யோஓஓஓ!! எந்தப் பொன்னாவது இப்படிப் புருஷன் உயிரோட இருக்கும் போதேத் தாலி இல்லாமத் திரிவாளா?, என் வளர்ப்பையே அசிங்கப்படுத்துறாளே!" - என்றபடி மரகதம்மாள் கண்ணீர் விட... வாயில் விரல் வைத்தபடி அவர் முகத்தையேப் பார்த்துக் கொண்டிருந்த ஆதித்யனைக் கண்டு "அத்தை, அத்தை கொஞ்சம் அமைதியா இருங்க. ஆதி உங்களையே பார்க்குறான்" என்று எரிச்சல் குரலில் இடையிட்டான் ஜீவன்.

மாப்பிள்ளையின் குரலுக்குக் கட்டுப்பட்டு உடனேக் கண்களைத் துடைத்து, மூக்கை உறிஞ்சிக் கொண்டவர் "என் சாமி!, நீ ஆத்தாவோட, ஊருக்கு வர்றியா ராசா?" என்று கேட்க.. அவனும் சரியெனத் தலையாட்டினான். வெற்றிச் சிரிப்புடன் மகளை நோக்கியவர் "ஹ்ம்" எனத் திரும்பிக் கொண்டார். கோட்டிப்பயக் குடும்பம்!

அவர் பேரனைக் கொஞ்சத் தொடங்கியதும் ரோஹினியின் புறம் திரும்பினான் ஜீவன்.

"நீங்க என்னங்க அவங்களுக்குச் சரிக்குச் சரியா பேசிட்டிருக்கீங்க?"

"பின்ன?, ஏன் என்னைக் கடுப்பேத்துற மாதிரியே பேசுறாங்க?"

"அவங்க ஆதங்கத்தைப் பேசித் தீர்த்துக்கிறாங்க, இதுல உங்களுக்கு என்ன எரிச்சல்?"

"ப்ச்"

"இப்போ முடிவா என்ன தான் சொல்றீங்க?"

"என்னமோ பண்ணுங்க!, எனக்குக் க்ளாஸ் இருக்கு. நான் போறேன்"

"ரோஹினி... இரும்மா.. அம்மா உனக்கு முந்திரிக்கொத்து செஞ்சு கொண்டு வந்திருக்கா. வாங்கிக்கோம்மா" - கெடாமீசை

"எனக்கா இல்ல உங்க மாப்பிள்ளைக்கா?"

"உனக்கு என்ன இதுக்குடி நான் செஞ்சு கொண்டு வரப் போறேன்?, பாவம் மனுஷன், இந்த வயசுல நல்ல சாப்பாட்டுக்கு வழியில்லாம, மெலிஞ்சு போய்க் கிடக்குறார்!, இவளைப் பாருங்க, 3 வேளை நல்லா வக்கணையாத் தின்னுட்டுச் சிலை மாதிரி இருக்கா" - மரகதம்மாள்.

"அதான் சொல்லிட்டாங்கள்ல?, அவருக்கேக் கொடுங்க. கொட்டிக்கட்டும்!" - என்றவள் அங்கே நிற்காமல் விறுவிறுவெனச் சென்று விட்டாள்.

அன்றிரவே ரோஹினியின் பெற்றோருடன் குழந்தைகள் நெல்லைக்குச் செல்லத் தயாராக, ஆதியின் துணிமணிகளை வாங்க மீண்டும் ரோஹினியைச் சந்தித்தான் ஜீவன்.

வீட்டினுள்ளே கூட அனுமதிக்காமல் வாசலிலேயே துணிப்பையை நீட்டியவளிடம் "அவனோட 'டாய்' ஏதோ கேட்டான்-ங்க. பேரு மறந்துட்டேன்" என்றான்.

"எடுத்து வைச்சுட்டேன்! உள்ளே இருக்கு"

சரியெனத் தலையாட்டியவன் "நைட் கிளம்புறாங்க 4 பேரும்" என்றான்.

"எப்போ ரிடர்ன்??"

"10 நாள்ல திரும்பிடுவாங்க"

"எனக்கு நம்பிக்கையில்ல. ரெண்டே நாள்ல ஆதி அடம்பிடிச்சு இங்க வந்துடுவான். எங்கம்மாவுக்கு அவனைச் சமாளிக்கிற அளவு பொறுமையெல்லாம் கிடையாது"

"உங்களையே சமாளிச்சு வளர்த்துருக்காங்க. ஆதியைப் பார்த்துக்க மாட்டாங்களா?"

"என்ன நக்கலா?"

"......"- பதில் சொல்லாமல் ஒரு நிமிடம் அமைதியாக இருந்தவன் "ஒரு தடவை ஊருக்குப் போயிட்டு வரலாமில்லையா?, எத்தனை வருஷம் இப்படியே இருந்துட முடியும்? நான் வேண்டாம்ன்னு நினைக்கிறீங்க ஓகே!, அவங்களை ஏன் ஒதுக்குறீங்க?, பார்க்கும் போதெல்லாம் திட்டுனாலும், உங்கம்மா உங்களை ரொம்ப மிஸ் பண்ணுறாங்க" என்றான்.

"என் வீட்டுப் பிரச்சனையை நான் பார்த்துக்கிறேன். உங்க அட்வைஸ் எனக்கு வேண்டாம்" - திமிராக வந்தது அவளது பதில்.

வேறொரு ஆண்மகனாய் இருந்திருந்தால்.. கோபம் தலைக்கேறி.. ஏடாகூடமாக ஏதேனும் செய்திருப்பான். ஆனால் பூமாதேவியின் பொறுமையோடு போட்டி போடும் முயற்சியில் இறங்கியிருக்கும் ஜீவானந்தம் தலையைக் குனிந்தபடியே "அப்போ நான் கிளம்புறேன்-ங்க" எனக் கூறி முன்னே நடந்தான்.

இரண்டடி நடந்தவன் மீண்டும் அருகே வந்து, கையிலிருந்தச் சிறிய பை ஒன்றை அவள் காலடியில் வைத்து "உங்கம்மா செஞ்ச முந்திரிக்கொத்து. சாப்பிடுங்க" என்று விட்டுத் திரும்பிப் பார்க்காமல் சென்று விட்டான்.

கையைக் கட்டிக் கொண்டு நேர் வெறித்தபடி நின்றிருந்த ரோஹினி, விரல்களை அழுந்த மூடித் தன்னையே அடக்க முயன்றாள்! கோபத்தை அல்ல! அழுகையை!

குழந்தைகள் இல்லாத வெறுமை ரோஹினியை ரொம்பவேத் தாக்கியது. ஜீவனைப் பிரிந்த இந்த ஐந்து வருடங்களில் ஒரு முறைக் கூட அவள் தனிமையை உணர்ந்ததில்லை. அதற்குக் காரணம் அவளது குழந்தைகள்! பெற்றோர்,சொந்தபந்தம் என யாரையும் அவள் அனுமதித்தில்லை. குழந்தைகள் தான் அவள் உலகம்! இத்தனை வருடங்களில் ஒரு முறை கூட அவர்களைப் பிரிந்ததுமில்லை!

அதிதி,ஆதி சென்று இரண்டு நாட்கள் கூடக் கடந்திருக்காது. இரவில் தூக்கமில்லாமல் மடிக்கணிணியும்,செல்-போனுமாய்த் தான் திரிகிறாள். குழந்தைகள் என்ன செய்கிறார்கள் என்று அன்னைக்கு அலைபேச ஈகோ இடம் கொடுக்க மாட்டேன் என்கிறது. ஜீவனிடம் கேட்டால், 4 பக்கத்திற்கு அட்வைஸ் மழையைப் பொழிவான்! பொறுத்துக் கொள்ள முடியாமல் அவள் பதிலுக்கு ஏதேனும் பேசி வைத்தால்.. உம்மென்ற முகத்துடன் அமைதியாய்ச் சென்று விடுவான்! அதைத் தாங்கிக் கொள்ளவே முடியாது! இந்த வாண்டுகளும் கூட அங்கே சென்றதும், அவளை மறந்து விட்டதுகள்!

எரிச்சலுடன் அவள் புலம்பிக் கொண்டிருக்கையில் ஜீவனிடமிருந்து அழைப்பு வந்தது. நினைத்ததும் அழைக்கிறானே!! பரபரப்புடன் படுக்கையிலிருந்து எழுந்து -போனைக் காதில் வைத்தாள்.

"ஹலோ" - ரோஹினி

"தூங்கிட்டீங்களா?"

"இல்ல.இல்ல. முழிச்சுத் தான் இருக்கேன். சொல்லுங்க. ஆதி அழறானா?. அம்மா ஃபோன் பண்ணாங்களா?" - வரிசையாய்க் கேள்வி கேட்டவளைக் கண்டு அந்தப் பக்கம் "ஹாஹாஹா"-வெனச் சத்தமாய்ச் சிரித்தான் அவன்.

"என்ன சிரிப்பு?"

"உங்களுக்கு என்னங்க அப்படியொரு ஈகோ?. உங்கப்பாவுக்கு ஃபோன் பண்ணி கேட்க வேண்டியது தானே?"

"எங்கப்பாக்கு 'கால்' பண்ணா, வேணும்ன்னே எங்கம்மா ஃபோன் எடுக்குறாங்க"

"ஹாஹாஹா.. அத்தை உங்களை மாதிரிங்க"

"ப்ச். குழந்தைங்க எப்படியிருக்காங்க?. அதைச் சொல்லுங்க முதல்ல"

"அத்தை அடைதோசை சுட்டுத் தந்தாங்களாம்!. சாப்பிட்டு நல்லத் தூக்கமாம்"

"ஓஹோ........"

"ரோனிக்கு இதெல்லாம் தெரியாதா ஆத்தா. ஒரு முறைக் கூட பண்ணித் தந்ததில்லையேன்னு கேட்ருக்காங்க"

"எங்கம்மா கழுவி ஊத்திருப்பாங்களே உடனே?. இதைச் சொல்லி என்னைக் கடுப்பேத்தத் தான் ஃபோன் பண்ணீங்களா?"

"சாரிங்க. டென்ஷன் ஆகாதீங்க"

"நீங்க ஃபோனைக் கட் பண்ணுங்க முதல்ல. வந்துட்டாரு. மனுஷனைக் கடுப்பேத்துறதுக்குன்னே"

"ஏங்க,ஏங்க. வைச்சுடாதீங்க ப்ளீஸ்"

"சொல்லுங்க"

"அதிதி இல்லாம. வீடு கொஞ்சம் டல்லா இருக்குதுங்க"

"ஹ்ம்ம். இங்கயும் தான்"

"நீங்க இல்லாதப்போக் கூட நான் இப்படித் தான்-ங்க ஃபீல் பண்ணினேன்"

"............"

"லைன்ல இருக்கீங்களா??"

"______"

"இருப்பீங்க, ஆனா பதில் சொல்ல மாட்டீங்க."

"______"

"என்னோட வந்துடுங்களேன்... ப்ளீஸ்....." - இறைஞ்சலுடன் ஒலித்தது அவன் குரல்.

"______"

"நிறைய பேர் டிவர்ஸ் வாங்கினப்புறம் கூட ஒன்னு சேர்ந்திருக்காங்க. சினிமால-லாம் பார்த்திருக்கோமே!, ஊர்,உலகம் என்ன சொல்லுமோன்னுத் தயக்கப்படாதீங்க"

"ஆமா, ஊர்,உலகத்துக்காகத் தான் நாம உயிர் வாழ்ந்துட்டிருக்கோம்!"

"பின்ன என்னங்க?, வந்துடுங்களேன்.............."

"______"

"எல்லா விசயத்துலேயும் ரொம்பத் தெளிவா யோசிக்கிறீங்க, பேசுறீங்க! ரொம்ப மெச்யூர்டா நடந்துக்கிறீங்க. ஆனா.. என் சம்பந்தப்பட்ட விசயத்துல மட்டும் ஏன் இவ்ளோ ஈகோ பார்க்குறீங்க?, முடியலங்க....... சீரியஸா.....!! கடைசில என்னை, டீனேஜ் பையன் மாதிரி பேச வைச்சுட்டீங்க" - லேசாய்ச் சிரித்தான் அவன்.

உதட்டைக் கடித்தபடி, எதிரில் தெரிந்தக் கண்ணாடியில் தன்னை நோக்கினாள் ரோஹினி. கண்களில் லேசாக நீர் தேங்கியிருக்கிறதோ??

"இன்னிக்கு பி.பி செக் பண்ணேன்ங்க. அதிகமா இருக்கிறதா டாக்டர் சொன்னார். ஸ்ட்ரெஸ்ஸைக் குறைங்கன்னு அட்வைஸ் வேற!"

"______"

"நான் தெம்பா,நல்லாயிருக்கிற வரைக்கும் ஓகே-ங்க! திடீர்ன்னு ஸ்ட்ரோக்,ஹார்ட்-அட்டாக்ன்னு எதுவும் வந்துட்டா... பக்கத்துல நீங்க இல்லாட்டிக் கொஞ்சம் கஷ்டம்-ங்க! வயசாயிடுச்சுல்ல??" - இப்போதும் சிரித்தான் அவன்.

"கொஞ்சம் வாயை மூடுங்க" - பல்லைக் கடித்தபடி பதில் வந்தது அவளிடமிருந்து.

வெகு நேரமாக அவன் செய்த முயற்சியின் பலனாய் அவள் பதில் பேசியிருக்கிறாள். ஆனால்.. அவன் எதுவும் கூறாமல் நெடிய மூச்சொன்றை வெளியிட்டான்!

"ம்க்க்கும்" - ரோஹினி.

பதில் பேசு என்கிறாளாம்.

சிரிப்பு வந்தது ஜீவனுக்கு. சில்லி! சைல்டிஷ்! அடமெண்ட்! ஈகோயிஸ்ட்டிக்! எத்தனையோ வார்த்தைகள் இருக்கிறது அவளைப் பற்றிச் சொல்ல!

"கோபப்படுறீங்களா?, எதுக்குங்க?, ஸ்ட்ரோக்,ஹார்ட்-அட்டாக்ன்னு சொன்னதுக்கா?, நமக்கெல்லாம் சாவே வராதுன்னு நினைச்சுட்டீங்களோ??, எனக்கு மட்டுமில்ல. உங்கம்மா,அப்பா எல்லாருக்கும் இதே தான்! எல்லாம் கை மீறிப் போனப்புறம் அழுது,புலம்புற நிலைமை வந்துடக் கூடாதுன்னு நான் நினைக்கிறேன்-ங்க. தப்பா?? ம்??"

"........"

"எனக்காக யோசிங்க."

"........"

"யோசிப்பீங்களா???"

"........"

"இதுக்குப் பதில் சொல்றதால.. உங்க ஈகோவுக்கு எந்த டேமேஜூம் ஆய்டாதுங்க"

குழந்தைகளுடனான பிரிவு, இரவின் தனிமை, அன்னையின் கோப முகம், கடைசியாக ஜீவனின் வார்த்தைகள் அத்தனையும் அவளை சுனாமியாய்த் தாக்க... அவளையறியாமல் "யோசிக்கிறேன்" என்றாள்.

"தேங்க்ஸ்" - என்றவனும் மேலே எதுவும் கூறாமல் ..போனைக் கட் செய்தான்!

உண்மையில் ஜீவன் மீது அவளுக்கிருப்பதுக் கோபமல்ல! ஈகோ! தனக்காக அவன் ஆயிரம் நல்ல விசயங்களைச் செய்திருந்தாலும், அவன் செய்யாது விட்ட, ஒரு செயலுக்காகக் கோபப்பட்டு, அவனை வருத்தித் தன்னையும் வருத்திப் பிள்ளைகளையும்,பெற்றவர்களையும் இதற்கிடையில் தவிக்க விட்டு! Damn Ego! சிறு கல்லாய் மனதில் அமர்ந்துக் கடகடவென வளர்ந்து பெரும் பாறையாக மாறி, ஐந்து.. முழுதாக ஐந்து வருடங்களை முட்டாள்தனமாகக் கழிக்கச் செய்திருக்கிறது!

# அத்தியாயம் - 6

25-05-2013.

**சுக்மா, சத்திஸ்கர் மாநிலம்.**

CRPF என்றழைக்கப்படும் மத்திய ரிசர்வ் காவல்படை உள்நாட்டுத் தீவிரவாதங்களைக் கட்டுப்படுத்தி மக்களின் பாதுகாப்பிற்கு வழி செய்யும் வகையில் இந்திய அரசால் நியமிக்கப்பட்ட ஆயுதம் ஏந்திய காவற்படையாகும். மாவோயிஸ்ட்கள்,நக்ஸலைட்டுகளை எதிர்த்துச் சண்டையிடும் லா அண்ட் ஆர்டர் வேலையோடுச் சேர்த்து, தேர்தல் காலங்களில், பிரச்சனைக்குரிய மாநிலங்கள்,யூனியன் பிரதேசங்களில் அமைதியைக் காக்கவும், இவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

அடிக்கடிப் பணியிடம் மாற்றப்படும் வழக்கமிருந்ததால் இந்த முறை ஜீவனுக்குச் சத்திஸ்கர் மாநிலத்தின் சுக்மா என்ற கிராமத்தில் போஸ்டிங் கிடைத்திருந்தது.

சுக்மா மாவோயிஸ்ட்டுகளின் சாம்ராஜ்யம்! 'ரெட் காரிடார்' என்று போலீசாரால் பெயர் வைக்கப்பட்ட இரத்த பூமி! ஏகப்பட்ட சி.ஆர்.பி.எ:ப் ஆ:பிசர்களையும், அரசியல்வாதிகளையும் காவு வாங்கிய,இன்னும் வாங்கிக் கொண்டிருக்கும் சுடுகாடு! எப்போதும் பதட்ட சூழ்நிலை நிலவும் கிராமம்!

**அ**ன்று எதிர்க்கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதிகளால் மாவோயிஸ்ட்டுகளின் அட்டூழியங்களை எதிர்த்து சுக்மா கிராமத்தில் கண்டன யாத்திரை நடந்தது. மாவோயிஸ்ட்டுகள் எந்நேரமும் தாக்கக்கூடும் என்று ஆளும் மத்திய அரசு எச்சரிக்கை விடுத்தும் எதிர்க்கட்சி அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

கடைசியில் சுக்மாவில் கட்சி மீட்டிங்கை முடித்துக் கொண்டு எதிர்க்கட்சித் தலைவர்களும்,தொண்டர்களுமாய் 200 பேர் சென்ற 25 வண்டிகள், 'தர்பா வேலி' என்னும் அடர்ந்த காட்டையொட்டிய நெடுஞ்சாலையில் பயணித்துக் கொண்டிருந்த போது 250 பேர் கொண்ட மாவோயிஸ்ட் குழுவினரால், சக்தி வாய்ந்த வெடிகுண்டுகளை வைத்துச் சிதறடிக்கப்பட்டது.

கட்சியின் மூத்தத் தலைவர்கள், தொண்டர்கள், அவர்களுக்குப் பாதுகாப்பாகச் சென்ற சி.ஆர்.பி.எ:ப் ஆ:பிசர்கள் எனப் பலரைச் சுட்டுத் தள்ளியும்,கத்தியால் குத்தியும் கொன்றுக் குவித்த தீவிரவாதிகள், அவர்கள் வைத்திருந்த ஆயுதங்களை அள்ளிச் சென்றனர்.

சம்பவம் நடந்த ஒரு வாரத்திற்கு முன்பு சி.ஆர்.பி.எ.ஃப்-க்கும் மாவோயிஸ்ட்டுகளுக்கும் நடந்தத் துப்பாக்கிச் சூட்டில் 8 மாவோயிஸ்ட்கள் கொல்லப்பட, அந்தச் சம்பவத்திற்காகப் பழிவாங்கவே இந்தக் கொடூரத் தாக்குதலை நடத்தியதாக, அந்தக் கும்பல் செய்தி சொன்னது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில், எதிர்க்கட்சித் தலைவர்களின் பாதுகாப்பிற்கெனச் சென்ற சி.ஆர்.பி.எ.ஃப் அதிகாரிகளில் ஜீவனாந்தமும் ஒருவன். கடவுள் அருளால் உயிர்த்தப்பியவன் உடல் முழுதும் காயங்களுடன் அருகிலிருந்த அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான்.

அதிதிக்கு அப்போது ஆறு வயது. ஆதித்யன் பிறந்து முப்பதே நாட்கள் தான் கடந்திருந்தது. விடுமுறை கிடைக்காதக் காரணத்திற்காகப் பிறந்த குழந்தையை வந்து பார்க்கக் கூட முடியாத சூழ்நிலை ஜீவனுக்கு. இந்த நிலையில் இப்படியொருத் துயரச் சம்பவம்!

இதனால் ஜீவன்-ரோஹினியின் வீடு மொத்தமும் ஆடிப் போனது. இருவரது அன்னைகளும் அழுது தீர்த்தார்கள், ஆண்களோ சத்திஸ்கரை நோக்கிப் பயணப்பட்டார்கள். ஆனால்.. ரோஹினி, பயம்,பதட்டம்,ஏன் ஒரு சொட்டுக் கண்ணீரைக் கூட வெளிப்படுத்தவில்லை. மொத்தமாய் இறுகிப் போயிருந்தாள். அவளுடைய இந்த நிலையே மரகதம்மாளை பீதியாக்கியது.

ஓரளவு உடல்நிலை தேறியதும், ஜீவன் சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டான். தலை,கை,கால் என அத்தனையிலும் கட்டுக்கள்!, ஒரு பக்கக் கண் மீது, இமையிலிருந்துத் தொடங்கிப் புருவம் வரை நீளமாய் இரத்தக் கோடு! காயத்தால் வீங்கியிருந்த மேலுதடு, வற்றக் கூட இல்லை.

சோர்வுடன் படுக்கையில் கிடந்தவனை நோக்கியவளின் கண்களில் என்ன தெரிந்ததோ, அவளைக் கண்டதும் மெல்ல எழுந்தமர்ந்தான் அவன்.

"ஜூனியரைக் கூப்பிட்டு வரலீங்களா?, நான் அவனைப் பார்க்கனும்ங்க. அம்மா என்னைக் கட்டிலை விட்டு இறங்க விட மாட்டேன்றாங்க" - ஆர்வத்துடன் அவளை நோக்கினான்.

"கீழ இருக்கான். அப்புறமா அழைச்சிட்டு வர்றேன்"-ரோஹினி

"இல்லங்க. நான் இப்பவே பார்க்கனும். வாங்க போகலாம்" - காலைக் கீழே வைத்தவனின் தோளைப் பற்றி அமர வைத்தவள் "அப்புறம் பார்க்கலாம்ன்னு சொல்றேனே" என்று மிரட்டினாள்.

தன் தோளைப் பற்றிய அவள் கைகளை இழுத்து அணைத்துக் கொண்டவன், வலது கையிலிருந்த பெரிய கட்டைச் சபித்தபடி "கம்:-பர்டபிளா கட்டிப் பிடிக்கக் கூட முடியல" என்றபடி ஒரு கையால் அவளைச் சுற்றித் தன்னோடு இறுக்கிக் கொண்டான்.

"ரொம்ப பயந்துட்டீங்களா?, முகமே சரியில்ல"-ஜீவன்

"........"

"அம்மா சொன்னாங்க. விசயம் கேள்விப்பட்டதுல இருந்து நீங்க ரொம்ப அமைதியாய்ட்டதா! அவ்ளோ சீக்கிரமெல்லாம் நான் உங்களை விட்டுப் போயிட மாட்டேங்க. கொஞ்சம் சிரிங்க. ப்ளீஸ்..."

"........"

"ஏதாவது பேசுங்க" - கொஞ்சலாய் வந்தது அவன் குரல்.

நிமிர்ந்து அவனை நோக்கியவள் "எனக்காக ஒன்னு செய்வீங்களா?" என்றாள்.

இடது கையால் அவள் நெற்றி முடியை ஒதுக்கியவன் "சொல்லுங்க" என்றான்.

"இந்த வேலையை விட்டுடுங்க." - பட்டெனச் சொன்னவளின் முகம் எவ்விதக் கெஞ்சலையும் காட்டவில்லை! செய்கையில் யாசிப்பு இல்லை! அந்தக் கண்கள்.. அந்தக் கண்களில் மட்டும் ஒரு பயம்,மிரட்சி!

அவளை நன்றாகப் புரிந்து வைத்திருந்த ஜீவனால் அதை உணர முடிந்தது. இவள் இந்தச் சம்பவத்தால் மொத்தமாய் அரண்டு போயிருக்கிறாள். இந்தப் பயத்தைப் போக்காவிடில், வாழ்நாள் முழுக்கக் கஷ்டம் தான்!

"விட்டுடலாம்" - என்றபடியே வீங்கியிருந்தத் தன் உதடுகளால் அவள் கன்னத்தில் முத்தமிட்டான்.

அவனை விலக்கியபடியே "நான் விளையாடல ஜீவன். யு நோ தட்" என்றாள்.

எரிச்சலாகிப் போனவன் "நான் உயிர் பிழைச்சு வந்திருக்கிறதும் விளையாட்டு இல்லங்க. ப்ளீஸ்.. தலையிலிருந்துக் கால் வரைக்கும் எல்லாம் வலிக்குது. நீங்க என் மனசையும் வலிக்க வைக்காதீங்க" என்றான்.

ஒரு நிமிடம் அமைதியாய்த் தலை குனிந்தவள் "நான் ஆதியைத் தூக்கிட்டு வர்றேன்" என்று நகர்ந்து விட்டாள்.

அதன் பின்பு அவள் அவனிடம் பேசும் நேரங்களைக் குறைத்துக் கொண்டாள். அவன் நெருங்கினாலும் விலகிச் சென்றாள். அவனது கால் காயம் ஆறி நன்றாக நடக்கும் வரைத் துணையிருந்தவள், அதன் பின்பு மாமியார் வீட்டைக் காலி செய்தாள். ஏன் என்று கேள்விக் கேட்ட யாருக்கும் பதில் சொல்லவில்லை!

விஷயமறிந்த ஜீவன் நேராக ரோஹினியைத் தேடி வந்தான்.

"ஏன் திடீர்னு கிளம்பிட்டீங்க அங்கேயிருந்து?"- ஜீவன்

"எப்பவும் அம்மா வீட்ல தான இருக்கேன்?, நீங்க லீவ்-ல வரும் போது மட்டும் தான மாமியார் வீட்டு வாசமெல்லாம்?"

"அதான்-ங்க, நான் தான் எங்க வீட்ல இருக்கேனே! இப்பவும் ஏன் இங்க வந்துட்டீங்க?"

"------"

"அம்மா எதுவும் சொன்னாங்களா?, அப்படியே அவங்க எதுவும் சொல்லியிருந்தாலும், நீங்க சும்மா விட்ற ஆள் கிடையாதே!"

"அவங்க ஒன்னும் சொல்லல"

"பின்ன?"

"நீங்க வந்த அன்னிக்கு நான் உங்கக்கிட்ட ஒரு கேள்வி கேட்டேன். இப்போ அதுக்குப் பதில் சொல்லுங்க. நீங்க சொல்ற பதிலை வைச்சு, உங்க வீட்டுக்கு நான் வரலாமா, வேணாமான்னு யோசிக்கிறேன்"

அவள் கூறிய விதத்தைக் கண்டு ஹால் ஓரத்தில் சோஃபாவில் அமர்ந்திருந்தக் கெடாமீசையும், சமையலறையிலிருந்த மரகதம்மாளும் பதறி எழுந்து நின்றனர்.

"ரோஹினி, என்னடி உளர்ற?" - மரகதம்.

"எனக்குப் பதில் சொல்லுங்க" - ஜீவனை நோக்கியபடி ரோஹினி.

"என்ன பதில் சொல்லனும்?, முதல்ல உங்கக் கேள்வி என்ன?"

"இந்த வேலையை விட்டுடுங்கன்னு சொன்னேன். இல்ல, விடமுடியுமான்னு கேட்டேன்."

"முட்டாள்த்தனமா பேசாதீங்க"

"நான் முட்டாளாவே இருந்துட்டுப் போறேன்! நான் கேட்டதுக்குப் பதில் சொல்லுங்க"

"இப்போ என்னங்கப் பிரச்சனை உங்களுக்கு?, நான் என்னைக் காப்பாத்திக்குவேன்ங்க. இனி இந்த மாதிரி நடக்காது. என்னை நம்புங்க"

"உங்கக் கூட வந்த ஆ.:பிசர்ஸ்ல 8 பேர் ஸ்பாட்லயே செத்துட்டாங்க. உங்களோட சேர்த்து ரெண்டே பேர் தான் பிழைச்சிருக்கீங்க. உண்மை தான?"

"............"

"வேலையை விட்டுடுறேன்னு சொல்லுங்க"

"ரோஹினி.. எனக்குன்னு சிலக் கொள்கைகள்,விருப்பங்களெல்லாம் இருக்கு. இப்படிப் பாதியில வேலையை விட்றதுக்கு நான் இதுல சேரல. இதுக்கெல்லாம் நான் பயந்திருந்தா.. இஞ்சினியரிங் முடிச்சப்பவே, ஏசில உட்கார்ந்து பார்க்குற வேலையாப் பார்த்து சேர்ந்திருப்பேன்! நான்.. நான் நேசிக்கிற ஜாப்-ங்க இது! பொழச்சு வந்த என்னைப் பார்த்துச் சந்தோசப்படாம இது என்னங்க பிடிவாதம்?"

"சரி. இன்னிக்கு மாதிரி ஒரு நாள், 'சி.ஆர்.பி.எ.:ப் ஆ.:பிசர்களின் விரமரணம்'ன்னு எட்டோட, ஒன்பதாச் சேர்த்து உங்க பொணமும் வந்து இறங்குனா.. நான் கலங்காம.. என் புருஷன் நாட்டுக்காகத் தன் இன்னுயிரை தந்தத் தியாகின்னு மார் தட்டிட்டு நிமிர்ந்து நிற்கனுமா?"

"ரோஹினினினினினி" - கிட்டத்தட்டக் கத்தினார் மரகதம்மாள்.

"நாளைக்கு என்ன நடக்கும்ன்னு நீங்க எப்படிங்கத் தீர்மானம் பண்ணலாம்?" -ஜீவன்

"இது நடக்காதுன்றதுக்கு என்ன கியாரண்ட்டி?"

"கல்யாணமாகி 7 வருஷத்துல இது தானேங்க முதல் முறை?, 7 வருஷத்தையும் சே.:பா தான கடந்திருக்கேன்?, அதையெல்லாம் கணக்குல சேர்க்க மாட்டேன்றீங்க?"

"நான் கல்யாணத்துக்கு முன்னாடியே உங்கக்கிட்டத் தெளிவா சொன்னேன். என் அண்ணி மாதிரி என்னால ஆக முடியாதுன்னு! நீங்க தான் பின்னாடியே வந்து என்னன்னவோப் பேசிக் கன்வின்ஸ் பண்ணிக் கல்யாணமும் பண்ணிக்கிட்டீங்க! இப்போ.. இப்படி நிற்க வைச்சுட்டீங்க"

நெற்றியைத் தேய்த்தபடிப் பெருமூச்சை வெளியிட்ட ஜீவன் "ரோஹினி.. அன்னிக்கு சொன்னதையே தான் இன்னிக்கும் சொல்றேன்! ஒவ்வொருத்தரோடத் தலையெழுத்தும் ஒவ்வொரு மாதிரி! ரிஸ்க் இல்லாத விசயமேக் கிடையாது லைஃப்ல! ரோட்ல வண்டியோட்டிட்டுப் போறவனுக்கும் சாவு வரத் தான் செய்யுது! அதுக்காக.. நாம வண்டில போகாமலா இருக்கோம்?, கொஞ்சம் தெளிவா யோசிங்க" என்றான்.

"அப்போ உங்களால இந்த வேலையை விட முடியாதா?"

"நிச்சயமா முடியாதுங்க. உங்களை எந்த அளவுக்கு நேசிக்கிறேனோ!, அதே அளவுக்கு என் வேலையையும் நேசிக்கிறேன்! என்னால முடியாது."

ஒரு நிமிடம் அமைதி காத்தவள் பின் நிமிர்ந்து தீர்க்கமாய் அவனை நோக்கி "அப்போ என்னை விட்டுடுங்க" என்றாள்.

"அப்படின்னா??"

"டிவர்ஸ் பண்ணிடலாம்! உங்களுக்கும்,எனக்கும் இடையில இனி எந்த உறவும் வேண்டாம்" - தெளிவாய் அவள் உச்சரித்த வார்த்தைகளைக் கண்டு ஜீவன் திகைத்து நிற்க, மரகதமும்,கெடாமீசையும் பதறி அருகே வந்தனர்.

"என்னப் பேச்சு பேசுறம்மா ரோஹினி?, உன் வாய்ல இருந்து இப்படி ஒரு வார்த்தை வரலாமா?" - கெடாமீசை.

"இழுத்து வைச்சு 4 அறை விட்ருவேன்டி யோசிக்காம!, என்னப் பேச்சு பேசுற?" - அவள் கையைப் பற்றித் திட்டிய மரகதம்மாள்.

தன் இருபுறமும் நின்று, விடாமல் கத்திக் கொண்டிருந்தவர்களை அசட்டை செய்த ரோஹினியின் பார்வை ஜீவனின் மீது மட்டுமே பதிந்திருந்தது. அவனுடைய பார்வையும்!

பின் நடந்து சென்று, ஹாலின் ஓரத்திலிருந்த ஃப்ரிட்ஜைத் திறந்துத் தண்ணீர் பாட்டிலை எடுத்து வாயில் ஊற்றிக் கொண்டவன், அவள் முன்பிருந்த டீபாயின் மேல்

வைத்து "நீங்களும் குடிங்க. நான் நாளைக்கு வர்றேன்" எனக் கூறிச் சென்று விட்டான்.

ரோஹினி அத்தோடு நிற்கவில்லை! தன் சொல்லின் தீவிரத்தை, தான் எடுத்த முடிவின் வீரியத்தைத் தன் செயலால் தெளிவாய் உணர்த்தினாள்.

மறுநாள் அதிகாலை 4 மணிக்குக் கெடாமீசையிடமிருந்து ஃபோன் வந்தது ஜீவனுக்கு. ரோஹினியையும்,பிள்ளைகளையும் காணவில்லையென்று!

பதறியடித்துக் கிளம்பிய ஜீவன், அன்றிரவு வரை நெல்லை முழுதும் தேடி அலைந்தும் அவள் சென்ற சுவடேத் தெரியவில்லை. தலையைப் பற்றிக் கொண்டு அமர்ந்து விட்டவனைக் கண்டு அவன் அன்னை ரோஹினியைக் கரித்துக் கொட்டினார்.

அவள் அறையைத் துழாவியதில், அவள் நகைகளை அடகு வைத்துப் பணம் பெற்றதற்கான ரசீதும், சென்னையின் ப்ரைவேட் இன்ஸ்டிடியூஷன் ஒன்றில் டிராயிங் டீச்சராகச் சேரச் சொல்லி வந்திருந்த லெட்டரின் காப்பியும் கிடைத்தது. அதை வைத்து அவள் இருப்பிடத்தைக் கண்டறிந்தவன், தாமதிக்காமல் சென்னைக்கு ஓடினான்.

இன்ஸ்டிடியூட் கொடுத்திருந்த கெஸ்ட் ஹவுஸில் தங்கியிருந்தவளை, விடிந்தும் விடிந்திராத அந்தக் காலைப் பொழுதில் சந்தித்தான் ஜீவன்.

அந்தச் சூழ்நிலையிலும் குழந்தைகளைக் கருத்தில் கொண்டு, காலிங் பெல் அடிக்காமல், கதவைத் தட்டினான். அவனை எதிர்பார்த்திருந்ததாலோ என்னவோ, ரோஹினி அவனைக் கண்டதும் ஆச்சரியம் கொள்ளவேயில்லை. அவனுக்கு வழி விட்டு விலகி நின்றாள்.

உள்ளே வந்து ஹாலில் இருந்த சோஃபாவில் அமர்ந்தவன், முழுச் சோர்வில் இருந்தான். ஊன்,உறக்கம் ஏதுமின்றி முதல் நாள் காலை 4 மணியிலிருந்து அவளைத் தேடி அலைந்ததன் பலன்! கண்கள் சிவந்து,முகம் கருத்து ஒரே நாளில் பாதியாகிப் போயிருந்தான். இது எதுவும் ரோஹினியைப் பாதிக்கவில்லை போலும்! கையைக் கட்டிக் கொண்டு அவனையேப் பார்த்திருந்தாள்.

முழுதாக அரை மணி நேரம் அமைதியுடனே கழிந்தது.

"இப்போ நான் என்னங்க பண்ணனும்?" - அடக்கப்பட்டக் கோபத்துடன் அடக்கமாய் வந்தது அவன் குரல்.

"வேலையை விடனும்"

"முடியாதுங்க"

"அப்போ,டிவர்ஸ் பேப்பர்ல கையெழுத்துப் போடுங்க" - அவனை எதிர்பார்த்துத் தயாராய் வைத்திருந்தாள் போலும்! டீபாயின் மீதிருந்தத் தாள்களைக் காட்டினாள்.

"............" - அவன் பார்வை எதிரே நின்றிருந்தவளின் கால் விரலில் பதிந்திருந்தது.

"கையெழுத்து போட்டுட்டு??, கையெழுத்துப் போட்டுட்டு என்னங்க பண்ணனும்?, என்னைப் பிரிஞ்சு வாழ்நாள் முழுசையும் உங்களாலக் கடந்துட முடியுமா?, என்னால முடியாதுங்க. உங்களாலயும் முடியாது. எனக்குத் தெரியும். "

"............"

"கொ... கொஞ்சம் என்னைப் புரிஞ்சுக்க ட்ரை பண்ணுங்களேன் ப்ளீஸ்!, என் கொள்கைகளையும்,என் விருப்பங்களையும் மதிக்க முயற்சி பண்ணுங்க! உயிரைக் காப்பாத்துற டாக்டர் தொழில் மாதிரி தான்-ங்க, நான் பார்க்குற வேலையும்! இந்தப் புண்ணியம், என் பேரன்,பேத்தி வரைக்கும் எல்லாரையும் போய்ச் சேரும்!"

"என்ன, அதைப் பார்க்கத் தான் நீங்க உயிரோட இருக்க மாட்டீங்க"

"ரோஹினி... ப்ளீஸ்.."

"நாட்டைக் காக்கனும்ன்ற புனிதமான கொள்கை வைச்சிருக்கிறவருக்கு ஏன் குடும்பம்,குழந்தைன்ற ஆசையெல்லாம்??, உங்கக் கொள்கைகளுக்கு நான் ஒத்துப் போகனும்ன்னு வேற நினைக்கிறீங்க?"

"அதனால் என்ன செய்யப் போற??, ம்? டிவர்ஸ் பண்ணி நடந்த கல்யாணத்தை இல்லன்னு ஆக்கிடுவ!, குழந்தைகளை என்ன செய்வ?, திரும்ப வயித்துக்குள்ளேயே அனுப்பி வைச்சிடுவியா?" - அவன் ஒருமைக்குத் தாவியதிலிருந்தே தெரிந்தது மொத்தமாகப் பொறுமையிழந்து விட்டான் என்பது!

"நீங்க உங்கக் கொள்கைகளுக்காகப் போய்ச் சேர்ந்ததுக்கு அப்புறம் உங்க நினைப்புல நானும்,குழந்தைங்களும் காலம் பூரா கண்ணீர் விட்டு வாழனும்ன்றதை என்னால கற்பனைக் கூட பண்ணிப் பார்க்க முடியல ஜீவன்"

"நான் உங்க கண்ணு முன்னாடி உயிரோட நிற்கிறேன்ங்க. அதைப் பாருங்க கொஞ்சம்! மறுபடி,மறுபடி சொன்னதையே சொல்லாதீங்க. எனக்கு ரொம்பக் கோபம் வருது"

"ஒரு வேளை அப்படி ஆயிட்டா..... எங்க நிலமை என்ன?, இதுக்குப் பதில் சொல்லுங்க"

"................."

"அந்த வேதனையெல்லாம் சுமந்துட்டு வாழ்வேன்னு நினைச்சீங்களா?, மாட்டேன்! செத்துப் போயிடுவேன்!"

"..............."

"அது எவ்ளோ பெரிய நரகம்ன்னு அண்ணியைப் பார்த்தே நான் தெரிஞ்சுக்கிட்டேன்! மூணாவதா ஒரு ஆளுக்கு நடக்கிறதைப் பார்க்கவே என்னால சகிச்சுக்க முடியாதப்போ, அதே விசயம் எனக்கு நடந்தா.. தாங்கிக்க முடியுமா??, முடியாது!"

-இல்லாததைக் கற்பனை செய்து கொண்டு சைக்கோவைப் போல் நடந்து கொள்ளும் இவளை என்ன தான் செய்வது??, உயிரோடு,நல்ல ஆரோக்கியத்தோடு, குழந்தைகளுடன் சந்தோசமாக வாழ்வதைப் போல் கற்பனை செய்து பார்க்க மாட்டாளா?, என்னவொரு நெகட்டிவ் தாட்ஸ்! முட்டாள்! 'இப்போதே பொம்மை வேண்டும்' என அழுது தீர்க்கும் குழந்தைக்கும்,இவளுக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது??

போஸ்ட்-ப்ரக்னென்ஸி டெப்ரெஷன் என்பார்கள்! பிரசவத்திற்குப் பின்பான மன அழுத்தம்! புதிதாகப் பிறந்த குழந்தையைக் கண்ட உற்சாகம், கர்ப்பமாயிருந்த போது கணவன் மற்றும் உடனிருந்தவர்களிடமிருந்துக் கிடைத்த அக்கறை,திடீரென மாறுகையில் உண்டாகும் சோகம்,தூக்கமின்மை,சோர்வு,உடல்வலி,ரத்தப்போக்கு! இவையனைத்தும் தான் இந்த மன அழுத்தத்திற்குக் காரணம்! மிகச் சாதாரணமான விசயம் தான்! அநேக பெண்கள் இதைச் சுலபமாகக் கடந்து விடுகிறார்கள்!

ஆனால் ரோஹினியைப் போன்ற சிலர்.. அதாவது கஷ்டம்,துக்கம் போன்ற உணர்வுகளை அவ்வளவு சீக்கிரம் வெளியே காட்டாமல் இறுகிப் போகும் பெண்களை இந்த மன அழுத்தம் கொஞ்சம் அதிகமாகவே தாக்கி விடுகிறது! போதாதற்கு.. ஜீவனின் நிலை வேறு சேர்ந்து கொண்டு.. அவளை மொத்தமாக மாற்றி, சைக்கோ நிலைக்குத் தள்ளி விட்டிருந்தது!

ஜீவனுக்கு இதைப்பற்றியெல்லாம் தெரிந்திருக்க வாய்ப்பில்லை! அவன் அவளை எப்படியேனும் பேசிச் சமாதானம் செய்து உடன் அழைத்துச் சென்று விடும் நோக்கத்தோடு வந்திருந்தான்.

"இப்போ என்ன தான் முடிவா சொல்றீங்க?"

"வேலையை விடுங்க. இல்ல, இந்தப் பேப்பர்ஸ்ல கையெழுத்துப் போடுங்க"

"ரெண்டுமே என்னால முடியாது ரோஹினி"

"அப்போ நான் செத்துட்றேன்! உங்களுக்கு என்னாகுமோ, ஏதாகுமோன்னோ யோசிச்சு யோசிச்சு ஒவ்வொரு நாளும் பைத்தியமாகிக் கேவலமா சாகுறதை விட, நான் இப்போவே செத்துட்றேன்!" - அழுகையுடன் ஒலித்தது அவள் குரல்.

-இதுவரை அவள் அழுததில்லை! அவள் அழுது அவன் கண்டதில்லை! ஏன், அவளுடைய வீட்டாரும் கூட அவள் அழுது பார்த்ததில்லை! இதை அவர்களே சொல்லிக் கேட்டிருக்கிறான்! இன்று அழுகிறாள்! அவனால்!!

பல்லைக் கடித்து, கையை இறுக மூடி எச்சில் விழுங்கியவனின் விழிகளிலும் லேசாய் நீர் கோர்த்திருந்தது.

விறுவிறுவெனச் சென்று டீபாயின் மீதிருந்தப் பேப்பர்களை எடுத்துக் கடகடவெனக் கையெழுத்திட்டான்.

திகைப்புடன் அவனையே நோக்கியவளின் மீது பேப்பர்களை எறிந்து விட்டுச் சென்றவனின் கண்களில் ஆத்திரம்,கோபம்,அன்பு,காதல்,இயலாமை,யாசிப்பு அனைத்தும்.. அனைத்துமிருந்தது.

மேல் மூச்சு,கீழ் மூச்சு வாங்கத் தொண்டையிலிருந்துப் புறப்பட்ட அழுகைக் குரல் வெளியே வந்துவிடாதிருக்கச் சிரமப்பட்டு அடக்கியவளின் முயற்சி தோற்றுப் பெரிதாய் ஒரு கேவல் கிளம்ப.. வேக நடையுடன் முன்னே நடந்தவன், நின்று.. திரும்பி அவளருகே வந்து, அவளைத் தன் புறம் திருப்பினான்.

இப்போதும் கூட அழுகையை அடக்க முயற்சி செய்து.. முடியாமல்.. கண்களில் வழியும் நீரை எண்ணி எரிச்சலுற்று, 'என்னால் இதைச் சமாளித்து விட முடியும்' என்கிற வீராப்புடன், தோளை விரித்து, நிமிர்ந்து நின்று.. கஷ்டப்பட்டு மனதை மறைத்துக் கொண்டிருந்தவளிடம்.. ஆயிரமாவது முறையாக.. அநியாயக் காதல் கொண்டு.... பொறுக்க முடியாமல் குனிந்து.. அவள் இதழ்களில் முரட்டுத்தனமாகத் தன் இதழ்களைப் பொருத்தினான் அவன்.

அழகான, அறிவுகெட்ட, திமிர்ப்பிடிச்சக் காதலி! - அவன் மனம் முணுமுணுத்தது.

# அத்தியாயம் - 7

**அ**ன்றைய சம்பவத்திற்குப் பிறகு ஜீவன் அவளைத் தேடிச் செல்லவில்லை! கதைகளில் வருவதைப் போல், என்றேனும் அவனைப் புரிந்து கொண்டு அவளாகவே வருவாள் என நம்பினான். அந்தோ பரிதாபம்! அவள் வரவேயில்லை! வக்கீல் நோட்டீஸ் தான் வந்தது! பயந்து.. மீண்டும் அவளிடம் சென்றவனை அவள் சந்திக்கவேயில்லை.

தோழனாய் உடனிருந்த செல்வம் மாமா துபாயில் செட்டிலாகி விட்ட படியால், அவனுக்கு ஆறுதல் சொல்லவும் ஆளில்லாமல் போனது. ரோஹினியின் மீது ஏற்கனவே காண்டுடனிருக்கும் ஜீவனுடைய அன்னையின் கைங்கரியத்தால், அதிதி ஜீவனுடனும், ஆதி ரோஹினியிடமும் வளர கோர்ட் உத்தரவிட்டது! குழந்தைகளை அவளிடமிருந்துப் பிரிக்கும் நோக்கம் ஜீவனுக்குக் கொஞ்சமும் கிடையாது! கோர்ட் வாசலிலேயே இதற்காக மன்னிப்புக் கேட்டவனை அவள் திட்டித் தீர்த்தாள். கடைசியில் ரோஹினியின் பிரிவைப் போக்கிக் கொள்ள அதிதியைத் தன்னுடன் தக்க வைத்துக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளி விடப்பட்டான்.

அச்சமயம், சி.ஆர்.பி.எஃப் ஆஃபிசர்கள் தங்களது குடும்பங்களைத் தங்களுடன் தங்க வைத்துக் கொள்ளும் வசதியை இந்திய அரசு கொண்டு வந்திருந்தது. ஆஃபிசர்களின் மன அழுத்தத்தைக் குறைக்க இந்த ஏற்பாடு!

சிறிதும் யோசிக்காமல் அன்னை மற்றும் அதிதியைத் தன்னுடன் சத்திஸ்கருக்கு அழைத்துக் கொண்டான் அவன். அங்கே அவர்களுக்கென கவர்மெண்ட் குவார்ட்டர்ஸ் வழங்கப்பட்டது. கேம்ப் இல்லாத ஓரிரு நாட்கள், வந்து பார்த்துச் செல்வான்!

முழுதாக மூன்று மாதம் கூட முடிந்திருக்காது அதிதி அவனோடு வந்து!.. அன்னையின் பிரிவை, பாட்டியம்மாளின் அரைகுறை கவனிப்பைத் தாங்கிக் கொள்ள முடியாமல், காய்ச்சலில் விழுந்தாள்.

மனதிலுள்ள கஷ்டத்தை வெளியே சொல்லாமல் உள்ளேயே வைத்து இறுகிப் போவதில் இவள் அன்னையை ஒத்திருந்தாள்!. அவன் வீட்டிற்கு வந்து செல்லும் நாட்கள் தவிர, மற்ற நாட்கள் சிரிப்பென்பதையே தொலைத்து விட்டிருந்தாள்.

மகளின் நிலைக்கு அவளது மனநிலையே காரணம் என்று டாக்டர்கள் கூறி விட... செய்வதறியாதுத் தவித்துப் போனான் ஜீவன். மருத்துவமனையில் சந்தித்தத் தகப்பனிடம் அவள் எதையும் வெளிப்படுத்தவில்லை, ஆனால் அவள் கண்ணில் குடி

கொண்டிருந்த சோகம் அவனை மிகவும் வாட்டியது. அந்தக் கண்கள் ரோஹினியை நினைவுபடுத்தி மேலும் கொன்றது!

மனைவியின் பிரிவு ஏற்கனவே அவனை வேலையில் முழுதாக ஈடுபட விடாமல், கவனத்தைச் சிதறடித்துக் கொண்டிருக்க, பெற்ற மகளை ஒழுங்காகக் கவனித்துக் கொள்ள முடியாதத் தன் நிலைக்கும் வேலையின் மீதே பழியைப் போட்டது மனசாட்சி! ஒரு காலத்தில் உயிராக நேசித்தப் பணியைக் கடைசியில் முழுதாக வெறுத்து.. ராஜினாமா செய்து விட்டு சென்னை வந்து சேர்ந்தான்.

தான் வேலையை விட்டு வந்து விட்டதாகக் கூறித் தன்னுடன் வந்து வாழும் படிச் சொல்லி ரோஹினியிடம் கெஞ்சிப் பார்த்தான். ஈகோவோ,ரோஷமோ என்ன எழவோ! அவள் இன்று வரை அதற்கு ஒப்புக் கொள்ளவேயில்லை. கடைசியில் குழந்தைகளைக் காரணம் காட்டி, மெல்ல மெல்ல அவளுடன் இயல்பாகப் பேசிக் கொள்ளும் நிலைக்கு முன்னேறியிருந்தான்.

**-ஹ்ம்ம்ம்ம்ம்ம் இந்த ரோஹினி என்ன லூசா???, அப்படியும் சொல்லிட முடியாது! ஹஸ்பண்ட் ரிஸ்க்கியான ஜாப்-ல இருக்கிறது தெரிஞ்சா, எந்தப் பொன்னால தான் இயல்பா காலத்தை ஓட்ட முடியும்?, வாட் எவர்! அங்கிள் வேலையை விட்டு வந்தும் கூட, அவரோட சேராம இருக்காங்கன்னா.. ஆண்ட்டிக்கு ஈகோ தான்! ப்ளடி ஆண்ட்டி அண்ட் ப்ளடி ஆஃபிசர்! சரி, யோசிக்கிறேன்னு சொன்னவங்க, யோசிச்சாங்களா இல்லையா??**

**அ**ன்று ஜீவனின் காஃபே சற்றும் எதிர்பாராத விருந்தாளியைச் சந்தித்தது.

கருப்பு நிற காட்டன் புடவையில், முகம் முழுக்கத் தயக்கத்துடன் உள்ளே நுழைந்த ரோஹினியை, ஜீவன் சற்றும் எதிர்பார்க்கவில்லையென்பதை அவனது உயர்த்திய புருவங்களேக் கூறியது. இதற்கு முன்பு நிறைய முறை வருகை தந்திருக்கிறாள் தான்! ஆனால்.. அனைத்துமே குழந்தைகளுடன்.. குழந்தைகளுக்காக மட்டுமே! இன்று எதற்காக வந்திருக்கிறாள்??, ஜில்லென உள்ளே பரவத் தொடங்கியக் குளிரை அடக்கி.. முன்னே வந்து வரவேற்றான் ஜீவன்.

"வாங்க.." என்றவனிடம் தலை குனிந்தபடி "ம்" என்றவள் நேராகச் சென்று ஜன்னலோர இருக்கையொன்றில் அமர்ந்தாள்.

அவள் பின்னேயே சென்றவன் "காஃபி ஆர் ஜூஸ்?, என்ன சொல்லட்டும்?" என்றான்.

"இல்ல, சாப்பிட்டுத் தான் வந்தேன். எதுவும் வேண்டாம்"

சரியெனத் தலையாட்டியவனுக்குச் சத்தியமாக என்ன பேசுவதென்றேத் தெரியவில்லை. தயங்கி நின்றவனை நிமிர்ந்து நோக்கியவள் "உட்காருங்க" என்றாள்.

அந்த ஏசியிலும் நெற்றியோரம் பூக்கத் தொடங்கிய வியர்வையைத் துடைத்தபடி அமர்ந்தவனை அவள் ஆச்சரியமாய் நோக்க.. லேசாய்ச் சிரித்தவன் "சொல்லாம,கொள்ளாம திடீர்னு வந்திருக்கீங்களா.. அதான் டென்ஷனா இருக்கு" என்று தயங்கியபடிக் கூறினான்.

உதட்டைக் கடித்தபடி அவள் அமைதியாகி விட.. "எ..என்னாச்சுங்க?.. எதுவும் பிரச்சனையா?" என்று வினவினான்.

"இல்ல.........."

"சொல்லுங்க..."

"நா..நான் நெல்லை போகலாம்ன்னு இருக்கேன்"

முகம் மலர்ந்து சிரித்தவன் "ரொம்ப நல்ல முடிவுங்க! இத்தனை வருசப் பிடிவாதத்தை நீங்க விட்டுக் கொடுத்ததுப் பெரிய விசயம்! அத்தை,மாமா ரொம்ப சந்தோசப்படுவாங்க!" என்றான்.

"நான் ஒன்னும் அவங்களுக்காகப் போகல, குழந்தைகளுக்காகப் போறேன்" - வீராப்பாய் பதில் கூறினாள்.

சிரிப்பு வந்தாலும் மறைத்து "எது எப்படியோ குழந்தைகளுக்காவாச்சும் போகனும்னு தோணுச்சே! அதுவே போதும்" என்றான்.

மேலும் ஏதோ கூற வருகிறாள் போலும்! மேசை மீதிருந்தக் கை விரல்களைப் பிசைந்தபடி "வ..வந்து..." என்று இழுத்தாள்.

"ம்,சொல்லுங்க"-ஜீவன்

"நீ.... நீங்களும் வர்றீங்களா என்னோட?" - ஒரு வழியாகக் கேட்டு விட்டாள்.

விழி விரியத் திகைப்புடன் அவளை நோக்கியவன் "ஏன்?" என்றான்.

யோசிக்கிறாள் போலும்! கருமணிகளிரெண்டும் ஒரே பாதையில் இருபுறமும் சென்று வந்து கொண்டிருந்தது.

"வ..வந்து.. குழந்தைங்க பார்த்தா சந்தோசப்படுவாங்க..... அப்புறம், நீங்க சொன்ன மாதிரி அம்மா,அப்பாவும் கூடச் சந்தோசப்படுவாங்க, அது...க்குத் தான்"

அவன் எதிர்பார்த்த பதில் இதுவல்ல. அது அவளுக்கும் தெரியும். ஒன்றும் கூறாமல், அவளையே நோக்கினான் அவன்.

"நா..நான் கிளம்புறேன்"

இப்போதும் அதே பார்வையுடன் அமர்ந்திருந்தவனைக் கண்டு மெல்ல எழுந்தவளைத் தடுத்து.. அவள் கையைப் பற்றியவன்..

"ஏன் வந்தீங்க?, ஏன் இப்போ போறீங்க?, ஏன் என்னையும் நெல்லைக்குக் கூப்பிடுறீங்க?, இதுக்கெல்லாம் என்னங்க அர்த்தம்?"

"............"

"இப்போல்லாம் எனக்குப் பொறுமை குறைஞ்சுக்கிட்டே வருதுங்க. பட்,பட்டுன்னு கோபம் வருது. 40-ல நாய் குணம் சொல்வாங்களே! அதை ப்ரூவ் பண்ற மாதிரி!, தயவு செஞ்சு என்னைச் சோதிக்காதீங்க"

அவனிடமிருந்துக் கைகளை உருவிக் கொண்டவள், நேராக நிமிர்ந்து அமர்ந்தாள்.

"அன்னைக்கு ஏன் ஃபோன்ல அப்படிப் பேசுனீங்க?, ஸ்ட்ரோக் வரும்,ஹார்ட் அட்டாக் வரும்,சாவு வரும்ன்னு??"

"ஏன் அதெல்லாம் வராம இருக்கிறதுக்கு நான் என்ன தெய்வப்பிறவியா?"

"என்னோட வந்துடுன்னு நீங்க சொன்னதும், உடனே பெட்டி,படுக்கையெல்லாம் தூக்கிட்டு ஓடி வந்துடுவேன்னு நினைச்சீங்களா?"

"வர மாட்டீங்க தான்! ஒத்துக்கிறேன்"

"பின்ன ஏன் அப்படிப் பேசுனீங்க?"

"இப்போ என்னங்க?, நான் பேசுனது தப்பு. சாரி. ஸ்ட்ரோக்,ஹார்ட் அட்டாக்கெல்லாம் எனக்கு வராது அப்படின்னு சொல்லனுமா?"

"............"

"அதெல்லாம் வந்து தான் நான் சாகனும்னு இல்லங்க. நீங்களே போதும் என்னை உயிரோடு கொல்றதுக்கு!" - உச்சக்கட்ட எரிச்சலில் தான் இதைக் கூறினான் அவன்.

பின்னே?, என்றுமில்லாதத் திருநாளாக கா:.பே வரை வந்திருப்பவள், அவன் காதுகளுக்கு விருந்தளிப்பது போல் ஏதேனும் நற்செய்தி கூறுவாள் என்று பார்த்தால்_ அடங்காப்பிடாரி!

அவளுக்கும் கோபம் வந்துவிட்டது போலும்! உஷ்ண மூச்சை வெளியிட்டபடி வெடுக்கென எழுந்தவள் அவனை முறைத்து விட்டு விறுவிறுவெனச் சென்று விட்டாள்.

இவளைத் திருத்தவே முடியாது! அவனையும் தான்!

அவள் சென்றதும் எரிச்சலும்,கோபமுமாய் சில மணி நேரங்களைக் கடத்தியவன் பின் அவள் ஈகோவை விட்டு இறங்கி வந்ததேப் பெரிய விசயம்!. ஏதேதோ பேசி நாமே அதைக் கெடுத்து கொண்டோமோ எனத் தன் போக்கில் புலம்பி, பின் தன்னையேச் சமாதானப்படுத்த முடியாமல் அன்றிரவே, அவளைச் சந்தித்தான்.

வழக்கம் போல் ரோஹினி வீட்டு வாசலில் தான் இந்தப் பேச்சு வார்த்தையும்!

"ஊருக்குப் போகனும்னு சொன்னீங்களே!, ட்ரைன் டிக்கெட்ஸ்" - நீட்டியவனிடமிருந்துப் பெற்றுக் கொண்டவள், அதில் அவனுக்குமான டிக்கெட் இருக்கிறதாவென்றுப் பார்த்துக் கொண்டாள்.

"நானும் தான்-ங்க வர்றேன்" - கொஞ்சம் கூட மான,ரோஷமின்றித் தரை மட்டத்துக்கு இறங்கியிருந்தான் அவன்.

அடக்க மாட்டாமல் அவள் இதழோரத்தில் வெற்றிப் புன்னகைப் பூத்தது.

அதைக் கண்டவன் "சிரிக்காதீங்க. எனக்குக் கோபம் வருது" என்றான்.

"நான் சிரிக்கலயே!"

"நினைச்சதை சாதிக்கிறீங்க இல்ல? அப்போ இருந்து இப்போ வரைக்கும்!"

பதில் கூறாமல் கையைக் கட்டிக் கொண்டு எங்கோ பார்த்தாள் அவள்.

"என்னை ஏன் ஊருக்குக் கூப்பிட்றீங்க?, இதுக்காவது பதில் சொல்லுங்க"

"உங்களுக்கு என்ன என்னோட வர்றதுல கஷ்டம்?,இத்தனை கேள்வி கேட்குறீங்க?"

"கஷ்டமில்ல. இஷ்டம் தான்!, நீங்களும் இஷ்டப்பட்டுத் தான் கூப்பிடுறீங்களான்னு எனக்குத் தெரியனும்"

"நானும் இஷ்டப்பட்டுத் தான் கூப்பிடுறேன்" - பட்டெனப் பதில் கூறியவளைக் கண்டு வாயடைத்துப் போனான் அவன்.

"ஆசை காட்டாதீங்க. ப்ளீஸ்" - நம்ப முடியாமல் வந்தது அவன் குரல்!

"நான்.. என் ஈகோவை விட்டு இறங்கி வர.. ரொம்பவும் ட்ரை பண்ணிட்டிருக்கேன்! நீங்க பேசிப் பேசி என்னை டார்ச்சர் பண்ணாதீங்க" - சிடுசிடுத்தாள் அவள்.

அதுவரை சுருக்கிய புருவங்களுடனும், முசுட்டு முகத்துடனும் உரையாடிக் கொண்டிருந்தவன், நொடியில் மாறி.. ஈஈஈஈ-யென்றாகி விட்டான்!

"பொறுமையா.. பொறுமையா வாங்க, தப்பில்ல! நான் வெய்ட் பண்றேன்" - என்றவனைக் கண்டு அடக்க முடியாமல் கடகடவெனச் சிரித்தாள் அவள்.

அதையும் ஆ-வென நோக்கியவனைக் கண்டு, மேலும் சிரிப்பு வர.. கதவைச் சாத்தி விட்டு உள்ளே சென்று.. வயிறு குலுங்கச் சிரித்துத் தீர்த்தாள்.

ஜோடியாக வந்திறங்கிய மகளையும்,மருமகனையும் கண்டு மரகதம்மாளுக்கும், கெடாமீசைக்கும் சந்தோசம் தாளவில்லை! இருவரையும் நிற்க வைத்து ஆரத்தி சுற்றியவரைக் கண்டு ரோஹினி பல்லைக் கடிக்க, ஜீவனுக்கோ சங்கோஜமாய் இருந்தது! போதாதற்குக் குழந்தைகள் வேறு எதற்கென்றே தெரியாமல் ஆர்ப்பரித்தனர்.

தன் தோளில் தொற்றிக் கொண்ட ஆதியையும், கையைப் பற்றியிருந்த அதிதியையும் தாண்டி ஜீவனின் பார்வை, உள்ளே சென்று கொண்டிருந்த ரோஹினியையேத் தொடர்ந்தது.

அவள் இறங்கி வர முயற்சிப்பதாகச் சொன்னதேப் பெரிய விசயம்!, இதில் இந்த அத்தை வேறு! கோபமாய் இருக்கிறாளோ என்னவோ! கவலையாய்க் காட்சியளித்தான் அவன்.

"ஜீனு.. தாத்தா எங்களை டெய்லியும் வயற்காட்டுக்குக் கூட்டிட்டுப் போவார், அங்க பம்ப் செட்ல தான் குளிப்போம் தெரியுமா?" - தந்தையைக் கண்ட சந்தோசத்தில் விடாமல் பேசிக் கொண்டிருந்தாள் அதிதி.

"அதனால தான் இரண்டு பேரும் என் கலருக்கு மாறிட்டு வர்றீங்களா?"

"நான் சன்-ஸ்க்ரீனெல்லாம் அப்ளை பண்ணிட்டுத் தான் டாடி போறேன்!, கருப்பாயிட்டேனா??" - ஓடிச் சென்றுக் கண்ணாடியை நோக்கினாள் அதிதி.

சிறுசோ,பெருசோ பெண்களுக்குத் தங்களது தோற்றத்தின் மீது தான் எத்தனை அக்கறை! தானாகச் சிரித்தபடி அமர்ந்திருந்தவனிடம் கா..பியை நீட்டினார் மரகதம்.

"என்னைக் கவனிக்கிறது இருக்கட்டும், உங்க பொன்னு இத்தனை வருசம் கழிச்சு வீட்டுக்கு வந்திருக்காங்க. அவங்களைப் பாருங்கத்தை"

"அவ பொறந்து வளர்ந்த வீடு இது. ஸ்பெஷல் கவனிப்பெல்லாம் எதுக்கு மாப்ள?"

"பேசாம, நானும் உங்களை மாதிரி ரோஹினியை ஹாண்டில் பண்ணப் போறேன்"

"இந்த முடிவை ஆரம்பத்துலேயே எடுத்திருந்தீங்கன்னா, இத்தனை வருசத்தை இப்படி ஒண்டியா கழிச்சிருக்க வேண்டாம்"- என்றவரைக் கண்டு "ஹாஹாஹா"-வெனச் சிரித்தான் ஜீவன்.

அதன்பின் டிவியில் ஒரு கண்ணும்,குழந்தைகளின் மீது ஒரு கண்ணுமாய் அமர்ந்திருந்தவன் அவ்வப்போது நிமிர்ந்து ரோஹினியின் மாடியறையையும் நோக்கத் தவறவில்லை. பின் எழுந்து அவளறைக்குச் சென்றான்.

குளிப்பதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறாள் போலும்! தூக்கிக் கட்டியக் கொண்டையுடனும்,மாற்றுடையுடனும் நின்றிருந்தாள். அவனைக் கண்டதும் 'என்ன' என்பது போல் நோக்கியவளிடம்..

"கோபமா இருக்கீங்களோன்னு பார்க்க வந்தேன்-ங்க" -ஜீவன்

"கோபமா?, இல்லையே ஏன்?"

"இல்ல, அத்தை இப்படி ஆரத்தியெல்லாம் எடுப்பாங்கன்னு நான் சத்தியமா நினைக்கல. நீங்க.. நீங்க இதுக்கெல்லாம் டென்ஷனாகாதீங்க"

"நான் அதையெல்லாம் பெருசா எடுத்துக்கல"

என்னவொரு ஆச்சரியம்! நம்ப முடியவில்லை அவனால்.

"ஷ்யூர்??, மறுபடி மலையேறிட மாட்டீங்களே?"-சந்தேகமாய் வினவினான்.

கையைக் கட்டிக் கொண்டு முறைத்தாள் அவள். "அப்போ சரிங்க" என்றபடி வெளியேறி விட்டான். எதற்கு வம்பு!

அதன் பின் குழந்தைகளைக் குளிப்பாட்டி,உடை மாற்றி அவள் தன் வேலைகளனைத்தையும் முடித்துக் கீழே வரும் போது அவனும் தயாராகித் தன் சட்டையை அயர்ன் செய்து கொண்டிருந்தான்.

குழந்தைகளிருவரையும் டைனிங் டேபிளில் அமர வைத்து விட்டு அவனிருந்த அறையருகே சென்றாள்.

வாசலில் நின்றபடி அவன் அயர்ன் செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அரவம் உணர்ந்துத் திரும்பியவன், அவளைக் கண்டு புன்னகைக் கொண்டு "கையில கிடைச்சதை அள்ளிப் போட்டு வந்தேன், எல்லாமே அயர்ன் பண்ணாத சட்டையாயிருக்கு" என்றான்.

நாற்பத்தியிரெண்டு வயதில் தன் துணிகளைத் தானே துவைத்து, அயர்னிங் செய்து கொள்ளும் பொறுமையெல்லாம் தமிழ்நாட்டில் எத்தனை ஆண்களுக்கு இருக்கிறதோ தெரியவில்லை!

காதோரத்திலும், தலை முழுதிலும் ஆங்காங்குத் தென்பட்ட அவனது நரைமுடிகளைக் கண்ட போது உள்ளே ஏதோ செய்தது.

அருகே சென்று "தள்ளுங்க" என்றவள்.. அயர்ன் பாக்ஸை வாங்கித் தானே அயர்ன் செய்தாள்.

"உ..உங்களுக்கு ஏன்-ங்க வீண் சிரமம்?" - தயக்கமாய் வினவியவனிடம் "சிரமமெல்லாம் ஒன்னுமில்ல" என்றாள்.

"அப்போ இஷ்டப்பட்டுத் தான் செய்றீங்களோ??"

"..............."

"டெய்லியும் அயர்ன் பண்ணித் தருவீங்களா?" - ஜீவன்

"ஏன்?, என்னைப் பார்த்தா 'டோபி' மாதிரி தெரியுதா உங்களுக்கு?"

"சாரிங்க" - என்றவனிடம் சட்டையை நீட்டி விட்டு "சாப்பிட வாங்க" எனக் கூறிச் சென்றாள் அவள்.

அவன் டைனிங் டேபிளில் அமர்ந்ததும், எதிரே அமர்ந்து உண்டு கொண்டிருந்த அதிதி எழுந்து வந்து, அவன் மடியில் அமர்ந்தபடி உண்ணத் தொடங்கினாள்.

மரகதம் பரிமாறிய இடியாப்பத்தின் ருசியை ரசித்தபடி அவன் உண்ணுகையில் "ரோனி, இது பேரு இடியாப்பமாம். உனக்குத் தெரியுமா?" என்றாள் அதிதி.

சாப்பாடு புரையேற லொக் லொக்கென இருமியவனுக்குச் சிரிப்பு தாங்கவில்லை.

"ஏன் டி அசிங்கப்படுத்துற?, இதுக்கு முன்னாடி நான் உனக்கு இடியாப்பம் செஞ்சுக் கொடுத்ததேயில்லையா?" - கோபத்துடன் ரோஹினி.

"அது ஒன்னும் இப்படியிருக்காது. ஆத்தா எவ்ளோ சா:ப்ட்டா செஞ்சுருக்காங்க பாரு"- அதிதி

"அம்மா செய்றது இன்ஸ்டண்ட் இடியாப்பம் போலங்க டார்லி. ஆத்தா, ஆட்டிப் பிழிஞ்சிருக்காங்க"- ஜீவன்

"அவ ஏன் ஆட்டிப் பிழியப் போறா?, கட்டுன புருஷன் மேலயும் அக்கறையில்ல. பெத்தப் பிள்ளைங்க மேலயும் அக்கறையில்ல"- அடுப்படியிலிருந்து மரகதத்தின் குரல் வந்தது.

"இப்போ நான் சாப்பிடனுமா?, சாப்பிட வேண்டாமா?" - கோபமாய் எழுந்தாள் ரோஹினி.

"அத்தை, கொஞ்சம் சும்மா இருங்களேன்.. ரோஹினி, ப்ளீஸ் உட்கார்ந்து சாப்பிடுங்க" - ஜீவன்

"அவ கிடக்குறா மாப்ள, மதியத்துக்கு என்ன சமைக்கட்டும்?, கறியா? இல்ல மீனா?" - மரகதம்

"இல்லத்தை, நான் சேரன்மகாதேவிக்குக் கிளம்புறேன், வீட்டுக்குப் போய் அம்மா,அப்பாவைப் பார்க்கனும். ரோஹினி சரின்னு சொன்னாங்கன்னா, குழந்தைகளையும் அழைச்சிட்டுப் போவேன்"

"அவ என்ன தம்பி சரின்னு சொல்றது?, இவங்க அவங்களோட பேரக் குழந்தைங்க! அவங்களுக்கில்லாத உரிமையா?" - மரகதம்

"அழைச்சிட்டுப் போட்டுமாங்க?" - ரோஹினியிடம் வினவினான் ஜீவன்.

"திரும்ப எப்போக் கூப்பிட்டு வருவீங்க?"

"ஈவ்னிங் வந்துடுவேன்-ங்க"

"அப்போ ஓகே!"

"நான் குழந்தைங்க வந்ததுல இருந்து ரோஹினி அப்பாக்கிட்ட சொல்லிட்டுத் தான் இருந்தேன் மாப்ள. ஒரு தடவை சேரன்மகாதேவிக்குக் (ஜீவனின் வீடிருக்கும் ஊரின் பெயர்) கூட்டிட்டுப் போங்கன்னு!, நீங்க தான் வேண்டாம்ன்னு சொன்னதா சொன்னார்"

"நான் வரும் போது அழைச்சிட்டுப் போகலாம்ன்னு அத்தை. அப்போ நாங்க கிளம்புறோம்" -என்றவன் குழந்தைகளை அழைத்துக் கொண்டுத் தன் வீட்டிற்குச் சென்றான்.

மூவரும் சென்றதும் தனது பழைய பெயிண்டிங்குகளைக் கண்டபடி நேரத்தைப் போக்கியவள், போரடித்துப் போக.. சமையலறைக்கு வந்தாள். வியர்த்து விறுவிறுக்க மரகதம் சமைத்துக் கொண்டிருந்தார். அவர் நறுக்கி வைத்திருந்தப் பொருட்களைக் காணும் போதே தெரிந்தது அனைத்தும் அவளுக்குப் பிடித்த உணவு வகைகளென்பது! வந்ததிலிருந்து அவரிடம் இவள் சரியாகப் பேசக் கூட இல்லை.

"ம்மா..."

"ம்ம், பாதாம் பால் குடிக்கிறியாடி?, அப்பா இப்போ தான் வாங்கிட்டு வந்தாரு"

"கொஞ்ச நேரம் ஆகட்டும்"-என்றபடி அருகிலிருந்த வெங்காயத்தை நறுக்கத் தொடங்கினாள்.

"அதெல்லாம் நான் பண்ணிக்கிறேன். நீ போய் உட்காரு"

"ம்மா"

"என்னடி?"

"சாரிம்மா......"

நிமிர்ந்து அவளை நோக்கினார் மரகதம்.

"எனக்கு எதுக்குடி சாரி?. வீண் பிடிவாதம் பிடிச்சு உன் வாழ்க்கையை நீயே அழிச்சுக்கிட்டதுக்கு என் கிட்ட ஏன் மன்னிப்புக் கேட்குற?"

"..............."

"மாப்ள ரொம்பப் பாவம்டி! இனியும் அவரைப் படுத்தாத. அவரோட நீ சேர்ந்து வந்தப்பவே அம்மாவுக்குப் புரிஞ்சது. ஏதோ முடிவு பண்ணியிருக்கன்னு! என்னன்னு

நான் கேட்கல!, ஆனா.. நல்ல விசயமாச் சொல்லுடி!, ஏற்கனவே உங்கண்ணனைத் தூக்கிக் கொடுத்துட்டேன்! உன் வாழ்க்கையும் இப்படின்னா.. நானும்,உன் அப்பாவும் உயிரோட இருக்கிறதுல அர்த்தமே இல்ல" - நெகிழ்ச்சியான பேச்சுத் தான்! வேற யாருமாயிருந்தால்.. கண்ணீர் விட்ட படித் தான் இதைக் கூறியிருப்பார்கள். ஆனால் மரகதத்தின் கண்களில் ஈரம் சொட்டவில்லை! ரோஹினி அவரைக் கொண்டு பிறந்திருப்பாள் போலும்!

அவர் கூறியதற்குப் பதில் சொல்லாமல் "அண்ணி எங்க?, அவங்கம்மா வீட்ல இருக்காங்களா?" என்றாள்.

"ஆமாடி! அங்க இருந்து வேலைக்குப் போறது ஈசியா இருக்குன்னு சொல்றா. நான், தினமும் போய்ப் பார்த்துக்குவேன்!, நீயும் ஒரு தடவைப் போய் பார்த்துட்டு வா"

-கணவன் இறந்த பின்பு, மாமியார்,மாமனாரின் உதவியுடன் மேற்படிப்புப் படித்து வங்கியொன்றில் வேலை பார்த்து வரும் அண்ணியை எண்ணியபடிச் சரியெனத் தலையசைத்தாள் ரோஹினி.

**அ**ன்று மாலை வாசலில் கார் நிற்கும் சத்தம் கேட்டுக் குழந்தைகளாகத் தான் இருக்குமென்று எண்ணி, விரைந்து ஓடி வந்த ரோஹினி வாசலில் குழந்தைகளோடு வந்திறங்கிய மாமியாரைக் கண்டு வியந்து போனாள். அவர் பின்னேயே கலவர முகத்துடன் ஜீவன்!

நாற்பது வயதில் இந்த ஆளுடைய வாழ்க்கை இத்தனைக் கொடூரமாக இருக்க வேண்டாம்! பாவம்!

தன்னையே முறைப்புடன் நோக்கிக் கொண்டிருக்கும் மாமியாரைக் கண்டு கொள்ளாமல் குழந்தைகளின் அருகே சென்றாள் ரோஹினி. அதற்குள் வாசலை வந்தடைந்த மரகதம் அவரை வரவேற்று உள்ளே அழைத்துச் செல்ல.. அவசரமாக ரோஹினியிடம் சென்றான் ஜீவன்.

"சாரிங்க, நான் எவ்ளோ சொல்லியும் கேட்காம அம்மா இங்க வந்துட்டாங்க" - ஜீவன்

"வந்துட்டுப் போறாங்க, நீங்க ஏன் எல்லாத்துக்கும் பதறுறீங்க?"

"இல்லங்க, உங்களுக்குத் தான் அவங்களைப் பிடிக்காதே!"

"அதனால?, அவங்க உங்கம்மா இல்லன்னு ஆயிடுமா?"

"அப்படியில்லங்க..."

"ப்ச், சும்மா பேசிட்டே இருக்காம, உள்ளே வாங்க" - வாட் அ சேஞ்ச் ஓவர்! திகைப்பு மாறாமல் அவள் பின்னேயே சென்றான் அவன்.

குழந்தைகளுடன் கெடாமீசை உள்ளே சென்று விட.. இவர்களனைவரும் ஹாலில் அமர்ந்தனர். உபசரிப்புகள் முடிந்ததும் அமைதியாகயிருந்த ஜீவனின் தாய் ராஜம், திடீரெனச் சேலைத் தலைப்பால் வாயை மூடிக் கொண்டு அழுதார்.

"இந்தம்மா இப்போ ஒரு சீனைப் போடும்"- ரோஹினியின் மனசாட்சி.

"அம்மா.. இப்போ எதுக்கு அழறீங்க?" - ஜீவன்

"அழாம என்னடா செய்யச் சொல்ற?, இந்த வயசுல உன்னை இப்படி ஒண்டிக்கட்டையா பார்க்கத் தான் நான் உயிரோட இருக்கேனா?," என்றவர் ரோஹினியிடம் "என் மேல என்னக் கோபம் இருந்தாலும், தயவு செஞ்சு மன்னிச்சுடு!, விவாகரத்து வாங்குனப்போ, அதிதி நம்மோட இருக்கனும்ன்னு பிரச்சனை பண்ணினது நான் தான்!, குழந்தையை உன் கிட்ட இருந்து பிரிக்கனும்னு ஜீவன் நினைக்கவேயில்ல" என்றார்.

"பழசெல்லாம் எதுக்குப் பேசிக்கிட்டு, விடுங்க" - ரோஹினி

"இல்ல, நீ அதையெல்லாம் மனசுல வைச்சுக்கிட்டுத் தான் இத்தனை நாளா, என் பையன் உன் பின்னாடியே வந்து கெஞ்சியும், அவனோட வந்து வாழாம இருக்க"

"அப்படியெல்லாம் எதுவுமில்ல. நீங்களா எதையும் கற்பனை பண்ணிக்காதீங்க"

"எதுவுமில்லன்னா, அவனோட சேர்ந்து வாழலாமில்ல?, நான் உங்களுக்காக ஏறாத கோவிலில்ல, வேண்டாத சாமியில்ல" - தன் போக்கில் புலம்பிச் சென்றவரை நிறுத்திய ஜீவன் "எல்லாம் நடக்கும் போது நல்ல விதமா நடக்கும். நீங்க ஒப்பாரி வைக்காதீங்க. ப்ளீஸ்" என்றான்.

அதன் பின்பு சமாதானமாகி விட்ட ராஜம், மேலும் சிறிது நேரமிருந்துப் பின் ரோஹினியிடம் வீட்டிற்கு வரும்படிக் கூறி விட்டுச் சென்றார்.

அன்றிரவு குழந்தைகளுடனேத் தங்கி விட்ட ஜீவன், மொட்டை மாடியில் கெடாமீசையுடன் பேசிக் கொண்டிருந்தான். கையில் பால் தம்ளர்களுடன் வந்து சேர்ந்த ரோஹினி இருவரிடமும் நீட்ட.. மகள்,மருமகனுக்குத் தனிமை கொடுக்க விரும்பி, மீசை கழண்டு கொண்டார்.

இருளை வெறித்தபடி நின்றிருந்தவளிடம் "சாரிங்க, எங்கம்மா அப்படியெல்லாம் பேசுவாங்கன்னு நான் நினைக்கல" என்றான்.

"எனக்கும் ஆச்சரியம் தான்!, பொதுவா உங்கம்மாவுக்கு என்னைச் சுத்தமா பிடிக்காது! கரிச்சுக் கொட்டத் தான் வீடு தேடி வந்திருக்கோன்னு நினைச்சேன்"

"ச்ச,ச்ச நான் அதுக்கெல்லாம் அனுமதிப்பேனாங்க?"

"..............."

"குழந்தைங்க தூங்கிட்டாங்களா?"

"தூங்கிட்டாங்க"

"நீங்க தூங்கலையா?"

"ப்ச், தூக்கம் வரல"

"ஓஓஓஓ!! அப்போ, நான் பேசட்டும்ங்களா??"

"என்ன பேசப் போறீங்க?, ஸ்ட்ரோக்,ஹார்ட்-அட்டாக் மாதிரி அல்சர்,கேன்சர்ன்னு எதுவும் சொல்லப் போறீங்களா?"

"ப்ச்,அதை விடவே மாட்டீங்களா?, தெரியாம சொல்லிட்டேன்-ங்க" - கிட்டத்தட்டக் கதறினான் அவன்.

"ஹாஹாஹா.."

"இந்த 2 நாளா.. அடிக்கடி சிரிக்கிறீங்க. பார்க்க, ரொம்ப நல்லாயிருக்குங்க"

பதில் கூறாமல் தலையைக் குனிந்து கொண்டாள் அவள்.

சிரிப்புடன் அவளை நோக்கியவன், கையை நீட்டிச் சோம்பல் முறித்தபடி "ம்ஹ்ம்ஹ்ம்ஹ்ம்" என ஏதோ ஒரு பாட்டை முணுமுணுத்தான்.

"பேசாம ஒரு பாட்டுப் பாடுங்களேன், தூக்கமாவது வரும்" - அவன் புறம் திரும்பி நின்று வினவினாள் அவள்.

"பாட்டு பாடனுமா??" என்றவனிடம் "ம்ம்" என்றாள்.

அவள் முகமும்,அதில் தெரிந்த ஆர்வமும் அவர்களது திருமண இரவை நினைவு படுத்தியது ஜீவனுக்கு.

காற்றிலாடும் முன் நெற்றி முடியைக் காதோரத்தில் ஒதுக்கியபடிக் கைக் கட்டி நின்றிருந்தவளின் மோதிர விரல்கள், வெற்று நெற்றி, தன்னையே ஆர்வமாய் நோக்கும் விழிகள், லேசாய்ப் புன்னகை பூத்திருந்த உதடுகள், மொத்தமாய் அவள்! எப்போதும் போல்... மனதில் துள்ளி எழுந்த காதலை வெளிப்படையாய்க் கண்ணில் காட்டி.. அவன் பாடத் தொடங்கினான்.

"விடிகாலை விண்ணழகு! விடியும் வரைப் பெண்ணழகு!

நெல்லுக்கு நாற்றழகு! தென்னைக்குக் கீற்றழகு!

ஊருக்கு ஆறழகு! ஊர்வலத்தில் தேரழகு!

தமிழுக்கு ழ அழகு! தலைவிக்கு நான் அழகு!"

- தன்னையே நோக்கியபடிப் பாடியவனின் குரல், அதன் காந்த சக்தி, அவன் பார்வை, அது சொல்லும் காதல் சேதி, இது எதுவும் அவளுக்குப் புதிதல்ல! ஆனால்.. ஏன் ஒவ்வொரு முறையும், கொள்ளை.கொள்ளையாய் அவளை ஈர்த்துத் தொலைக்கிறது!

முகம் மாற.. இமை மூடித் திறந்து.. மறுபுறம் திரும்பியவளின் கையைப் பற்றி அவள் மீது சாய்ந்தவன், சிறிதும் யோசிக்காமல் தன்னோடு சேர்த்து அணைத்திருந்தான்.

திடுக்கிட்டு நிமிர்ந்தவளிடம் "சாரிங்க" என்றவன் தொடர்ந்து "இப்போ கால் தடுக்கினதால, உங்க மேல விழல" என்றான்.

## அத்தியாயம் - 8

**கண்கள் சொருக மடிக்கணினியின் மீது 'டங்' எனத் தலையைக் கவிழ்ந்திருந்தேன் நான்! ம்க்க்கும்! ரொமான்ஸ் சீன்-ன்னா, சீட் நுனில உட்கார வைக்கிற மாதிரி இருக்கனும்! இவனுங்க என்னடான்னா, தூக்கம் வர வைக்கிறானுங்க! இருந்தாலும்.. நைஸ்!! ஈஈஈஈ-எனச் சிரித்துக் கொண்டேன்! கொட்டாவி மேல் கொட்டாவியாக வீடு கட்டினாலும், அடுத்த என்ன நடந்ததென்பதைத் தெரிந்து கொள்ளாமல், நான் உறங்கப் போவதில்லை! கண்களைத் தண்ணீர் அடித்துக் கழுவி விட்டு மீண்டும் மிஸ்டர்.மார்க்கிடம் வந்தேன்! ஆஹா அடுத்த ஸ்டேட்டஸே ரொமாண்டிக்கா இருக்கே!**

"வான் விட்டு வாராய் சிறகுள்ள நிலவே! தேன் விட்டுப் பேசாய் உயிருள்ள மலரே!"

"என்னடி இது மேத்ஸ்ல மட்டும் இவ்ளோ கம்மியா மார்க் வாங்கியிருக்க?" - அதிதியின் டெஸ்ட் பேப்பரைப் பார்த்து உச்சஸ்தாதியில் கத்திக் கொண்டிருந்தாள் ரோஹினி.

"எனக்குக் கணக்கு அவ்ளோவா வராதும்மா" - கையில் க்ரீம் பிஸ்கட்டுடன் அதிதி.

"என்னடி பதில் இது?"

"பின்ன?. யுவனி கூட க்ரூப் ஸ்டடி பண்றதுக்கு நீ அலவ் பண்ண மாட்ற?. டியூஷன் போறதுக்கும் ஜீனு ஒத்துக்கல. பின்ன மார்க் மட்டும் எப்படி வரும்?" - எரிச்சலுடன் பதிலளித்தவளைக் கண்டு ரோஹினி வாயைப் பிளக்க ஜீவனுக்கோ சிரிப்பு வந்தது.

"உன்கிட்டல்லாம் வாயால பேசுனா சரி வராதுடி" என்றவள் கையிலிருந்த நோட்டை வைத்து அவள் தலையில் ஒரு போடு போட்டாள்.

பதறி ஓடி வந்து அதிதியைத் தன்புறம் இழுத்துக் கொண்டவன் "ஏங்க, அடிக்காதீங்க ப்ளீஸ்" என்றான். அதிதியின் கவனம் இப்போதும் பிஸ்கட்டின் மீதே பதிந்திருந்தது.

"சரிடி, நீ சொல்ற மாதிரி இந்த வீக்-என்ட் யுவனி வீட்டுக்கு அனுப்பி வைக்கிறேன். அடுத்த வாரம் டெஸ்ட்ல செண்டம் வாங்கிக் காட்டனும். சரியா?"

முகம் விகசிக்க "ஓகேம்மா" என்றவள் தம்பியுடன் விளையாடச் சென்று விட்டாள்.

"இவ வளர்ந்தப்புறம் நான் எப்படி சமாளிக்கப் போறேனோ தெரியல"- புலம்பியபடித் திரும்பியவள் தன்னையே சிரிப்புடன் நோக்கிக் கொண்டிருந்தவனிடம் "உங்களுக்கு என் நிலைமை சிரிப்பா இருக்கா?" என்று பொறிந்தாள்.

அதுவரை எதிரேயிருந்த மேசையின் மீது சாய்ந்து நின்றிருந்தவன், முன்னே வந்து.. அவளருகேயிருந்த நாற்காலியில் அவளை உரசியபடி அமர்ந்து, அவள் கை விரல்களைப் பற்றினான்.

"நீங்க இவ்ளோ டென்ஷன் ஆகுற அளவுக்கு பேரண்டிங் அவ்ளோ கஷ்டமான விசயமில்லங்க. குழந்தைங்க நம்மை விடத் தெளிவானவங்க! அவங்க போக்கில போனா.. எல்லாமே ஈசியாய்டும்!"

"ஹ்ம்ம், நீங்க இருக்கீங்கன்ற நம்பிக்கைல தான் இருக்கேன் நான்!, இல்லேன்னா.. எப்பவோ தலை வெடிச்சிருக்கும் எனக்கு" - பேச்சு வாக்கில் இயல்பாகக் கூறி விட்டாள் அவள்! ஆனால்.. ஜீவனுக்குத் தான் மனம் மிகவும் லேசாகி விட்டது!

"நான் பார்த்துக்கிறேன்ங்க"-என்றவனிடமிருந்துக் கை விரல்களைப் பிரித்துக் கொண்டவள், சற்றுத் தள்ளி அமர்ந்தாள்.

"எதுக்கு இப்போ விலகிப் போறீங்க?"

"நாளைக்கழிச்சு ஆதி பர்த்டே! ஞாபகம் இருக்கா உங்களுக்கு?"

"ஏன் தள்ளிப் போறீங்கன்னு நான் ஒரு கேள்வி கேட்டேன்??, பெருசா.. யோசிக்கிறேன்னு சொன்னீங்க. இப்போ வரைக்கும் ஒரு மாற்றமும் இல்ல"

"ஒரு மாற்றமும் இல்ல??, ம்?" - முறைத்தபடி வினவினாள் அவள்.

"அப்படிப் பச்சையா சொல்லிட முடியாது. மாற்றமில்லாட்டி, இப்படி என்னால பக்கத்துல உட்கார்ந்து பேச முடியுமா?"

"பின்ன என்ன?, பர்த்டேவைப் பத்திப் பேசலாம்"

"ஞாபகம் இருக்குங்க. பெருசா செலிப்ரேட் பண்ணனும்னு ஆசைப்படுறீங்களா?, ஹால் ஏதாவது புக் பண்ணலாமா?"

"இல்ல,இல்ல அதெல்லாம் வேண்டாம். கா∴பேலயே சிம்பிளா செலிப்ரேட் பண்ணலாம்!"

"ஓகே-ங்க. அப்படியேப் பண்ணிடலாம்" - என்றவன் பிறந்தநாளன்று மாலை கா∴பேயிலேயே சிம்பிளாக ஒரு பர்த்டே பார்ட்டிக்கு ஏற்பாடு செய்திருந்தான்.

மாலை ஆறு மணிவாக்கில் வந்திறங்கினர் ஆதி,அதிதி மற்றும் ரோஹினி. கா∴பே பணியாளர்கள் கலர்பேப்பர்களையும்,ஆதியின் புகைப்படங்களையும் ஒட்டி அலங்காரம் செய்து கொண்டிருக்க.. ஜீவனைக் காணாதுத் தேடினாள் ரோஹினி.

சரியாக அப்போது கேக் பாக்ஸுடன் உள்ளே நுழைந்த ஜீவன் தன்னை நோக்கி ஓடி வந்த ஆதியை அள்ளிக் கொண்டான். நீல நிற ஷர்வாணி உடையில், அன்னை அணிவித்திருந்தத் துப்பட்டாவைக் கையில் கட்டியிருந்தவன், அதைத் தந்தையிடம் காட்டி வெட்கப் புன்னகைப் பூத்தான்.

"ஜீனு.. என் ட்ரெஸ் எப்படியிருக்கு?" - ஆரஞ்சு வண்ண முழு நீள ஃப்ராக்கில் ஜொலித்த அதிதியின் கன்னத்தில் முத்தமிட்டு "சூப்பர்" என்றான் அவன்.

இருவரையும் கொஞ்சி நிமிர்ந்தவனின் பார்வைத் தானாகவே ரோஹினியிடம் சென்றது. மரூன் நிறத்தில் அவள் கட்டியிருந்தக் காட்டன் புடவை அவள் நிறத்தை அத்தனை அழகாய் எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தது.

அவன் பார்வையை உணர்ந்து அருகே வந்தவள் "நீங்க ரெடியாகலையா?" என்று வினவினாள்.

"இதோ போறேன்-ங்க" என்றவன் "சாரி ரொம்ப அழகாயிருக்குங்க" என்றான்.

"தேங்க்ஸ்" என்றவள் சற்றுத் தயங்கியபடியேக் கையிலிருந்த கவரை அவனிடம் நீட்டினாள்.

"என்ன இது?" என்றபடி ஆச்சரியத்துடன் வாங்கிப் பிரித்தான்.

"இல்ல, எல்லாருமே புது டிரெஸ் போட்டிருக்கோம். அ..அதனால தான்.. உ..உங்களுக்கும்ம்ம்ம்" என்று இழுத்தாள்.

முறுவலாய் உதட்டில் தொடங்கியப் புன்னகை நீண்டு விரிய.. "ரெண்டு நிமிஷம். சேஞ்ச் பண்ணிட்டு வர்றேன்" என்று விட்டு விசில் அடித்தபடிச் சென்றான் அவன்.

மஸ்டர்ட் நிறத்தில் குர்த்தா வாங்கிக் கொடுத்திருந்தாள். அணிந்திருந்த ப்ளூ ஜீன்ஸ்-ன் மேல் அதை அணிந்தவன் தலையைக் கோதியபடியே வெளியே வந்தான்.

அவனுக்காகவேக் காத்திருந்தாள் போலும், ரெஸ்ட் ரூமின் அருகே சுவரில் சாய்ந்தபடி நகம் கடித்துக் கொண்டிருந்தாள்.

அவளை அங்கே எதிர்பாராமல் விழி விரித்தவனைக் கண்டு கொள்ளாது அவனருகே நெருங்கியவள், டிரெஸ்ஸை நோக்கியபடியே "கரெக்ட் சைஸ் தானே?, டைட்டா இல்லையே?" என்று வினவினாள்.

"இல்லங்க, சரியாத் தான் இருக்கு" - ஏனோ அவன் குரல் அடக்கமாய் வந்தது.

"ஊஃப்ஃப்.. பத்தாம போயிடுமோன்னு ரொம்பப் பயந்தேன்" - என்றவள் நிமிர்ந்து அவன் முகம் நோக்கிச் சிரிக்க.. அத்தனையருகில் தன் நெஞ்சோரமாய் நின்றிருந்தவளைப் பார்த்தவனின் பார்வை.. அவள் மனதை வசியம் செய்தது.

புன்னகை மாற.. இமைகளைத் தாழ்த்தியவளின் கன்னத்தைத் தன் புறம் திருப்பி இதழ் நோக்கிக் குனிந்தான் அவன். திகைத்து.. விலகியவள்.. அவன் முகம் பாராமல் ஓடியே விட்டிருந்தாள்.

அதன் பின்பு ஆதியைக் கேக் கட் செய்ய வைத்து.. ஹாப்பி பர்த்டே பாடி.. அவனுக்குப் பிடித்த பொம்மைக் காரை இருவருமாய்ச் சேர்ந்து பரிசளித்து.. அந்த மாலை நேரம் முழுவதையும் இருவரும் ஒரு மோனநிலையிலேயேக் கடந்தனர்.

இரவு உணவை அங்கேயே முடித்துக் கொண்டுக் கிளம்பிய மூவரையும் தானே ட்ராப் செய்வதாகக் கூறி.. அவர்களுடன் காரில் பயணித்தான் ஜீவன்.

கே.கே.நகரை அடைகையில் பிள்ளைகள் இருவரும் தூங்கிப் போயிருந்தனர். இருவரையும் கண்டபடி ரோஹினியின் புறம் திரும்பியவனிடம் "நான் ஆதியைப் படுக்க வைச்சுட்டு வந்து.. அதிதியைத் தூக்கிக்கிறேன்" என்றவள் அவன் பதிலை எதிர்பாராமல் ஆதியுடன் இறங்கியிருந்தாள்.

அவள் சாதாரணமாகத் தான் கூறிச் சென்றாள். ஆனால் ஜீவனுக்குத் தான் முகம் கன்றிப் போனது.

என்றைக்கும் போல இன்றும்.. வாசலிலேயேத் துரத்துகிறாள்! மாறி விட்டதாகப் பெரிதாகக் கூறினாளே! ஏன், அவன் அதிதியைத் தூக்கிக் கொண்டு உள்ளே வரக் கூடாதாமா?, உன் எல்லை இது தான் என்றுத் தெளிவாய் உணர்த்துபவளிடம் என்ன முன்னேற்றத்தை எதிர்பார்க்க முடியும்?, கா..பேயில் அவள் விலகி ஓடும் போதே புரிந்திருக்க வேண்டும்.

இயலாமையும்,கோபமும் போட்டிப் போட.. முகம் கன்ற அமர்ந்திருந்தான் அவன். அதிதியைப் படுக்க வைத்து விட்டு அவனிடம் வந்த ரோஹினிக்கு அவன் மனநிலையின் மாற்றம் புரிய வாய்ப்பில்லை.

விடைபெறும் நோக்குடன் அருகே வந்தவள் "நாளைக்கு ஈவ்னிங் ஆதியை நீங்களே பிக்-அப் பண்ணிக்கிறீங்களா?, என் கலீக் வீட்ல ஒரு ..பங்க்ஷன் இருக்கு" என்றாள்.

"சரிங்க. குழந்தைகளைப் பிக்-அப் பண்ணிக்கவும்,ட்ராப் பண்ணிக்கவும் மட்டும் தான நான் இருக்கேன்?, நீங்க சொல்ற மாதிரியே பண்றேன்" - அடக்கப்பட்டக் கோபத்துடன் வெளிவந்தது அவன் குரல்.

அவன் குரல் மாற்றத்துக்குக் காரணம் புரியாமல் "என்னாச்சு?" என்று புருவம் சுருக்கினாள் அவள்.

முகம் இறுக ஒரு நொடி அமைதி காத்தவன் பின்...

"அதிதியைத் தூக்கிட்டு நான் உங்க பெட்-ரூம் வரைக்கும் வரக் கூடாதாங்க?, அப்படி உங்களை என்ன பண்ணிடுவேன்னு நினைக்கிறீங்க?"

"........" - என்ன உளறுகிறான் என்பது போல் ஒரு பார்வை பார்த்தாள் அவள்.

"இப்போ கூட இந்த வாசல் தான் உன் எல்லைன்னு வெளியே நிற்க வைச்சுத் தான் பேசுறீங்க??, ம்?, நீங்க மாறிட்டதா நினைச்சு நான் சந்தோசப்பட ஆரம்பிச்சு முழுசா பத்து நாள் கூட ஆயிருக்காது! மறுபடி என்னை அதலபாதாளத்துக்குத் தள்ளிட்டீங்க"

"நீங்களா எதையாவதுக் கற்பனை பண்ணிட்டு உளறாதீங்க ஜீவன்" - முழு எரிச்சலுடன் பதில் கூறினாள் அவள்.

"சரி, நான் கற்பனை பண்ணல. கா...பேல நான் கிஸ் பண்ண வந்தப்போ ஏன் விலகிப் போனீங்க?, பிடிக்காதனால தான??"

"உங்க இஷ்டத்துக்கு எதையாவது அர்த்தம் பண்ணிக்காதீங்க"

"சரி, அப்டின்னா இப்போ கிஸ் பண்ணுங்க" - பட்டெனக் கேட்டவனைக் கண்டு விழி விரித்தாள் அவள்.

சிறுபிள்ளைத்தனமாய் பிடிவாதம் பிடித்துக் கொண்டு, தண்ணியடிக்காமலே போதையேறியவன் போன்று நடந்து கொண்டிருந்தவனை என்ன செய்வதென்றே புரியவில்லை.

இறுகிய முகத்துடனும், அடக்கப்பட்டக் கோபத்துடனும், ஏமாற்றத்தைச் சகித்துக் கொள்ள முடியாத இயலாமையுடனும் அவளையே நோக்கிக் கொண்டிருந்தவன், அவளிடமிருந்துப் பதில் இல்லாது போனதும்... அவள் கையை இறுகப் பற்றி அழுத்தினான்.

வாசலில் நின்று கொண்டு இது என்ன அட்டகாசம்??, வெடுக்கெனக் கையை இழுத்துக் கொண்டவளுக்குக் கோபம் தலைக்கேறியது.

அவள் கையை உறுவியதும் அவனுக்கும் கோபம் வந்து விட்டது போலும், விடாமல் மீண்டும் அவள் கன்னத்தைப் பற்றி முத்தமிட முயன்றான்.

உச்சகட்டக் கோபத்தில் வலது கையால் அவன் முகத்தைத் தள்ளி, ஓரடி விலகி நின்றவள் மூச்சு வாங்க ஆத்திரமாய் அவனை நோக்கினாள்.

அவமானத்தில் முகம் கறுக்க.. கையை இறுக மூடித் தன் கோபத்தை அடக்கியவன், அவளைத் திரும்பிப் பாராமல் விறுவிறுவெனச் சென்று விட்டிருந்தான்.

## அத்தியாயம் - 9

**"ஒவ்வொன்றாய் திருடுகிறாய்.. திருடுகிறாய்..**

**யாருக்கும் தெரியாமல் திருடுகிறாய்.....**

**முதலில் என் கண்களை, இரண்டாவது இதயத்தை..**

**மூன்றாவது............. முத்தத்தை..........!!!"**

**- ஸ்டேட்டஸை வாசித்த எனக்குப் புல்லரித்தது. சும்மா சொல்லக் கூடாது! மனுஷன் செம ரொமாண்டிக் பர்சன்! அவர் வயசுக்கு லேட்டஸ்ட் சாங்ஸை எல்லாம், ரசிக்கிறார்! வெர்ரி குட்! இத்தனை நாளா.. ஆண்ட்டி மட்டும் தான் முறைச்சிட்டு இருந்துச்சு! இப்போ அங்கிளும் கோபப்படுறார்! என்ன தான் நடக்குது இங்க?**

"**ஜீனு**.. நான் யுவனி வீட்டுக்குப் போறேன்" - ஸ்கூல் பேக்குடன் வந்து ஜீவனின் முன்னே நின்றாள் அதிதி.

"தனியா எப்படிப் போவீங்க?, நான் வந்து ட்ராப் பண்றேன்"

"அடுத்தத் தெரு தான் டாடி, நான் போய்ப்பேன்"

"ம்ம், உங்கம்மாக்கிட்ட சொல்லிட்டீங்களா?, இதுக்கும் என்னைத் திட்டப் போறாங்க"

"சொல்லிட்டேன் ஜீனு" - என்றவள் 'பாய்' எனக் கூறி ஓடி விட்டாள்.

தலையைப் பற்றியபடி சோஃபாவில் அமர்ந்திருந்தவனுக்கு இன்னமும் முகம் மாறிய பாடில்லை! கோபம்,அவமானம்,இயலாமை என அனைத்து உணர்வுகளும் நொடிக்கொரு தரம் அவன் கண்ணில் வந்து போய்க் கொண்டிருந்தது.

அவளாக மாறி வந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில், இந்தச் சண்டை அவசியம் தானா?, கொஞ்சம் அவள் சிரித்துப் பேச ஆரம்பித்ததும் ரொம்பவும் உரிமை கொண்டாடி, அருகே நெருங்கியது குற்றமோ?, இத்தனைக்கும் அவள் யாரோ அல்ல! அவனது சொந்தப் பொண்டாட்டி! அவன் பிள்ளைகளுக்குத் தாய்!

ப்ச். அவள் மீது தவறே இல்லையா என்ன?, எத்தனை நாட்கள் அவளுக்காக மானரோஷத்தைக் கை விட்டு அடி மட்டத்துக்கு இறங்கி நின்றிருக்கிறான்?. அவன் தான் புத்தி கெட்டுப் போய் உணர்ச்சி வேகத்தில் ஏதோ செய்து விட்டான், விலகலைக் கூடப் பொறுமையாய் புரிய வைக்க முடியாதா அவளுக்கு?, கட்டியக் கணவனை விலக்கித் தள்ளும் முதல் பொண்டாட்டி இவளாகத் தான் இருக்க முடியும்! ராட்சசி!

தவறு தன் மீது தான் என்று அடித்துக் கொள்ளும் மனசாட்சியின் குரலுக்குச் செவிமடித்து அவளுக்கு அலைபேச.. அவனது கைகள் துறுதுறுத்தது. ஆனாலும், அடக்கிக் கொண்டான்! மன்னிப்புக் கேட்டு விட்டு.. மீண்டும் அனைத்தையும் முதலில் இருந்துத் தொடங்க வேண்டுமா?, சலிப்பாக இருந்தது அவனுக்கு! இந்த ஜென்மத்தில் அவளோடு சேர்ந்து வாழும் பிராப்தமே அவனுக்கு இல்லை போலும்! தன் போக்கில் புலம்பிக் கொண்டிருந்தவனை, மேலும் கவலைக்குள்ளாக்கவென்றே ஃபோன் செய்தார் கெடாமீசை.

"ஹலோ.. மாப்ள"

"சொல்லுங்க மாமா, எப்படியிருக்கீங்க?, அத்தை எப்படியிருக்காங்க?"

"எங்களுக்கென்ன மாப்ள?, நல்லாயிருக்கோம். அங்க.. உ..உங்களுக்கும்,ரோஹினிக்கும் பிரச்சனை எதுவுமில்லையே?"

'என்ன உளறி வைத்திருக்கிறாளோ இந்த அடங்காப்பிடாரி!'

பல்லைக் கடித்தபடி "அப்படியெல்லாம் ஒன்னுமில்லையே மாமா" என்றான்.

"இல்ல, ஃபோன்ல பேசும் போது ரோஹினி குரலே சரியில்ல. உங்களைப் பத்திப் பேசும் போதும், சரியா பதில் சொல்லல. எல்லாம் சுமூகமாகப் போயிட்டிருக்கிறதா.. நாங்க எல்லாரும் சந்தோசப்பட்டுட்டிருக்கோம் மாப்ள, இன்னொரு முறை புதுப் பிரச்சனை எதையும் தாங்கிக்கிற சக்தி எங்களுக்கில்ல" - தளுதளுத்தக் குரலில் கூறியவரிடம் "அப்படியெல்லாம் ஒன்னுமில்ல மாமா" எனப் பேசிச் சமாதானம் செய்து ஃபோனைக் கட் செய்தவனுக்கு, மட்டுப்பட்டிருந்தக் கோபம் மீண்டும் தலைக்கேறியது.

என்னவோ சேர்ந்து வாழத் திட்டமிட்டிருப்பவள் போன்றுத் தேவையில்லாமல் அவனோடு நெல்லை சென்று, பெரியவர்கள் அனைவருக்கும் நம்பிக்கையூட்டி விட்டு இன்று இப்படி நடந்து கொண்டு, அவர்களையும் வருத்துகிறாள்! திமிர்பிடித்தவள்!

மிகச் சரியாக அந்த நேரம் 'கால்' செய்தாள் ரோஹினி. எரிச்சலுடன் பட்டெனக் கட் செய்தான். ஆனால் அவள் மீண்டும் அழைத்தாள்.

"ஹலோ.." - கோபமாய் ஒலித்தது அவன் குரல்.

"எதுக்குக் கட் பண்றீங்க?" - ரோஹினி

"............"

"ஆதியை அழைச்சிட்டு வந்துட்டீங்களா?"

"ம்"

"என்னப் பண்ணிட்டிருக்கான்?"

"தூங்குறான்"

"ஓ!, சரி, அவன் எழுந்ததும் கூப்பிட்றேன்" - கட் செய்து விட்டிருந்தாள் அவள்.

அவள் கூறுவதை மட்டும் அவன் கேட்க வேண்டும்!, அவனிடமிருந்துப் பதில் எதையும் எதிர்பார்க்க மாட்டாள்! அழுத்தம்,அழுத்தம் மகா அழுத்தம்! ஒரு மன்னிப்போ, குற்ற உணர்ச்சியோ எதுவுமில்லை! எரிச்சலுடன் அவளுக்கு மீண்டும் அழைத்தான்.

"ஹலோ.." - ரோஹினி

"உங்கப்பாக்கிட்ட என்னங்க சொன்னீங்க?"

"எதைப் பத்தி?, என்னக் கேட்குறீங்க நீங்க?"

"நமக்குள்ளப் பிரச்சனைன்னு சொன்னீங்களா?, அவர் எனக்கு ஃபோன் பண்ணி மறுபடியும் எதையும் எங்களாலத் தாங்க முடியாதுன்னு ஃபீல் பண்ணிப் பேசுறார்"

"நீங்க ஃபோனை வைங்க, நான் எங்கப்பாக்கிட்ட பேசிக்கிறேன்"

எரிச்சலுடன் கண் மூடித் திறந்தவன் "அதுக்கு முன்னாடி, உங்கக்கிட்ட இத்தனை வருசமா போராடிட்டு இருக்கிற என் கிட்டப் பேசுங்க, அப்புறமா உங்கப்பாட்டப் பேசலாம்" என்றான்.

"என்ன பேசனும்?"

"எப்படிங்க ஒன்னுமே நடக்காத மாதிரி காஷ்வலா இருக்கீங்க?, அம்னீஷியாவா உங்களுக்கு?, நேத்து நடந்த எதுவும் ஞாபகம் இல்ல?,"

"............"

"சேர்ந்து வாழ யோசிக்கிறதா சொன்னப்போ, என்ன நினைச்சிருந்தீங்க நீங்க?, படத்துல வர்ற மாதிரி நான் உங்கப் பக்கத்துலயே வராம, தூரமா ஒதுங்கி நின்னு ஒரே வீட்ல வாழ்வேன்னா..??, நான் அவ்ளோ கண்ணியமான ஆள் இல்லங்க! என் கண்ணியத்தோட அளவு எப்பவோ முடிஞ்சு போச்சு! பக்கத்துல வந்தாலே விலகி ஓடுறீங்க?, அவமானப்படுத்துறீங்க? இத்தனை நாள் என்னைப் படுத்துனது போதாதா?, இன்னும் என்னல்லாம் சித்ரவதை பண்ணலாம்ன்னு ப்ளான் வைச்சிருக்கீங்க?"

ரோஹினி வழக்கம் போல, அவன் கூறிய மற்ற வசனங்கள் அனைத்தையும் ஒதுக்கி விட்டு கோபக் குரலில் "அப்படி சித்ரவதை பண்றவ கூட, சேர்ந்து வாழனும்னு ஏன் ஆசைப்படுறீங்க?" எனக் கூறி ஃபோனைக் கட் செய்திருந்தாள்.

தலையை அழுந்தக் கோதி அலைபேசியை சோஃபாவின் மீது எறிந்து விட்டு உள்ளே சென்று படுக்கையில் விழுந்தான் ஜீவன்.

"ஜீனு... ஜீனு..." என்று ஆதி அவன் கன்னம் தட்டும் வரை ஆழ்ந்த நித்திரையிலிருந்தவன் அதன் பின் எழுந்து அவன் தேவைகளைக் கவனித்தான்.

அவன் விளையாடத் தொடங்கியதும் வெளியே வந்தவன் டைனிங் டேபிளில் ஸ்கூல் பேக்கைக் கூடக் கழட்டாமல் நகம் கடித்தபடி ஏதோ யோசனையுடன் அமர்ந்திருந்த அதிதியைக் கண்டு அருகே சென்றான்.

"டார்லி..." என்று அவள் தோளைத் தொட்டதும் "ம்" என்று நிமிர்ந்தவளிடம் என்னவென்று விசாரித்தான்.

பதில் கூறாமல் பேக்கைக் கழட்டி மடியில் வைத்தாள் அவள்.

"என்னாச்சுங்க?, ஏன் டல்லா இருக்கீங்க?"

கேட்கலாமா,வேண்டாமா என்றத் தயக்கத்துடன், தலையாட்டியபடி மீண்டும் நகம் கடித்தவள்.. பின் வினவினாள்.

"ஆர் யூ டிவர்ஸ்ட்??" - அதிதி

உள்ளே சுள்ளென்று எழுந்த சூடான உணர்வு. மகள் தங்களது நிலையைக் கண்டு கொண்டதில் எழுந்த பயம் தான் எனப் புரிந்து கொண்டவனுக்கு, தன்னையறியாமல்.. பார்வை, அவள் முகத்தைத் தவிர எங்கெங்கோ பயணித்தது.

ஏற்கனவே சரியில்லாத மனநிலையில் இருந்தவன், பொறுமையாய்ப் பதில் சொல்லும் நிலையில் இல்லை.

தந்தை மறுத்து எதுவும் கூறவில்லையென்றதும், நிமிர்ந்து அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தவள்..

"யுவனி சொன்னது உ..உண்மை தானா ஜீனு??, நீயும்,ரோனியும் டிவர்ஸ் ஆனவங்களா??"

"........."

"அம்மா,அப்பாவும் வேற,வேற வீட்ல இருக்கிறதுக்குப் பேரு தான் டிவர்ஸ்ன்னு சொன்னா அவ. நீ..நீயும்,ரோனியும் வேற வேற வீட்ல தானே இருக்கீங்க??" - இப்போது அவள் கண்ணில் இனம் புரியாதக் கலக்கம் தோன்றியிருந்தது.

தொண்டையைச் செறுமிக் கொண்டு "அ..அப்படியெல்லாம் இல்லக் கண்ணம்மா" என்றவனின் குரலும் கம்மிப் போனது.

"அப்புறம் ஏன் வேற,வேற வீட்ல இருக்கீங்க?, அதுமட்டுமில்லாம, யுவனி அம்மா, அவளோட டாடிக்கு காஃபி,சாப்பாடுன்னு எல்லாம் செஞ்சு கொடுக்கிறாங்க. ரோனி ஒரு தடவைக் கூட உனக்கு அந்த மாதிரிக் கொடுத்து நான் பார்த்ததில்ல."

"....."

"எக்ஸாக்ட்டா எனக்கு சொல்லத் தெரியல.. ஆனா.. அவங்களுக்கும், உங்களுக்கும் ஏதோ வித்தியாசம் இருக்கு ஜீனு.."

"........"

"ஆதி ஸ்கூல் மாறினப்புறம், நாம எல்லாரும் ஒரே வீட்ல இருப்போம்ன்னு நான் சொன்னேன்! ஆனா.. டிவர்ஸ்ட் கப்பிள், அப்படியெல்லாம் சேர்ந்து இருக்க மாட்டாங்கன்னு அவ சொன்னா. உண்மையா டாடி??"

"......"

"இந்த விசயத்தைப் புரிஞ்சுக்க, நான் 5,6 இட்லி சாப்பிடுற பெரிய பொன்னா வளரனுமா?,"

"........"

"நீங்க சொல்லாட்டி, நான் ஆத்தாவுக்குக் 'கால்' பண்ணிக் கேட்பேன். ஐ நீட் ஆன் ஆன்சர் ரைட்நவ்"

குழம்பிய மனநிலையுடன் என்ன பதில் சொல்வதென்ற யோசனையில் அமர்ந்திருந்த ஜீவனுக்கு, கையைக் கட்டிக் கொண்டுத் தன்னையே நோக்கும் மகளின் தோரணை ரொம்பவும் பயமுறுத்தியது.

"உண்மை தான். இல்ல டாடி??, நீங்க 2 பேரும் யுவனி அம்மா-அப்பா மாதிரி கிடையாது. ம்???"

-உதடு துடிக்க வினவியவளின் கண்களில் லேசாய்க் கண்ணீர் திரண்டிருந்தது. மகள் எதற்குமே இதுவரைக் கண்ணீர் விட்டதுக் கிடையாது. அவள் வயதிற்கு, அவள் ரொம்பவும் மெச்யூர்ட் என ஜீவன் அடிக்கடிப் பெருமைப்பட்டுக் கொள்ளும் அதிசய குணாதிசயம் கொண்டவள்! எதையும் எடுத்துச் சொன்னால்.. தன்னால் முடிந்த வரை புரிந்து கொண்டு, அநாவசியப் பிடிவாதம் ஏதுமின்றி வளர்ந்தவள்!

உயிர் உருக.. மகளின் கையைப் பற்றியவன்... அவள் தலையை வருடி "அப்படியெல்லாம் எதுவும் கிடையாதுங்க. நீங்களா எதையும் நினைச்சு யோசிச்சிட்டிருக்காதீங்க"- என்றான்.

அவன் குரலிலிருந்த வருத்தத்தை உணர்ந்து கொண்டாள் போலும்! எச்சில் விழுங்கிக் கண்ணீரை உள்ளே தள்ளியவள் மெல்லத் தலையாட்டியபடி அமர்ந்திருந்த நாற்காலியிலிருந்து இறங்கினாள்.

பின் ஸ்கூல்பேக்கைத் திறந்து, ஸ்நாக்ஸ் பாக்ஸை எடுத்து, அதில் மீதமிருந்த ஆப்பிள் துண்டுகளை எடுத்துக் குப்பையில் கொட்டினாள். பின் டப்பாவைப் பாத்திரம் கழுவுமிடத்தில் போட்டு விட்டு வெளியே வந்து.. க்ளாசெட்டிலிருந்துத் தன் இரவு உடையை எடுத்துக் கொண்டு அறைக்குள் மறைந்தாள்.

மகளின் செய்கைகள் அத்தனையையும் வேடிக்கைப் பார்த்தபடி அமர்ந்திருந்தவனுக்கு, இதயம் வலித்தது. இமைகளை அழுந்த மூடித் திறந்தவன்,கை முஷ்டியை இறுக்கினான். பின் வண்டி சாவியை எடுத்துக் கொண்டு முழு வேகத்தில் கே.கே.நகரை நோக்கிப் பறந்தான்.

அந்த இரவில்.. படபடவெனக் கதவுத் தட்டப்படும் ஓசையில் திடுக்கிட்டுக் கதவைத் திறந்த ரோஹினியை இடித்துத் தள்ளிக் கொண்டு அவள் வீட்டினுள் நுழைந்தான் ஜீவன்.

விறுவிறுவென உள்ளே வந்தவன்.. நேராக அவள் அறைக்குச் சென்றான்.

சுற்றிச் சுற்றிப் பார்த்து எதையோத் தேடியவன், பின் கட்டில் மீது ஏறி.. அலமாரியின் மேலிருந்த பெரிய 'பை' ஒன்றை எடுத்து, அலமாரியைத் திறந்து.. கண்ணில் பட்ட அவள் துணிமணிகள் அத்தனையையும் அள்ளிப் பையில் திணித்தான்.

அவன் செய்யும் செயல்கள் அத்தனையையும் சுருக்கிய புருவங்களுடன் பார்த்துக் கொண்டிருந்த ரோஹினி.. "என்ன செய்றீங்க நீங்க?" என்றாள்.

"உடனே நீ என்னோட கிளம்பு?" - பையின் ஜிப்பை இழுத்து மூடிக் கொண்டிருந்தான் அவன்.

ஒருமையில் அவன் அழைத்ததுமே யோசித்தவள் "குடிச்சிருக்கீங்களா?" என்று வினவினாள்.

நிமிர்ந்து அவளை நோக்கியவன் "ரொம்ப ரொம்பத் தெளிவா இருக்கேன்" எனக் கோபத்துடன் கூறினான்.

"பின்ன ஏன் இப்படிப் பைத்தியம் மாதிரி நடந்துக்கிறீங்க?, முதல்ல அந்த பேக்கைக் கீழ வைங்க"

"முடியாது" என்றவன் அவள் கையைப் பற்றித் தரதரவென இழுத்துக் கொண்டு வாசலை நோக்கி நடந்தான்.

"கையை விடுங்க ஜீவன், எங்கக் கூப்பிட்டுப் போறீங்க?" - விடாமல் கையை அவனிடமிருந்து உறுவியபடித் திமிறிக் கொண்டிருந்தாள் அவள்.

"நீயாவே மாறுவ, என்னோடு வந்து இருப்பன்னு நான் பொறுமையாக் காத்திட்டிருந்ததெல்லாம் போதும்!, எது நடந்துடக்கூடாதுன்னு பயந்துட்டிருந்தேனோ, அதுவே நடந்துடுச்சு.. இனி உன் கிட்ட பொறுமையாப் போறது ரொம்பத் தப்பு"

வெடுக்கெனக் கையை உதறி ஒதுங்கி நின்றவள் "என்ன உளர்றீங்க?" என்றாள்.

பின் தலையை அழுந்தக் கோதியபடி மறுபுறம் திரும்பியவன், மீண்டும் அவள் புறம் திரும்பி "இன்னிக்கு என் பொன்னு என்னைப் பார்த்துக் கேக்குறா, நீங்க டிவர்ஸ்ட்-ஆ

டாடின்னு!, டிவர்ஸ்ன்னா என்னன்னு கேக்குற வயசுல இருக்கிற குழந்தைக்கிட்ட நான் என்னன்னு சொல்லிப் புரிய வைப்பேன். ம்??" என்று வினவினான்.

கோப முகம் மாறி.. விழிகள் விரிய அவனை நோக்கியவளின் தலைத் தானாகக் கவிழ்ந்து விட.. அவன் கண்களைப் பார்க்கும் சக்தியற்றுத் தரையை நோக்கினாள்.

"குழந்தைங்களுக்கு இதெல்லாம் புரிய ஆரம்பிக்கிறதுக்குள்ள நாம ஒன்னு சேர்ந்திடுவோம்ன்னு தான்டி நான் நினைச்சு வைச்சிருந்தேன். ஆனா.. உன்னால.. உன்னால.. எல்லாம் கெட்டது"

"......."

"ஒரே ஒரு முறை தான் என் பொன்னு கண்ணுல சோகத்தைப் பார்த்தேன். அந்தச் சோகம் நிரந்தரமா அவ கண்ணுலத் தேங்கிடக் கூடாதுன்ற காரணத்துக்காக, உயிரா நினைச்ச வேலையைக் கூடத் தூக்கி எறிஞ்சுட்டு வந்த ஆள் நான்!, இன்னிக்கு.. மறுபடியும்.. அதே நிலைக்கு வந்து.. என்ன செய்றதுன்னு தெரியாம முழிச்சிட்டு நிற்கிறேன்"

"......."

"உனக்கு என்னடிப் பிரச்சனை??, நீ அவ்ளோ கெஞ்சிக் கேட்டும்.டிவர்ஸ் பேப்பரைக் காட்டி மிரட்டியும் நான் வேலையை விடச் சம்மதிக்கல. அதனால.... நானா வேலையை விட்டுட்டு உன் பின்னாடி வந்தப்போ.. என் கூட வர உன் ஈகோ இடம் கொடுக்கல??, அதான??"

"........"

"நான் பண்ணினது தப்புத் தான்! நீ கேட்டப்பவே வேலையை விட்டுட்டு உன் பின்னாடி வந்திருக்கனும்!, அந்த ஒரு தப்புக்காக.. 5 வருஷமா உன் பின்னாடி நாயா அலைஞ்சு, உன் ஈகோவுக்குத் தீனி போட்டுட்டேன்! இன்னும்.. இன்னும்.. என்ன தான் டி எதிர்பார்க்குற??

"......."

"நீ மாற மாட்டடி. லைஃப் லாங் என்னை இப்படியே அழ வைச்சுப் பார்த்தாலொழிய உன் கோபமோ,ஈகோவோ மாறாது!, ஆனா.. உன் பிடிவாதத்துக்கு என் குழந்தைங்க ஏன் டி பலியாகனும்??, நிச்சயம் நான் அதுக்கு அனுமதிக்க மாட்டேன்"

"......."

"போதும்!, இவ்ளோ நாளா.. நான் நல்லவனா இருந்தது போதும்!, இப்போவே.. நீ என்னோட என் வீட்டுக்கு வர்ற. எனக்குப் பொண்டாட்டியா இருக்கிறயோ இல்லையோ.. என் குழந்தைங்களுக்கு அம்மாவா.. நான் உயிரோட இருக்கிற வரைக்கும் நீ என்னோட வாழ்ந்து தான் ஆகனும்.. நான் போய்ச் சேர்ந்தப்புறம், உன் இஷ்டப்படி என்னனாலும் பண்ணிக்கோ"

-பொறுமைக்குப் பெயர் போன, பூமாதேவியே அவ்வப்போதுத் தன் கோபத்தை பூகம்பத்தின் மூலம் வெளிக்காட்டும் போது, ஜீவன் மட்டும் எப்படி விதிவிலக்காய் இருப்பான்?

மகளின் கேள்விகள் ஒவ்வொன்றும் மூளைக்குள் சில்வண்டாய்ச் சுற்றிய வண்ணமிருக்க, ஆத்திரம் தலைக்கேறிப் போய்.. நிதானமின்றி.. அவள் முகம் பாராமல்.. மனதில் தோன்றிய அனைத்தையும் கொட்டித் தீர்த்து விட்டான்.

மூச்சு வாங்க நின்றவன், அவள் முகத்தை நிமிர்ந்து நோக்கும் போது, உதட்டை மடக்கிக் கண்களில் சேரத் தொடங்கியக் கண்ணீரை அடக்கிய வண்ணம் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

மகளின் அழுகையையேப் பொறுத்துக் கொள்ள முடியாதவன், தன் மனைவியின் அழுகையை மட்டும் ஏற்றுக் கொள்வானா?

சற்றும் யோசிக்காமல், அவள் முகத்தைப் பற்றியிழுத்துத் தன் மார்பில் அழுத்தியிருந்தான்.

"சாரிங்க, ரொம்ப சாரி!, அழாதீங்க! ப்ளீஸ்... அழாதீங்க" - அவன் விடாது கூறியதைக் காதில் வாங்காமல், அவன் மார்பில் முகத்தைத் தேய்த்துப் பலமாய் அழுது கொண்டிருந்தாள் அவள்.

"அதிதி அப்படிக் கேட்டதும் எனக்கு என்ன பதில் சொல்றதுன்னு தெரியலங்க! ஏற்கனவே கோபத்துல இருந்தேனா.. அதான்.. ரொம்ப ஆத்திரப்பட்டுட்டேன்!, சாரிங்க.." - விடாமல் மன்னிப்புக் கேட்டவனிடம்... "நான்... நான் தான் சாரி கேட்கனும், என்னால தான் எல்லாஆஆஆம்" என்றவள் மேலும் தேம்பி அழ.. அவள் முகத்தை நிமிர்த்திக் காண முயன்றான்.

அவன் செய்கையைத் தடுத்து, அவன் மார்பில் தன் முகத்தை அழுத்தமாய்ப் பதித்திருந்தவள் "ம்ஹ்ம், நிமிர மாட்டேன்! அழுதா என் முகம் அஷ்டகோணலா

இருக்கும். அப்புறம் வாழ்நாள் முழுக்கக் கேலி பண்ணுவீங்க" எனக் கூறிக் கொண்டே அழுதாள்.

அந்தச் சூழ்நிலையில் அவள் அதைக் கூறியதும் சிரிப்பு வர "ஹாஹாஹாஹா"வெனச் சத்தமாய்ச் சிரித்தான் அவன்.

"5 நிமிஷம் நான் அழுதுக்கிறேன் ப்ளீஸ்..." - என்றவள் தன் இருகைகளாலும் அவனைக் கட்டிக் கொண்டுத் தேம்பித் தேம்பி இத்தனை நாளுக்கும் சேர்த்து அழுதுத் தீர்த்தாள்.

அவள் முதுகைத் தடவிச் சமாதானப்படுத்தியபடி அமைதியாய் நின்றிருந்தவன் "போதும்-ங்க ப்ளீஸ்! நீங்க இப்படி அழறதைப் பார்க்கவா நான் அவ்ளோ பேசுனேன்?" என்றான்.

ஒருவழியாகச் சமாதானமடைந்து நிமிர்ந்தவள், அவனிடம் முகத்தைக் காட்டாமலே வாஷ்ரூமுக்கு ஓடினாள்.

"எதுக்குங்க ஓடுறீங்க?"-என்றபடிப் பின்னாலேயே வந்தவன் வாஷ்ரூம் வாசலில் நின்றான்.

"ரெண்டு நிமிஷம் இருங்க. முகம் கழுவிட்டு வர்றேன். நான் இதுக்கு முன்னாடி இப்படியெல்லாம் யார் முன்னாடியும் அழுததில்லை. எனக்குக் கொஞ்சம் ஷேம்-ஆ இருக்கு"

"நான் இந்த ஃபேஸைப் பார்க்கலாம்ங்க. தப்பில்ல"

"ம்ஹும். நீங்க தான் முக்கியமாப் பார்க்கக் கூடாது. அப்புறம் ரொம்பக் கேலி பேசுவீங்க"

"ஹாஹாஹா. என்னை நல்லாப் புரிஞ்சு வைச்சிருக்கீங்க"

"பின்ன, நான் யாரு!"-முகத்தைத் துடைத்தபடி வெளியே வந்தவளைக் கண்டுச் சிரித்து கையிலிருந்த டவலைப் பிடுங்கியவன் "இப்போ கட்டிக்கலாம்லங்க?" என்று வினவினான்.

புன்னகைத்தபடியே அவள் மார்பில் சாய்ந்தவளை இறுக அணைத்துக் கொண்டான் அவன். பிரிந்திருந்த அத்தனை நாட்களுக்கும் சேர்த்து!

"எதுக்குங்க நேத்து நான் கிஸ் பண்ண வந்தப்போ தள்ளி விட்டீங்க?" - ஜீவன்

"விட்டு வாசல் என்ன உங்க பெட்-ரூமா?, அக்கம் பக்கத்துல இருக்கிறவங்க யாரும் மனுஷனாத் தெரியல உங்களுக்கு?,"

"ஓ!, அதனால தான் விலகிப் போனீங்களா?, நான் என்னென்னவோ நினைச்சுப் பயந்துட்டேங்க"

"நீங்க ஒரு மக்கு ஆ..பிசர்ன்னு ப்ரூவ் பண்ணிட்டே இருக்கீங்க"

"நான் இப்போ ஆ..பிசர் இல்லங்க. கா..பே ஓனர்!"

"அதுசரி"

"அப்டின்னா... இப்போ கிஸ் பண்ணாத் தள்ளி விட மாட்டீங்களே!"

"மாட்டேன்" என்றவளை அவன் பார்த்த பார்வை.. உடல் முழுதையும் சிவக்கச் செய்ய... மெல்லத் தலை குனிந்தவளைப் பற்றி முகம் முழுக்க முத்தமிட்டான் அவன்.

**அ**டுத்த ஒரு மணி நேரத்தில் இருவரும் ஜீவன் வீட்டில் அதிதியின் முன்பு அமர்ந்திருந்தனர். கையைக் கட்டியபடி ரோஹினி அதிதியை முறைக்க, அவளோ 'இன்னா நைனா இது' என்கிற ரீதியில் ஜீவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"டார்லியை ரொம்பத் திட்டாதீங்க ப்ளீஸ்" - ஜீவன்

"ஏய், என்னைப் பாருடி. அங்க என்ன பார்வை?"-ரோஹினி

திருதிருவென விழித்தபடித் தலை குனிந்தாள் அதிதி.

"அன்னிக்கு வயசுக்கு வர்றதுன்னா என்னம்மான்னு நீ கேள்வி கேட்டப்போவே நான் என்ன சொன்னேன்?, ஸ்கூல்ல... அவ இதச் சொன்னா, அவன் இதச் சொன்னான்னு லூசு மாதிரி வீட்ல வந்து கேள்வி கேட்கக்கூடாதுன்னு சொன்னேன்ல?"

"பிள்ளைங்களுக்கு வர்ற டௌட்ஸைக் க்ளியர் பண்றது நம்ம கடமைங்க ரோஹினி"

"நீங்கக் கொஞ்சம் சும்மாயிருக்கீங்களா?" - ரோஹினி

"ஜீனுவைத் திட்டாத ரோனி" - அதிதி

"அவரை நான் ஒன்னும் சொல்லலடி, ஒன்னும் சொல்லல" -என்றவள் பின்பு மகளின் அருகே சென்றமர்ந்து அவளை மடியில் இருத்திக் கொண்டு... அவள் தலையை வருடியபடி.. "அம்மா அன்னிக்கு சொன்னேன்ல கண்ணே?, ஆதி ஸ்கூலும், அம்மா

இன்ஸ்டிடியூட்டும் பக்கமா இருக்கிறதால தான் நாங்க கே.கே.நகர்ல இருக்கோம்! அதிதி பாப்பா இவ்ளோ ஃபீல் பண்றது அம்மாக்கு இன்னிக்குத் தான தெரியும்? அதனால இனி அம்மாவும்,ஆதியும் இங்கேயே பாப்பா கூடவே இருக்கப் போறோம். ஓகே???" என்று வினவினாள்.

முகம் மலர்ந்து.. கண்களை விரித்து.. நம்ப முடியாமல் அவளை நோக்கியவள்.. "நிஜமா???" என்றபடித் தலையாட்ட.. ரோஹினி ஆம் எனக் கூறியதும்.. அவள் மடியிலிருந்து இறங்கி.. ஓடிச் சென்று தந்தையின் மார்பில் புகுந்தவள்.. அவனைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

எதற்காக அந்த அழுகையென்பதைப் புரிந்து கொண்ட ஜீவனுக்குக் கண்களில் நீர் கோர்த்து விட்டது. மகளின் தலையை வருடியபடி.. அவள் தோளில் முகத்தைச் சாய்த்தவனின் தலையில் நங்கெனக் குட்டினாள் ரோஹினி.

அவளைச் சமாதானப்படுத்தாமல் என்ன அழுகை இது?- என்பது போல் அவள் செய்கையாலே மிரட்ட.. மூக்கை உறிஞ்சியபடி நிமிர்ந்து அமர்ந்தான்.

"டார்லி.... அதான் யுவனி மம்மி-டாடி மாதிரி உங்க அம்மா-அப்பாவும் ஒரே வீட்ல இருக்கப் போறோமே!, அப்புறம் ஏன் அழறீங்க?"

அழுது கொண்டே ஹாஹாஹாவெனச் சந்தோசத்தில் அவள் சிரிக்கும் சத்தம் கேட்டது! பின் அவன் மார்பிலிருந்து விலகியவள், நேரே வாஷ்பேசனுக்கு ஓடினாள். அம்மாவும்,பெண்ணும் ஒரே ரகம் போலும்!

ரோஹினியைப் பார்த்து நமுட்டுச் சிரிப்பை உதிர்த்தவனைக் கண்டு கொள்ளாமல், அவள் நேரே அடுப்படிக்குச் சென்றாள்.

முகம் கழுவிக் கொண்டு வந்த அதிதிக்கு, ஜீவன் வீட்டுக் கிட்சனில் அன்னை நின்றிருப்பதுக் கூடச் சந்தோசத்தைக் கொடுத்தது போலும்!

"ரோனி..." என்றபடி ஓடிச் சென்று மேடை மீதேறி அமர்ந்து கொண்டாள்.

"ரோனி, நீ சமைக்கப் போறியா??" - அதிதி

"ம்ம், ஆமாம்"

"என்னது?, இன்ஸ்டண்ட் இடியாப்பமா??"

ஹால் சோஃபாவில் அமர்ந்திருந்த ஜீவன் பக்கெனச் சிரிக்கும் சத்தம் கேட்டது.

"நக்கலா?" என்றுக் குரல் கொடுத்தவள் "தோசை ஊத்தலாம்ன்னா, ஃப்ரிட்ஜல மாவு இல்லையேடி!, உங்க சமையல்காரம்மா அரைச்சு வைக்கல போலயே!, கிச்சடி பண்ணட்டுமா?" என்றாள்.

அதிதி "ம்ம்" எனத் தலையாட்டும் போது.. அவ்வளவு நேரமாக உள் அறையில் உறங்கிப் போயிருந்த ஆதி "ரோனி.." என்றபடி எழுந்து வந்தான்.

"உன்னைக் கவனிச்சிட்டு இருந்ததுல, என் மகனை மறந்துட்டேனே, நீ வா டா என் கண்ணுக்குட்டி"-என்றபடி அவனைத் தூக்கிக் கொஞ்சியவள் "குட்டிக் கண்ணனுக்கு என்ன வேணும்?, கிச்சடி ஓகே??" என்று வினவ.. அவனும் தலையாட்டிக் கொண்டிருந்தான்.

அதன் பின் ஏதேதோ பேசியபடி சமைத்துக் கொண்டிருந்த மூவரையும் கண்ட ஜீவனுக்கு.. எல்லையில்லாத நிம்மதி ஏற்பட்டது! பெரு மூச்சை வெளியிட்டபடி அமர்ந்திருந்த சோஃபாவிலேயேத் தலையைச் சாய்த்தவன், சற்று நேரத்தில் உறங்கிப் போனான்.

மறுபடி அவன் கண் விழிக்கையில்.. மணி இரவு பதினொன்றைக் கடந்திருந்தது.

வேகமாக எழுந்து சென்று படுக்கையறையை நோக்கினான். அங்கே ஆதியும்,அதிதியும் உறங்கிப் போயிருக்க.. ரோஹினி மடிக்கணிணியுடன் அமர்ந்திருந்தாள்.

அவனைக் கண்டதும் எழுந்து வந்தவள் "நல்லா தூங்கிட்டிருந்தீங்க, அதான் எழுப்பல. சாப்பிடுறீங்களா?, கிச்சடியைச் சூடு பண்றேன்" என்றபடி அவனைக் கடந்து சென்றாள்.

வெகு இயல்பாய்ப் பொருந்திப் போனாள்! இத்தனை வருடப் பிரிவையும் நொடியில் உடைத்து எறிந்து விட்டு! இந்த நிலைக்காக வெகுவாய் ஏங்கிப் போயிருந்தவன்.. அதை முழுதாக அனுபவித்தபடி அவள் பின்னே சென்றான்.

அவள் பரிமாறிய கிச்சடியையும்,தேங்காய்ச் சட்னியையும் திருப்தியாய் உண்டு.. மீண்டும் சோஃபாவுக்கு வந்தமர்ந்தவனிடம் "என்ன?, மறுபடியும் இங்கேயே தூங்கப் போறீங்களா?" என்று வினவினாள்.

"அதான் பெட் ஃபுல்லா நீங்களும்,உங்க பசங்களுமே ஆக்குப்பை பண்ணிக்கிட்டீங்களே, நான் இப்படியே இந்த சோஃபா ஓரமா.. படுத்துட்டுப் போறேன்" -ஜீவன்

"ஹாஹாஹா"

"சிரிக்காதீங்க. அப்புறம் என்னென்னவோ தோணும்"

"சரி. அப்போ எனக்கும் இந்த சோ:பாலயேக் கொஞ்சம் இடம் கொடுங்க. நானும் இங்கேயே உங்களோடேயேப் படுத்துக்கிறேன்" - என்றபடி வந்து அவனை இடித்துக் கொண்டு அமர்ந்தவளைத் தடுத்துத் தன் கைகளில் அள்ளிக் கொண்டவன் "இந்த ஒரு வார்த்தைக்குத் தான் வெயிட்டிங்" எனக் கூறி எதிரேயிருந்த அறைக்குள் நுழைந்தான்.

அந்த அறை முழுதும் ரோஹினியின் பெயிண்டிங்-களினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதை வியந்தபடி கண்ட ரோஹினி.. "வாவ்வ்வ். இந்த வீட்டுக்குள்ளே இப்படியொரு ரூம்-ஆ?"- என்றாள்.

"பின்ன. என்னைக்காவது நீங்க திரும்பி வந்து, நான் எங்க படுக்கட்டும்,கிட்சன்லயா இல்ல. வீட்டு வாசல்லயான்னு சண்டை போட்டா?, அதனால தான்!"

"ப்ச். கில்லாடி தான் நீங்க"

அந்தப் படுக்கையறையின் ஜன்னலருகே நின்று உரையாடிக் கொண்டிருந்தனர் இருவரும். உள்ளே நுழையும் வரை சாதாரணமாகப் பேசிக் கொண்டிருந்த இருவரும், ஏனோ அதன் பின்பு வார்த்தைகளற்ற மௌனத்துடன் நின்றிருந்தனர்.

திடீரென "மச்சுக்குப் போகலாமா?" என்று வினவினாள் ரோஹினி.

திருமண இரவை நினைவுபடுத்துகிறாள் போலும் என்றெண்ணிய ஜீவன் "பேட் ஐடியா" என்றான்.

"ஏன்? ஏன்?"

"இது என்ன நெல்லையாங்க?, வயக்காட்டுக்கு மத்தில ஜில் காத்துல நிற்க?, இந்த ஏசியை விட்டு வெளியே போனா.. வெறும் வெப்பக் காத்தைத் தான் அனுபவிக்கனும்"

"ஆமாமா, கரெக்ட்!"

"மோர் ஓவர், அங்க மாதிரியெல்லாம், மொட்டைமாடில வைச்சுக் கட்டிப்பிடிக்க முடியாது! பிட் படம் ஓட்டுறோமோன்னு, அவனவன் செல்:போனைத் தூக்கிடுவான்"

"ச்சிச்ச்சிச்சி"

"உண்மை தான்ங்க"

"சரி அப்போ என்ன பண்றது?"

"என்ன பண்ணனும்?"

"ஜீவன்ன்ன்ன்ன்" - பல்லைக் கடித்தாள் அவள்.

"சொல்லுங்க, என்ன பண்ணனும்?, சீரியஸாத் தான் கேட்குறேன்! உடனே எல்லாமே வேணும்ன்னு நான் நினைக்கலங்க!, எனக்கு உங்கப் பக்கத்துல படுத்துக் கண்ணை மூடித் தூங்குனாலே போதும்! இப்போதைக்கு!"

"......" - விரல்களை நோக்கியபடி நின்றிருந்தவளின் கையைப் பற்றி அருகிலிழுத்தவன் தன்னோடு அணைத்துக் கொண்டான்.

கண்ணை மூடி அவன் மார்பில் சாய்ந்திருந்தவளும், அவனுக்கு நிகரான நிம்மதியை உணர்ந்திருப்பாள் போலும்! தான் செய்த முட்டாள்த்தனங்கள் அத்தனையையும்.. பல சமயம் பொறுமையாய் எதிர் கொண்டு.. சில சமயம் கோபப்பட்டு.. சில சமயம் செய்வதறியாதுத் தவித்து.. இத்தனை வருடங்களை அவளுக்காகவேத் தனிமையில் கடத்தியவனை.. என்ன தான் செய்ய! இனி ஒரு போதும் இது போன்ற பிரிவைக் கொடுத்து.. அவன் வருந்தும்படிச் செய்து விடக் கூடாதென மானசீகமாகச் சத்தியம் செய்து கொண்டாள்.

**ம**றுநாள் மாலை அதிதி,ஆதி,ரோஹினி,ஜீவன் நால்வரும் பெசண்ட் நகர் பீச், மணலில் அமர்ந்திருந்தனர். கடலில் குளித்தேத் தீர வேண்டுமென ரோஹினியுடன் சண்டையிட்டுக் கொண்டிருந்த ஆதியையும்,அதிதியையும் கண்டுச் சிரித்தபடி.. கால் நீட்டி அமர்ந்திருந்தான் ஜீவன்.

"கடல்ல குளிக்கக் கூடாதுன்னா எதுக்கும்மா எங்களை பீச்-க்குக் கூட்டிட்டு வந்த?, ப்ளீஸ்.. ரோனி.. ப்ளீஸ்.." என்று கெஞ்சிய அதிதியிடம் இருபுறமும் தலையை ஆட்டியபடி "நோ.. கூடாதுன்னா கூடாது" என்றுப் பிடிவாதமாய்க் கூறினாள் ரோஹினி.

மூவரையும் கண்டபடிச் சற்று நேரம் அமைதியாய் இருந்தவன் பின் குழந்தைகள் இருவரையும் இரு கைகளாலும் தூக்கிக் கொண்டு ஓடிக் கடலில் டொம்மென விழுந்தான்.

குழந்தைகள் இருவரும் "ஹேஏஏஏஏ" என ஆர்ப்பரிக்க.... "பார்த்து.... பார்த்து..." என்று பதறி எழுந்த ரோஹினித் தண்ணீரில் காலைக் கூட நனைக்காமல் தள்ளியே நின்றிருந்தாள்.

முழுதாக நனைந்து விட்டத் திருப்தியுடன் முகத்திலிருந்த நீரைத் துடைத்தபடிக் குதித்துக் கொண்டிருந்த இருவரையும் கண்டு விட்டுத் திரும்பி ரோஹினியை நோக்கினான் ஜீவன்.

"எ..என்ன இங்க பார்க்குறீங்க??" - தடுமாறியபடி வினவியவளைக் கண்டுச் சிரித்தபடி எழுந்தவன் அவளை நோக்கி நடந்து வர... அவனது நோக்கத்தைப் புரிந்து கொண்டவள்.. "நோ... நோ.. நோ ஜீவன் ப்ளீஸ்..." எனக் கூறிக் கொண்டே மெல்ல ஓடத் தொடங்கினாள்.

அவன், அவள் பின்னேயே வரவும், வேகத்தை அதிகப்படுத்தியவள்.. நொடிக்கும் குறைவான நேரத்தில்.. அவனிடம் தோற்றிருந்தாள்! போலீஸ்காரனை ஓட்டத்தில் ஜெயிக்க முடியுமா???

அவள் வயிற்றைப் பற்றித் தூக்கி இழுத்து வந்து கொண்டிருந்தவனைக் கண்டுக் குழந்தைகள் கைத் தட்டிச் சிரிக்க.. "ப்ளீஸ் ஜீவன், ப்ளீஸ்,ப்ளீஸ்.. வேண்டாம்.. வேண்டாம்" எனத் துள்ளியவளைத் தூக்கிக் கொண்டு அவளுடனே கடல் நீரில் அமிழ்ந்தான் அவன்.

நீரில் மூழ்கி மூச்சு வாங்க நிமிர்ந்தவள்.. தன்னைச் சிரிப்புடன் நோக்கியவனின் தோளில் அடித்துச் சண்டையிட.... அவள் இடையை இறுகப் பற்றி அருகில் இழுத்தவன்.. அவள் இதழில் பதிந்திருந்த உப்பு நீரின் சுவையை ருசிக்கத் தொடங்கியிருந்தான்.

**-நேரம் காலை 6.30. சூரியக் கதிர்கள் ஜன்னல் வழியே ஊடுருவி என் அறையை வெளிச்சமாக்கிக் கொண்டிருந்தது. இரவு பெய்த மழையின் புண்ணியத்தால் தோட்டத்து மணலில் ஈரம் படிந்திருந்தது! நான் இதையெல்லாம் கவனிக்கும் மனநிலையில் இல்லை! இன்னும் என் விரல்கள் ஜீவன் ஏகலைவனின் ஃபேஸ்புக் பக்கத்தையே ஸ்க்ரால் செய்து கொண்டிருந்தது. ச்ச! வாட் அ கபிள்! வாட் அ லவ் ஸ்டோரி!! அவர்களிருவரும் ஒன்று சேர்ந்த பிறகு, அவரிடமிருந்து ஒரு போஸ்ட் கூட இல்லை! மனுஷன் ஃபீல் பண்ணினாத் தான் மார்க் கிட்ட வருவார் போல! இப்போ எப்படியிருக்காங்கன்னு தெரிஞ்சுக்கனுமே!**

**என் சி.ஐடி மூளையை வைத்து அவரது ஃப்ரண்ட்ஸ் லிஸ்ட்டில் ரோஹினியின் பெயரைத் தேடிக் கண்டுப்பிடித்து ரோஹினி ஜீவானந்தம் என்கிற ப்ரொஃபைலை ஓபன் செய்தேன்!**

ஆண்ட்டியும்,அங்கிளும் குடும்பமாய்ப் பறந்த வண்ணமிருக்கிறார்கள் போலும்! லண்டன் ட்ரிப் என்றிருந்த அவளது கவர் ஃபோட்டோவில்.. ட்ரைனில் அமர்ந்திருந்தனர் நால்வரும்!

ரோஹினியின் தோளில் ஜீவன் தலைசாய்த்திருக்க.. பின்னிருந்து அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டு ஆதியும்,அவள் மடியில் சாய்ந்தபடி அதிதியும் போஸ் கொடுத்திருந்தனர்! பார்க்கவே ரம்யமா இருக்கு! சூப்பர்!!! - என்றெண்ணிக் கொண்டு மடிக்கணிணியை மூடி வைத்தேன்!

"கண்கட்டி வித்தைக் காட்டி என்னை எப்போக் கட்டிப் போட்ட.." - பாடியபடியேப் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு உறங்கத் தொடங்கினேன்!

****************************** முற்றும் ******************************